Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily


மழைக்கான சாத்தியம் உண்டு.
27°C 26°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 328 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 04, திங்கள் 21.10.2013

### *கனகபுரம், முழங்காவில், தேராவில்*

# துயிலும் இல்லங்களில் முகாம் அமைக்க முயற்சி

### *படையினர் குவிப்பு; சுற்றிவர முட்கம்பி வேலி*

கிளிநொச்சி, ஒக்ரோபர் 21
கிளிநொச்சி கனகபுரம், முழங்காவில் மற்றும் முல்லைத்தீவு தேராவில் ஆகிய பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் திடீரென படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.
அத்துடன் நேற்றுமுன்தினம் பிற்பகலில் இருந்து குறித்த துயிலும் இல்லங்களைச் சுற்றி முட்கம்பிவேலிபோடப்பட்டு அங்கு படைமுகாம்களை அமைக்கும் நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையில் இந்த மாத அமர்வு கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற போது கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆயினும் குறித்த தீர்மானத்தின்படி சிரமதானம் செய்யச் சென்ற போது மாவீரர் துயிலும் இல்லத்தைச் சூழ பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டிருந்ததால் பெரும் பதற்றநிலை தோன்றியிருந்தது. இதனால் குறித்த சிரமதான முயற்சி கைவிடப்பட்டிருந்தது. இதனையடுத்தே நேற்று முன்தினம் முதல் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும்


கோப்புப்படம்

இல்லங்களில் கனரக வாகனங்கள் மூலம் நூற்றுக் கணக்கான படையினர் கொண்டுவரப்பட்டு குவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கனகபுரம், முழங்காவில், தேராவில் ஆகிய மூன்று மாவீரர் துயிலும் இல்லங்களைச் சுற்றிவர முட்கம்பியால் உடனடியாகவே பாதுகாப்பு வேலி படையினர் அமைத்துள்ளனர். கனரக வாகனங்கள் மூலம் மாவீரர் துயிலும் இல்லப் பகுதிகளை துப்புரவு செய்யும் படையினர் அங்கு தற்காலிக கூடாரங்களை அமைத்துள்ளனர். படை தளங்களை உருவாக்கும் செயற்பாட்டில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிந்ததாக பொது மக்கள் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணத்தில் உள்ள கொடிகாமம், கோப்பாய், எல்லங்குளம் போன்ற மாவீரர் துயிலும் இல்லங்களும் படைத் தளங்கள் ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
கிளிநொச்சி, முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம் 1996 இலும் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் 1990 இலும் விசுவமடு, தேராவில் மாவீரர் துயிலும் இல்லம் 1997 இலும் விடுதலைப் புலிகளால் அமைக்

21

## பந்தாடியது பஸ் யாழ்.நகரில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஒக்.21
யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியை அண்மித்து நேற்று இடம்பெற்ற பஸ் - சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.
நீதிமன்றக் கட்டடத் தொகுதியை அண்மித்து பிரதான வீதியில் முதலாம் குறுக்குத் தெரு சந்தியில் நேற்று முற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.
இதில் சங்கரத்தை, துணவியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின்

21

### *பொதுநலவாய மாநாட்டுக்கு வரும்*

## அரச தலைவர்கள் 50 பேர் வடக்குக்கும் வருகை தருவர்

யாழ்ப்பாணம், ஒக்.21
பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்ற வரும் உயர்மட்டத் தலைவர்கள் 50 பேர் வடக்குக்கும் இருநாள் பயணமாக அடுத்த மாதம் வருகை தரவுள்ளனர். பிரிட்டன் பிரதமரது வருகைக்கும் இவர்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும், இவர்கள் தனித்தே தமது பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் அரச தலைவர்களின் உயர் மட்ட மாநாடு, வாணிப மாநாடு மற்றும் சிவில் சமூக மாநாடு என்பன இடம்பெறவுள்ளன.
இதில் சிவில் சமூக மாநாட்டில் பங்குபெற வருகின்ற வெளிநாட்டுத் தலைவர்கள் 50 பேரே யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் வருகை தரவுள்ளனர். இவர்களுக்குரிய பயண ஒழுங்குகளை முற்றுமுழுதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.
இந்தத் உயர்மட்ட வெளிநாட்டு தலைவர்கள் 50 பேரினதும் பயண ஒழுங்குகளையும் அரசே தீர்மானித்துள்ளது.
அதனடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி காலை இரணைமடு விமான நிலையத்தில் வந்திறங்கும் இந்தக் குழுவினரை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் வரவேற்பார். கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் அவர்களுக்கு விளக்கமளிக்கப்படும்.

21

## சீரற்ற காலநிலை 2000 பேர் பாதிப்பு

### *ஒருவர் சாவு*

கொழும்பு, ஒக்.21
நாட்டில் நிலவிவரும் சீரற்ற கால நிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார். 2 ஆயிரத்து 32 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். காலி, களுத்துறை, கொழும்பு, அம்பாறை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் 425 குடும் பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 32 பேரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 64 வீடுகள் முழுமையாகவும் 389 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.
கடந்த வியாழக்கிழமை தொடக்கம் நேற்றுவரையான நான்கு நாள்களிலேயே இந்தப் பாதிப்பு ஏற் பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.
பாதிக்கப்பட்ட 37 குடும்பங்களைச் சேர்ந்த 164 பேர் பாதுகாப்பான இடங்களில்தங்கவைக்

21

## தெற்கில் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியா?

### *விரைவில் பதில் என்கிறார் மாவை.*

கொழும்பு, ஒக்.21
மார்ச் மாத இறுதியில் நடைபெறவுள்ள மேல்மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களமிறங்குமா அல்லது இல்லையா என்ற வாதம் கொழும்பு அரசியல் களத்தில் பெரிதாகப் பேசப்படும் விடயமாக உருவெடுத்து வருகின்றது.
இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன வென்பதை அறிய தென்னிலங்கை மற்றும் வடக்கு வாழ் தமிழ் மக்கள் பெரிதும் ஆவலாக இருக்கின்றனர்.
கொழும்பு வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் வாழும் தமிழர்கள் இது தொடர்பில் அதிக அக்கறையைக் கொண்டுள்ளதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.
இந்நிலையில், மேல்மாகாண சபைத் தேர்தல் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்பது குறித்து அதன் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்ததாவது:
" இது தொடர்பில் தற்போது உடனடிப் பதிலை வழங்க முடியாது. மேல்மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னரே தேர்தலில் களமிறங்குவோமா, இல்லையா என்பது தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிப்போம். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் இது தொடர்பில் நாம் பேச்சு நடத்தவுள்ளோம் " - என்றார்.
(ங-சி)

### *மனித உரிமை மீறல்கள் தொடர்பில்*

## பொதுநலவாயத் தலைவர்களிடம் நேரில் முறையிட ஐ.தே.க. முடிவு

கொழும்பு, ஒக்.21
இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமைமீறல் விவகாரங்களை பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.
அரசு மேற்கொண்டுவரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளால் அதிருப்தியடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, பொதுநலவாய மாநாட்டைப் புறக் கணிக்கத் தீர்மானித்துள்ளதுடன், இது

21


## தீர்வை வலியுறுத்தி 31இல் கொழும்பில் போராட்டம்

கொழும்பு, ஒக்.21
இனப்பிரச்சினை, கல்வித் துறைப் பிரச்சினை, தொழிற் சங்கப் பிரச்சினை என்பவற்றுக்கு அரசு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என வலியுறுத்தி ஐக்கியத்துக்கான சக்தி (சமகி) என்ற அமைப்பு கொழும்பில் எதிர்வரும் 31 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.
பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக்கட்சி, நவசிஹல உறுமய, தேசிய ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிஸக் கட்சி,

21

## வெடித்தது ஆட்லறி எறிகணை சிலாபத்தில் ஒருவர் காயம்

### பொலிஸார் விசாரணை



கொழும்பு, ஒக்.21
சிலாபம், மாதம்பே பகுதியில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவமொன்றில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ஆட்லறிகளுக்குப் பயன்படுத்தப்படும் குண்டுகளும் அவ்விடத்தில்

21

உதயன்
21/10/2013

# ரவி கருணாநாயக்கவுக்கும் வலையை விரிக்கிறது அரசு

## முதலமைச்சர் ஆக்குவதாக காட்டுகிறது ஆசை

கொழும்பு, ஒக்ரோபர் 21

மேல்மாகாண சபைத் தேர்தலைக் குறிவைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய புள்ளிகளுள் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தனது பக்கம் வளைத்து போடுவதற்கான முயற்சியில் அரசு இறங்கியுள்ளது எனத் தெரிய வருகிறது.

இது சம்பந்தமாக பேரம் பேசும் படலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், இதற்காக மேல்மாகாண முதல்வர் வேட்பாளர்' பதவி முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அந்நிய செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்டுள்ள சட்டச்சிக் கல் உட்பட முக்கிய சில விடயங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எதிராக குற்றச்சாட்டுகள் இருப்பதால் இவற்றை சமாளிக்கும் நோக்கிலும் அவர் அரசு பக்கம் தாவுவது ஏறக்குறைய உறுதியாகிவிட்டது என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உட்கட்சிப்பூசலும்ரவி எம்.பியின் கட்சி தாவலுக்கு வலுச்சேர்க்கும் காரணியாக அமைந்துள்ளது என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

தேர்தல் காலங்களில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவுக்குள் இவ்வாறான முரண்பாடுகள் ஏற்படும் என்பதன் காரணமாகவே அக்கட்சியுடன் இணைந்து போட்டியிடும் ஜனநாயக மக்கள் முன்னணி இம்முறை தனித்துக் களமிறங்க முடிவெடுத்துள்ளது.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய புள்ளியாகத் திகழ்ந்த தயாசிறி ஜயசேகரவை வடமேல் மாகாண சபைத் தேர்தலின்போதுதமது பக்கம் வளைத்துப் போட்டு அரசு அதில் பெரும் வெற்றியும் கண்டது.

குருநாகல் மாவட்டத்தில் தயாசிறி அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று மாகாணசபைத் தேர்தலில் சாதனை படைத்தார். தயாசிறியின் 'பல்டி'யால் ஐ.தே.கவின் குருநாகல் மாவட்ட வாக்கு வங்கியில் பெரும் சரிவு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, மேல் மாகாணத்திலும் அரசு இதே பாணியைக் கையாள்வதற்கு உத்தேசித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவினுடாக கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.வின் பக்கமுள்ள முஸ்லிம் வாக்குகளை முறியடிப்பதும் அரசின் வியூகங்களுள் ஒன்றாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. எது எப்படியிருந்தபோதிலும் இது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை.

**கம்பஹாவில் பஸிலின் மனைவி**

அதேவேளை, மேல் மாகாண சபைத் தேர்தலில் இம்முறை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸிலின் ராஜபக்ஷவின் பாரியார் புஷ்பா ராஜபக்ஷவும் களமிறங்கவுள்ளார். அவர் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடவுள் ளார் என்று உறுதியான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் அதிகூடிய விரும்பு வாக்குகளை பெறும் சாத்தியம் இருந்தாலும் மேல் மாகாண முதல்வர் பதவி அவருக்குக் கிடைக்காது என்பது உறுதி. போதிய அரசியல் அனுபவ மின்மை, குடும்பத்தின் முக்கியஸ்தர்கள் அரசில் முக்கிய பதவிகளில் இருக்கின்றமை உட்பட சில விடயங்களே இதற்கு காரணமாகும்.

**அனோமாவும் களத்தில்**

நடைபெற்று முடிந்த வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல்களில் உறுப்பினர்களை வென்றெடுத்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி மேல் மாகாணசபைத் தேர்தலிலும் முக்கிய புள்ளி களைக் களமிறக்க உத்தேசித்துள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் பொன்சேகாவின் பாரியாரான அனோமா பொன்சேகா களமிறங்கவுள்ளார். இவரையே அக்கட்சி முதன்மை வேட்பாளராக நிறுத்தும் என கூறப்பட்டாலும் அது குறித்து உத்தியோகபூர்வ தகவல் இன்னும் வெளியாகவில்லை.

அத்துடன், மேல்மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு மாகாண சபை கலைவதற்கு முன்னரே அரசியல் கட்சிகள் வியூகங்களை வகுக்க ஆரம்பித்துள்ளன. கூட்டு அமைத்துக் களமிறங்கல், பேரம் பேச்சு ஆகியன தற்போதே ஆரம்பித்துவிட்டன.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க முதல்வர் வேட்பாளராகக்களமிறக்க அரசு உத்தேசித்துள்ளதால் தற்போதைய முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் களமிறக்கலாம் எனத் தெரியவருகிறது.

# போராட்டத்தைக் கைவிட்ட தமிழக மீனவர்கள்

செப். 19 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற 19 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

சென்னை, ஒக்.21

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள புதுக் கோட்டை மீனவர்களை விடுவிக்கக்கோரி காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் போராட்டத்தை கைவிட்டு பெற்று நேற்று முன்தினம் சனிக்கிழமை மீண்டும் கடலுக்குள் சென்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் மற்றும் கோட்டைப்பட்டினம் ஆகிய மீன்பிடி துறைமுகத்தில் இருந்து செப். 19 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற 19 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அதேபோல, கடந்த 15 ஆம் திதி 15 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதையடுத்து, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 34 மீனவர் களையும் விடுவிக்கக்கோரி புதுக்கோட்டை மீனவர்கள் கடந்த 16 ஆம் திகதி முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இரண்டு துறைமுகத்திலும் விசைப்படகுகள் நிறுத் தப்பட்டிருந்தன. இதனால் வணிகமும், வருவாயும் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

இந்தநிலையில் வேலை நிறுத்தப்போராட்டத்தைக் கைவிட்டு மீனவர்கள் சனிக்கிழமை மீண்டும் கடலுக்குள் சென்றனர். இது குறித்து, மீனவர்கள் சங்கத் தலைவர்கள் ஜெகதாபட்டினம் குட்டியாண்டி, கோட்டைப்பட்டினம் சின்ன அடைக்கலம் ஆகியோர் தெரிவித்ததாவது:-

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை மீன வர்களை மீட்க மத்திய , மாநில அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், போராட் டத்தால் மீனவர்களின் வாழ் வாதாரம் பெரிதும் பாதிக்கப் படுவதைக் கருத்தில் கொண்டு, போராட்டத்தை கைவிட்டு மீன் பிடிக்கும் பணிக்கு சனிக்கிழமை மீனவர்கள் திரும்பியதாகத் தெரிவித்தனர்.

(வ)

# கஸினோவுக்கு கடும் எதிர்ப்பு கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள்

## இம்மாத இறுதியில் களமிறங்கும் பௌத்த அமைப்புகள்

அரசினால் நாடாளுமன்றில் நிறை வேற்றப்படவுள்ள கஸினோ சட்டமூலத் திற்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்த பௌத்த அமைப்புகள் இம்மாத இறுதிக்குள் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளன.

சூதாட்ட நிலையமான கஸினோவை சட்டரீதியாக்கும் சட்டவரைபு எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளு மன்றுக்கு கொண்டுவரப்படவுள்ளது.

இந்நிலையில், அரசின் இந்த செயற் பாட்டுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த பொதுபலசேனா அமைப்பு வெகுவிரை வில் இதற்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை நாடளாவிய ரீதியில் நடத்த வுள்ளதாகத் தகவல்கள் தெரியவந் துள்ளன.

நாளை (22 ஆம் திகதி) ஹலாலை எதிர்த்து கிருலப்பனையிலிருந்து தலதா மாளிகை வரையிலான ஓர் ஆர்ப் பாட்டத்தைப் பொதுபல சேனா அமைப்பு நடத்தவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் முடிவடைந்தவுடனேயே கஸினோவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஓர் ஆர்ப் பாட்டத்தை நடத்துவதற்கான பேச்சில் பொதுபல சேனா அமைப்பு ஈடுபட்டுவருவதாக அவ்வமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான பேராசிரியர் டிலாந்த விதானகே நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை, கடும் போக்குடைய அமைப்பான சிங்கள ராவய அமைப் பும் கஸினோ எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதுசம்பந்தமாக 29 ஆம் திகதி அமைப்பின் உறுப்பினர் களுக்கிடையில் கலந்தாலோசித்து, மிகவிரைவில் நாடளாவிய ரீதியிலான ஓர் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ள சிங்கள இராவய அமைப்பு தயாராகி வருவதாக அமைப்பின் பொதுச் செயலாளர் வண. அக்மீமன தயாரத்ன தேரர் நேற்று உறுதிபடத் தெரிவித்தார்.

பொதுபலசேனாவின் ஹலால் ஒழிப்புப் போராட்டத்திற்கு தம்மால் முடிந்த ஒத்துழைப்புகளை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த இவர், கஸினோ எதிர்ப்பு ஆர்ப் பாட்டம் தொடர்பில் இம் மாதத்திற்குள் அறிவிப்பதாகவும் தெரிவித்தார்.




தமிழ் இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் அமைப்பினர் சென்னை மெரீனா கடற்கரையில் நேற்று முன்தினம் காலையில் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்தி கையெழுத்து இயக்கம் நடத்தினர். பின்னர், இலங்கைக்கு எதிராக உழைப்பாளர் சிலையில் இருந்து கலங்கரை விளக்கம் வரை நடைபேரணியாகச் சென்றனர். (வ)

# டெங்கு பரவும் பகுதிகளாக 654 இடங்கள் இனங்காணல்

## எச்சரிக்கை கடிதம்,அனுப்பியது மாநகர சபை





யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை யின் போது நுளம்பு பெருகும் வகையில் 654 இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. தவிர 36 பேருக்கு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான எச்சரிக்கைக் கடிதமும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜீவநாதன் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியை டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி பாலர் பாடசாலை உட்பட 29 பாடசாலைகளும், 28 அரச நிறுவனங்கள், வீடுகள், பொது இடங்கள் என 8 ஆயிரத்து 940 இடங்களும் பரிசோதிக்கப்பட்டன. அவற்றில் பாடசாலை களிலும், 5 அரச நிறுவனங்களிலும் மற்றும் வீடுகள், பொது இடங்கள் என 649 இடங்களிலுமாக மொத்தம் 654 இடங்கள் நுளம்பு பெருகும் வகையிலான சூழல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. அவை துப்புரவு செய்வதன் மூலமாக அழிக்கப்பட்டன.

இரண்டு அரச நிறுவனங்களிலும், வீடுகள், பொது இடங்கள் என மொத்தம் 66 இடங்களில் நுளம்புக் குடம்பி இருந்தமை கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன. வீடுகள், பொது இடங்கள் என சூழல் மோசமாகக் காணப்பட்ட அதன் உரிமையாளர்கள் 36 பேருக்கு நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கான எச்சரிக்கைக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. 4 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நுளம்புக் குடம்பிகள் இனங் காணப்பட்ட இடங்கள் மற்றும் வடிகால்களுக்கு இரசாயனப் பதார்த்தம் விசிறப்படுகிறது. இலை யான்களைக் கட்டுப் படுத்த அடையாளம் காணப் பட்ட இடங்களுக்கு கிருமி நாசினி விசிறப்படுகிறது.

பருவகால மழை தொடரவுள்ளதால் டெங்கின் தாக்கம் அதிகரிக்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. பொதுமக்கள் தமது பகுதிகளைச் சுத்தமாக வைத்திருக்குமாறும், உக்கிப் போகும் கழிவுகள், உக்காத கழிவுகள் என வேறு வேறாக்கச் சேகரித்து கழிவகற்ற வருபவர்கள் கழிவகற்றும் வாகனத்தில் எடுத்துச் செல்லும் வகையில் செயற்படுமாறு அவர் மேலும் பொது மக்களை அறிவுறுத்துகிறார்.

(வ-4)

## குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, ஒக்.21
உயரத்திலிருந்து வீழ்ந்ததால் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார். இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் கொடிகாமம் எருவனில் இடம்பெற்றது.
இதேவேளை, மழை வெள்ளம் காணப்பட்ட வீட்டு முன் விறாந்தையை துப்புரவு செய்த மூதாட்டி சறுக்கி வீழ்ந்ததால் அவரின் கை எலும்பு முறிந்தது. இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் இடம் பெற்றது.
காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (வ-9)

## முதியோர் நிகழ்வு

அக்கராயன், ஒக்.21
முல்லைத்தீவு துணுக்காயில் முதியோர் நாள் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெறவுள்ளன.
துணுக்காய் திருநகரில் எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திருநகர் பொது மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளன.
இந்த நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (எ-18)



## கவனிப்பாரற்ற புல்லுக்குள அணைக்கட்டு

யாழ்.முற்றவெளி புல்லுக்குளத்தின் பாதுகாப்பு அணைக்கட்டின் அண்மையில் ஒரு பகுதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது. அண்மையில் குறித்த அணைக்கட்டின் ஒரு பகுதி உடைந்து சேதமடைந்து இவ்வாறு உடைந்ததால் குளத்தின் கரையோரத்தில் அமைக்கப்பட்ட நடைபாதையால் பயணம் செய்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (வ-17)

### நீண்ட தூர சேவையிலீடுபடும் பஸ்களில்

# வியாபார நோக்கில் பொருள் ஏற்றத் தடை

யாழ்ப்பாணம், ஒக்.21
பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடிய விதத்தில் நீண்ட தூர சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பஸ்களில் வியாபார நோக்கத்துடன் பொருள்கள் ஏற்றிச் செல்ல்முடியாது என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.டிப்போ முகாமையாளர் குலபலா செல்வம் தெரிவித்தார்.



தூர சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களில் வியாபார நோக்கத்துடன் சாரதி மற்றும் நடத்துநர்கள் விற்பனைப் பொருள்களை தற்போது ஏற்றிச் செல்வது இடம்பெற்று வருவது தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தூர சேவையில் ஈடுபடும் பஸ்களில் மட்டுமல்லாது உள்ளூர் சேவையில் ஈடுபடும் பஸ்களிலும் பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடிய எந்தப் பொருள்களும் ஏற்றிச் செல்ல முடியாது. பயணிகள் சுமுகமான போக்குவரத்தை மேற்கொள்வதற்கு சாரதி மற்றும் நடத்துநர்கள் தமது சேவையை நடத்த வேண்டும்.
பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாரதி நடத்துநர்கள் வியாபார நோக்கத்துடன் ஏதாவது பொருள்களை ஏற்றிச் சென்றால் அது தொடர்பான தகவலை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு மக்கள் தெரியப்படுத்தினால் உரிய நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளும்.-என்றார்.(வ-14)

## நடமாடும் நூலக சேவை நிறுத்தம் பாடசாலைகளில் நூல்கள் தேக்கம்

### வாகனம் பழுதடைந்தமையே காரணமாம்

யாழ்ப்பாணம், ஒக்.21
யாழ்ப்பாணம் பொது நூலகத்தால் நடத்தப்பட்டு வந்த நூலக நடமாடும் சேவை கடந்த இரண்டு மாதங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் நூலக சேவையின் போது இரவலாக வழங்கப்பட்ட நூல்கள் அந்தந்தப் பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களில் தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது.
வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் வாகனத் தொடரணி நடமாடும் சேவையூடாகப் பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு பயன்தரு நூல்கள் இரவலாகக் கையளிக்கப்பட்டன.
எனினும்வாகனம் பழுதடைந்தமையைக் காரணம் காட்டி நடமாடும் சேவை தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளது.
இதன் காரணமாக நூலகத்துக்குச் சொந்தமாக பெறுமதி மிக்க நூல்கள் பாடசாலைகளிலும், அரச நிறுவனங்களிலும் தேங்கிக் கிடக்கின்றன. பாடசாலை மாணவர்கள் தொடர்ச்சியாக நன்மை பெற்று வந்த இந்த நடமாடும் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மீண்டும் நூலகத்தை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
இது தொடர்பில் யாழ்.பொது நூலகரின் கருத்தை அறிய 3 தினங்கள் அழைப்பை ஏற்படுத்தியும் தொடர்பு கொள்ள முடியவில்லை. (வ-14-51)

# 100 ஹெக்ரேயரில் உ.கிழங்குச் செய்கை

## விவசாயத் திணைக்களம் ஏற்பாடு

அச்சுவேலி, ஒக்.21
யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் 100 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. கடந்த வருடம் 40 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டது.
இந்த வருடம் உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட யாழ்.மாவட்ட விவசாயிகள் ஆர்வத்தோடு முன்வந்துள்ளனர்.
இதேவேளை- விதை உருளைக்கிழங்கு மானிய விலையில் வழங்குவதற்கான முற்பதிவுகள் இடம்பெறுவதாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்த வருடம் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு 200 மெற்றிக்தொன் விதை உருளைக் கிழங்கு 50 வீத மானிய விலையில் வழங்கப்படவுள்ளது. விவசாயிகள் 50 வீதத்தை முற்பணமாகச் செலுத்தி பதிவு செய்ய வேண்டும்.
200 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கில் 120 மெற்றிக்தொன் றெட்லைட் சோடா, 60 மெற்றிக்தொன் அனோவா, 20 மெற்றிக்தொன் கல்லைட் ரக விதை உருளைக்கிழங்கு வழங்கப்படவுள்ளது. இந்த ரக விதை உருளைக்கிழங்கை ஹொலண்ட் மற்றும் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்வதற்கு விவசாய அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.
யாழ்.மாவட்டத்தில் விதை உருளைக்கிழங்கு விநியோகத்தில் கண்டிப்பான நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன.
உருளைக்கிழங்குச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சங்கங்களின் சமாசம் ஆகியவற்றில் கிழங்கு விநியோகிக்கப்படவுள்ளன.
நவம்பர் மாத நடுப்பகுதியில் விதை உருளைக்கிழங்கை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.- என்றார். (வ-11)



### பிரதேச சபைகளின் புதிய கட்டடங்களுக்கு-

# கழிவு ஒயில் ஊற்றியோருக்கு வடக்குத் தேர்தலில் தக்க பாடம்

### நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.21
பிரதேச சபைகளின் புதிய கட்டடங்களின் மீது திறப்பு விழாவுக்கு முன்னதாக கழிவு ஒயில் ஊற்றியவர்களை, மக்கள் நடைபெற்று முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் அடித்து விரட்டியிருக்கிறார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
வலி.மேற்கு பிரதேச சபையின் புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை சுழிபுரத்திலுள்ள அதன் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.
இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
பல காலங்களுக்குப் பின்னர் தமிழ் மக்களால் ஒரு நிகழ்வு இன்று சந்தோஷமாக-ஜனநாயக-முறைப்படி நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதை நான் சொல்வதற்கு காரணம் இருக்கிறது. சுன்னாகம் பிரதேச சபையின் கட்டடத் திறப்பு விழாவுக்கு முதல் நாள் கழிவு ஒயில் ஊற்றப்பட்டது.
கழிவு ஒயில் ஊற்றியவர்கள் வடக்குத் தேர்தலில் மண் கௌவி விட்டார்கள். அவர்கள் மக்கள் என்ன பாடம் தங்களுக்கு புகட்டுவார்கள் என்பதை ஒயில் ஊற்றும் போது நினைத்திருக்க வேண்டும்.
கடந்த இரண்டு வருடங்களாக பிரதேச சபைகளை ஒன்றாக இயங்க விடாமல் செய்தார்கள். தவிசாளர்கள் சில விடயங்களை ஆணித்தரமாக கையிலெடுத்திருக்கலாம்-நொருக்கியிருக்கலாம்-வழக்கும் போட்டிருக்கலாம்.
சபையின் செயலர்கள் சபைக்கு ஒரு இணைப்பாளர். அவர்கள் சபை முறையாக நடப்பதற்குரிய வகையில் செயற்பட்டிருக்க வேண்டும்.
பிரதேச சபையின் செயலாளர்கள் ஓரளவுக்கு குட்டி ராஜாக்கள் போன்று தங்கள் நடத்தையைக் காட்டிவிட்டார்கள். பிரதேச சபையின் செயலாளர்கள், தவிசாளர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.
செயலாளர்கள், தவிசாளர்களுக்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் இடையில் செயற்பட வேண்டும். தவிசாளர்கள் எப்போது அழைத்தாலும் செயலாளர்கள் செல்ல வேண்டும். தென்பகுதியில் இது தகுந்த முறையில் நடைபெறுகிறது. அவர்கள் மக்களுக்காக சபைத் தவிசாளர்களுடன் அன்னியோன்னியமாகச் செயற்படுகின்றனர்.
பிரதேச சபைகள் மூன்றாவது அரசு. மக்கள் தெரிவு செய்த பிரதிநிதிகள் தான் முதன்மையானவர்கள் என்பதை சகலரும் நினைவில் வைத்துச் செயற்பட வேண்டும்.
அதைவிடுத்து வேறு யாருக்காவது கைகட்டிக் கொண்டு வேலை செய்ய முற்பட வேண்டாம்-என்றார். (வ-5)

# கரும்பு ஆலையில் இருக்கும் இராணுவத்தை வெளியேற்றுக

### விவசாய அமைச்சர் நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் வேண்டுகோள்

அக்கராயன், ஒக்.21
கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கரும்பு ஆலைக் காணியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வெளியேற்றி கரும்புச் செய்கையை மேற்கொள்ள வடக்கு மாகாண விவசாய அமைச்சர் நடவடிக்கை எடுக்கும்படி ஸ்கந்தபுரம் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
200 ஏக்கர் நிலப்பரப்பில் 1965 களில் இயங்கிய கரும்பு ஆலை 1980களின் பின்னர் கரும்புச் செய்கை வீழ்ச்சி கண்டதில் மூடப்பட்டது.
மீள்குடியமர்வின் பின்பு கரும்புச் செய்கைக்குரிய நிலத்தில் பயிர்ச் செய்கைக்கு இராணுவம் மறுப்புத் தெரிவித்து வருகிறது.
தற்பொழுது கரும்பு ஆலைக் கட்டடத்திலும் இராணுவம் நிலை கொண்டுள்ளதால் கரும்புச் செய்கையை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கரும்பு ஆலையில் இருக்கும் இராணுவத்தை வெளியேற்றி கரும்பு ஆலை செயற்பாட்டை முன்னெடுக்க வழி வகுக்குமாறு விவசாயி கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வடமாகாணத்திலேயே ஸ்கந்தபுரத்தில் மட்டும் தான் கரும்பு ஆலை செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-18)

> 200 ஏக்கர் நிலப் பரப்பில் 1965 களில் இயங்கிய கரும்பு ஆலை 1980களின் பின்னர் கரும்புச் செய்கை வீழ்ச்சி கண்டதில் மூடப்பட்டன.

# ஈழத் தமிழர் மேம்பாட்டுக்காக நிரந்தர நிதி ஒதுக்கீடு தேவை

## திருமாவளவன் வலியுறுத்து

சிதம்பரம், ஒக்.21


ஈழத் தமிழர் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்காக நிரந்தர நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

சிதம்பரத்துக்குச் சென்ற அவர் அங்கு செய்தியாளர்களிடம் பேசு கையில்:-

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்வது தொடர் கதையாகி விடுகிறது.

இது தமிழக மீன வர்களின் வாழ்வா தாரத்தை பாதிப்ப தாக உள்ளது. இந்திய அரசு தீவிர முயற்சி எடுத்து இதற்கு நிலையான முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் தமிழக மீன வர்களின் நலன் குறித்து ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண் டிய பொறுப்பும், தமிழக மீன வர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப் பும் தமிழக அரசுக்கு உள்ளது என்பதை கவனத்தில் கொண்டு இதற்கு நிரந்தரத் தீர்வை தமி ழக அரசு எடுக்க வேண்டும்.

ஈழதமிழர்கள் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்கு தமிழக அரசு சிறப்பு நிதி ஒதுக்கி அங்கு மருத்து வமனை, கல்வி நிலை யங்கள், வீடுகள் போன்ற



மேம்பாட்டு பணிகளுக்கு தமிழக அரசு உட்படுத்த வேண்டும். இலங் கையில் அடுத்த மாதம் நடைபெற உள்ள பொது நலவாய மாநாட்டில் இந்திய பிரதமரோ, அவரின் சார்பில் உறுப்பினர்களோ பங் கேற்கக்கூடாது என வலியுறுத்தி பிரதமரை நேரில் சந்தித்து மனு அளிக்க உள்ளோம். அதனையும் மீறி இந்திய அரசு கலந்து கொண்டு நாடாளு மன்ற தேர்தலில் காங் கிரஸுக்கு பின்னடைவு ஏற்படும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை விடுதலைச் சிறுத்தை கட்சி சார்பில் மண்ணுரிமை கோரிக்கையை வலியுறுத்தி மண்ணுரிமை வாரம் தமிழ கம் முழுவதும் கடைப் பிடிக்கப்படுகிறது - என்றார். (வ)

# சாதாரண முறைப்பாடுகளுக்கு இனி ஆலோசனை குழு மூலம் தீர்வு

### கோப்பாய் பொலிஸ் நிலையம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.21

கோப்பாய் பொலிஸ் பிரிவில் பணமோசடிகள் தொடர்பிலேயே அதிக முறைப்பாடுகள் பதிவா கின்றன. இவை உட்பட சாதா ரண முறைப்பாடுகளை, இணக்க சபைக்குக் கொண்டு செல்ல முன் னர் ஆலோசனை மூலமாக தீர்த்து வைக்கும் பணி ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி சஞ்ஜீவ ஜெயக்கொடி தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோப்பாய் பொலிஸ் பிரிவில் கொள்ளை, திருட்டுச் சம்பவங் கள் வெகுவாக குறைவடைந் துள்ளன. ஆனால் பணமோசடி தொடர்பான முறைப்பாடுகள் தொடர்ச்சியாக பதிவாகின்றன. அத்துடன் குடும்பத் தகராறுகள், காதல் விவகாரங்கள் , காணிப் பிணக்குகள், எல்லைப் பிரச்சி னைகள் உட்பட முறைப்பாடுகள் வந்து சேர்கின்றன. இவற்றை இணக்க சபை மூலமாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளை இணக்க சபை மூலம் தீர்க்க முடியாதவிடத்து, நீதிமன்றுக் குக் கொண்டு செல்வது வழ மையான நடைமுறை. அவ் வாறு இல்லாது இனிமேல் முறைப்பாடு செய்ய வருபவர்க ளது பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களுக்கு இடையில் இணக் கத்தை ஏற்படுத்தும் முறைமை முன்னெடுக்கப்படுகிறது.

மதகுருமார்களும் சமாதான நீதிவான்களும் இந்த ஆலோ சனை வழங்கும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

முறைப்பாடு செய்ய வருபவர்க ளுக்கு அவர்களது பிரச்சினை தொடர்பில் போதியளவு விழிப் புணர்வு, விளக்கத்தை வழங் குவதே இந்த ஆலோசனைக் குழுவின் செயற்பாடாகும்.

இதனைவிட மது போதையில் வீதிகளில் பிறருக்கு இடையூறு விளைவிக்கும் இளைஞர் குழுக் கள் தொடர்பில் பொலிஸார் கடும் நடவடிக்கை எடுப்பர்- என்றார். (ஐ-4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய மாணவன் கிருஸ்ணபிள்ளை பிரிந்தாபன் அவர்கள் 2013 தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புள்ளிகள் - 170 பெற்றமையைப் பாராட்டுவதுடன் மேலும் பட்டங்கள் பலபெற்று பலநூறு செல்வங்கள் தனைப்பெற்று ஒழுக்கத்தில் சிறந்து ஓங்கி உயர்வாய் பாரினில் வாழ உள்ளத்து உவகைபொங்க வாழ்த்துகின்றோம்.



வாழ்த்தும்: கிருஸ்ணபிள்ளை- அப்பா, ஜெகதீஸ்வரி - அம்மா , சப்தமி - தங்கை, கந்தையா- அப்பப்பா, தங்கமணி- அப்பம்மா, வேலுப்பிள்ளை பாக்கியம் அம்மம்மா.


# இலங்கை கடற்படை மீண்டும் அட்டூழியம்

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங் கைக் கடற்படை நடத்திய தாக்குத லில் 4 பேர் காயம டைந்தனர் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக் கின்றன.

கச்சதீவு அருகே இன்று காலையில் இந்த சம்பவம் நடை பெற்றுள்ளது. அப்பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடித் துக் கொண்டிருந்த கடற்படையினர் வந்துள்ளனர்.

பின்னர் மீனவர்களின் படகு களைத் தாக்கினர். வலைக ளைப் பிடித்து அறுத்து கடலில் வீசினர்.

இதில் 10க்கும் மேற்பட்ட வலைகள் சேதமடைந்து போய் விட்டன. பின்னர் மீனவர்க ளையும் அவர்கள் சரமாரியா கத் தாக்கினர். இதில் மீனவர் கள் 4 பேர் காயமடைந்தனர். இந் தத் தாக்குதலைத் தொடர்ந்து மீனவர்கள் கரைக்குத் திரும்பி விட்டனர். காயமடைந்த மீனவர் கள் மருத்துவ மனையில் சேர்ந் துள்ளனர். ஆனால் இவர்கள் எந்த மருத்துவமனையில் சேர்ந் துள்ளனர் என்பதை மீன் வளத்துறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது. (வ)

### இந்திய உண்மை விதை வெங்காயத்தை

# யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்ய வடக்கு விவசாயத் திணைக்களம் ஏற்பாடு

இந்தியாவில் இருந்து தருவிக் கப்படும் வெங்காயத்துக்கான உண்மை விதையை யாழ்ப் பாணத்திலேயே உற்பத்தி செய்ய வடக்கு விவசாயத் திணைக்களம் நடவடிக் கை களை மேற்கொண்டுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயப் பணிப் பாளர் கி.ஸ்ரீ பாலசுந் தரம் தெரிவித்தார்.

எதிர்வரும் கால போகத்தில் உண் மைவிதை உற் பத்தி செய்வதற் கென தெரிவு செய்து பயிற் சியளிக்கப்பட்ட 200 விவசாயி கள் மூலம் இதற்கான ஏற்பாடு கள் மேற்கொள்ளப்படுகின் றன. வெங்காயத்துக்கான உண்மை விதைகள் எதிர்காலத்தில் உள்ளூ ரில் உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)


## COMPUTER AND ACCESSORES SALES, 30% OFFER

யாழ் நகரில் 7வருடமாக இயங்கி வரும் North Lead கணனி நிறுவனமானது தனது முதலாவது கிளை காரியாலயத்தை இல.12, கனகபுரம் வீதி, கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பித்ததை முன்னிட்டு அனைத்து கணனி உதிரிப்பாகங்களுக்கும் 30% விசேட விலைக்கழிவை வழங்கியுள்ளது (This offer only 15 days). எமது தலைமைக் காரியாலயத்தில் கொள்வனவு செய்த கணனிகளினதும், அதன் உதிரிப்பாகங்களினதும் பழுதுகளையும், உத்தரவாதத்தினையும் எமது கிளைக் காரியாலயத்திலே நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| 8GB Pendrive: 1150 | Intel Mother Board: 8250 | ATX Casing Tower: 2650 | Orignal Toner: 4550 |
| 16GB Pendirve: 1680 | Intel Processor 3.0 GHz: 8600 | 2GB DDR III Ram: 3150 | Laptop Battery: 8850 |
| 7.2 Multy Dongle: 2950 | Intel I-3 Processr 3.3GHz:16850 | Techfine 650W UPS : 4350 | Laptop Screen: 12850 |
| 20MP Webcam from: 775 | 500 GB Toshiba HDD: 7650 | Samsung DVD Writer: 2750 | Lap Org Charger: 1950 |
| Head Phone & Mic: 250 | 500 GB Westrn Dig HDD: 7850 | 3in1 Sams Laser Printer:23750 | Lap Multy Charger:1250 |
| Laser Mouse from: 250 | 1TB Westrn Digital HDD: 10850 | Tablet PC With Antroid: 23500 | Contact : |
| Keyboard from: 480 | 19" Samsung Led Monitor:12700 | P-4 3rd Gen Full Set: 48850 | Tel: 021-222 4459 |
| Wirless Key&Mouse:1850 | 19" HP Led Monitor: 12650 | 3rd Gen Laptop from: 54850 | Fax: 021-222 4460 |
| Lap Coolar Pad from: 850 | 19" AOC Led Monitor: 12600 | 3rd Gen I-3 HP Laptop: 64000 | Mob: 0772533390 |

அனைத்து வகையான கணனிகளையும் (Laptop, Desktop) உடனுக்குடன் உத்தரவாதத்துடன் பழுது பார்த்து கொடுக்கப்படும். (வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவு)

NORTH LEAD COMPUTER & ACCESSORIES WHOLESALER

Head Office: No: 328 Stanly Road, Jaffna.(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

Branch: No:12 Kanagapuram Road,Kilinochi.(பாரதி ஹோட்டலுக்கு அருகில்)



## மரண அறிவித்தல்

### திருமதி விவேகானந்தன் ரதிவதனா (றெபேக்கா)



ஏழாலை தெற்கு, ஏழாலையைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விவேகானந்தன் ரதிவதனா (றெபேக்கா) நேற்று (20.10.2013) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்-இராசம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற விவேகானந்தனின் மனைவியும், ஜெரேமியா சஞ்ஜீபன் (கிராம உத்தியோகத்தர் J/214 மல்லாகம் வடக்கு), எப்சிபா சிந்துஜா (E.N.T கிளினிக்), டேவிட் குமணன் (ஆசிரியர்-சென் ஜோன்ஸ் கல்லூரி), ஜெமீமா ஆரண்யா (குடும்ப நல உத்தியோகத்தர், குட்டியப்புலம்) ஆகியோரின் அன்புத் தாயும், மரியா நளாயினி (ஆசிரியர்-யா/அருணோதயக் கல்லூரி), பாலரஞ்சித் (ஊழியர்-ஐங்கரன் மோட்டர்ஸ்), அபிகாயில் இவாஞ்சலின் (உத்தியோகத்தர் - HNB சங்கானை), ஜேக்கப் தர்மேந்திரா (சதீஸ்-சாரதி) ஆகியோரின் பாசமிகு மாமியும், ஷலேமி அர்ப்பணா, ஷேபா ஆராதனா, ஷாரோன் அபூர்வன், யூதா யோசுவா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.10.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் விசுவாசிகள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
ஏழாலை .

தகவல்:
குடும்பத்தினர்.

(33183) (10)



## தேவை

கொம்பியூட்டர் ரைப்பிங் போட்டோக் கொப்பி தெரிந்த அல்லது பழக விரும்பும் பெண் பிள்ளை தேவை. (யாழ் மாநகர சபைக்கு அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

(33186) (10) தொடர்பு: 077 3144612

## ஓட்டோ விற்பனைக்குண்டு

வீட்டுப் பாவனையிலுள்ள ஓட்டோ (முச்சக்கர வண்டி) விற்பனைக்கு உண்டு. (2 STROKE, HV-xxxx)

(சி/13318) (10) தொடர்பு:0777 721768

## உடன் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட வுள்ள வைத்தியசாலைக்கு பின்வரும் ஆள்கள் தேவை.

- வைத்தியர்கள் - (RMO, RMP, MBBS, MD RUSSIA)
- தாதிமார் - (தங்கி வேலை செய்யக் கூடியவராக இருத்தல்)
- முகாமையாளர் - (அரசாங்க சேவையில் ஓய்வு பெற்ற வராகவும் தங்கி வேலை செய்யக் கூடிய வராகவும் இருத்தல் வேண்டும்.)

(சி/13317) (10) தொடர்பு:0777 721768

## உடனடி வேலைவாய்ப்பு

- கணினி உத்தியோகத்தர் Internet அறிவுடையோர்
- கள உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை

(சம்பளம் 10,000/=-20,000/=)

072 492 1586 எனும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

(33176)(6,3,4)

## வீடு வாடகைக்குண்டு

யாழ் இந்துக்கல்லூரிக்கு அருகில் 3 அறைகள் வரவேற்பறை, சமையலறை இணைந்த குளியல் அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு

(33182) (10) தொடர்பு:077 833 6848

## வீடு வாடகைக்கு தேவை

பின்வரும் இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

★ கஸ்தூரியார் றோட் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமை)

★ கோயில் வீதி, நல்லூர்.

(சி/13319) (10) தொடர்பு:0777 721768



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 14.04.1940 — மறைவு 01.11.2012



### அமரர் கந்தையா முருகையா

(இளவாலை, சித்திரமேழி)

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (21.10.2013) திங்கட்கிழமை நண்பகல் அவரது இல்லத்தில் நடைபெறும், தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெறும்.

சுழிபுரம் கிழக்கு, குடும்பத்தினர்.

(33184) (10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 03 ♦ 12 ♦ 1962 — இறப்பு 21 ♦ 09 ♦ 2013



### திருமதி கமலாதேவி கோபாலகிருஷ்ணன்

(ஆசிரியை, யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்)

திங்களொன்று ஆனாலும்
தீராதெம் துயரம்
தெவிட்டாத உம் உறவு
நீறாக நினைவுடன்
நிதம் அஞ்சலித்து
நாம் வாழ்வோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்.
யா/ நாவற்குழி ம.வி

(33185)

# விவசாயக் கடன் செலுத்துவதில் தாமதம்; மீண்டும் கடனுதவி வழங்க முடியாத நிலை

## இலங்கை வங்கி முகாமையாளர்கள் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.21

விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற விவசாயக் கடனுதவிகள் மீளச் செலுத்தப்படுவது தாமதமடைவதாலேயே மீண்டும் கடனுக்காக விண்ணப்பிப்பவர்களுக்கு கடனுதவிகளை வழங்க தமது வங்கி பின்னடிப்பதாக இலங்கை வங்கி முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காலபோக நெற்செய்கைக்கென கடனுதவி கோரி வங்கிகளிடம் விண்ணப்பித்த விவசாயிகளுக்கு உரிய முறையில் கடனுதவிகள் கிடைக்கப்பெறுதில்லை என்பது தொடர்பில் வங்கி முகாமையாளர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் விவசாயிகளுக்கான கடனுதவியை இலங்கை வங்கி விவசாய சம்மேளனங்கள் ஊடாக உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்த விவசாயிகளுக்குக் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கடந்த வருடத்தில் கடனுதவிகளைப் பெற்ற 70 வீதத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் கடன்களை மீளச் செலுத்துவதில்லை. இன்னும் சிலர் தவணை தப்பியே கடனை மீளச் செலுத்துகின்றனர்.

விவசாயிகளது நன்மை கருதியே 9 வீதமான வட்டியுடன் காணியின் விஸ்தீரணத் துக்கு ஏற்ப கடனுதவியை இலங்கை வங்கி வழங்கு கிறது.

விவசாயிகள் கடனை மீளச் செலுத்துவதில் உரிய அக்கறை காட்டாத காரணத்தால் அடுத்த கட்ட கடனுதவியை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.- என்றனர்.

இந்த நிலையில் சாவகச்சேரி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கைக்கென கடனுக்காக விண்ணப்பித்துள்ள விவசாயிகளுக்கு இதுவரை கடனுதவி வழங்கப்படவில்லை.

கமக்கார அமைப்புக்கள் ஊடாக வருடந்தோறும் விவசாயிகள் கடன் உதவி பெற்று விவசாயச் செய்கையை மேற்கொள்ளும் நிலையில் இந்த வருடம் உரிய காலபோகத்துக்கான கடன் உதவி விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இதன் காரணமாக அந்தப் பகுதி விவசாயிகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். (வ-14-9)

---

## சுகாதார நிறுவன தேவைகள் குறித்து அமைச்சர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.21

வடக்கு மாகாண சுகாதார அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மருத்துவர் பி.சத்தியலிங்கம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு நாளை மறுதினம் பி.ப. 2 மணிக்கு பயணம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் சுகாதார நிறுவனங்களில் உள்ள தேவைகள் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் போன்றோரை கலந்துகொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (வ-9)

---

# தடுப்பூசி மருந்து ஏற்ற கருமபீடம் அமைப்பு

## சாவகச்சேரி வைத்தியசாலையில்

தென்மராட்சி, ஒக்.21

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வரும் வெளி நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் தடுப்பூசி மருந்துகள் ஏற்றுவதற்கென விசேட கருமபீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்கள் மற்றும் பூனைகள் ஆகியவற்றால் கடிபடுவோருக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து மற்றும் ஏற்புத்தடை மருந்து, இன்சுலின் மருந்து, தீராத புண்களுக்கு ஏற்றப்படும் ஊசி மருந்து ஆகியவை ஏற்றுவதற்கு தனியாக 7 ஆம் இலக்க அறை ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊசி மருந்து ஏற்றுவதற்கு வரும் நோயாளர்கள் நீண்ட நேரம் நோயாளர் பிரிவில் காத்திருக்காமல் வெளிநோயாளர் பிரிவில் அனுமதிப் பற்றுச்சீட்டைப் பெற்று, 7 ஆம் இலக்க அறையில் உள்ள வைத்திய அதிகாரி யிடம் சென்று பதிவு செய்து தடுப்பூசி மருந்தை ஏற்றிக் கொள்ளலாம் என வைத்தியசாலை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

---

மேலதிக கொடுப்பனவு குறித்து

## தாதியர் சங்கப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு இன்று

யாழ்ப்பாணம், ஒக்.21

வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பாகத் தாதிய சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு இன்று மு.ப. 11 மணிக்கு வடமாகாண சுகாதார அமைச்சு அலுவல கத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் வட மாகாண பொது வைத்திய சாலைகள், ஆதார வைத்தியசாலைகள் ஆகியவற்றின் பொறுப்பதிகாரிகளைக் கலந்துகொள்ளுமாறு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (வ-9)

---

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி அரச வைத்தியசாலையில் மட்டுமே

### சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.21


தனியார் வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்களில் கட்டாக்காலி நாய்கள் மற்றும் பூனை போன்றவற்றால் கடிபடுவோருக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படுவதில்லை. விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து அரச வைத்தியசாலைகளில் மட்டும் ஏற்றப்படுவதால் மக்களை ஏமாற வேண்டாம் என சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

*விலங்கு விசர் நோய்த் தடுப் பூசி மருந்து அரச வைத்திய சாலைகளில் மட்டும் ஏற்றப் படுதால் மக்கள் ஏமாற வேண்டாம்*

கட்டாக்காலி நாய்கள் மற்றும் பூனைகள் போன்றவற்றால் கடிபடுவோர் தனியார் வைத்தியசாலைகளில் செல்லும் வேளையில் கடித்த விலங்கை 15 தினங்கள் கவனமாகப் பார்த்துக் கொள்ளுமாறு கூறி ஊசி மருந்து ஏற்றப்படுகிறது.

வீதியில் பயணிக்கும்போது கடிக்கும் கட்டாக்காலி நாயைக் கண்காணிக்க முடியாத நிலையில் தனியார் வைத்திய சாலை யில் தடுப்பூசி மருந்து ஏற்றிய காரணத்தால் பலர் தொடர் சிகிச்சை பெறாது விடுகின்றனர்.

இதனால் உயிரிழப்பு ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளதால், கட்டாக்காலி நாய்கள் மற்றும் பூனைகளால் கடிபடுவோர் அரச வைத்தியசாலைகளுக்குச் சென்று விலங்கு விசர் நோய் தடுப்பூசி மருந்து ஏற்றிக் கொள்ளுமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (வ-9)



வலி.மேற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் கட்டடத் திறப்பு விழாவில் கட்டடத்தின் முன்பாக அமைக்கப்பட்ட தமிழ் அன்னையின் சிலையை வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் திறந்து வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி.மேற்குப் பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர். (வ-21)

---

# கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.21

தென்மராட்சிப் பிரதேசத்தில் வயல் நிலங்களை நாசப்படுத்தும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு தந்தால் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை பிரதேச சபை மேற்கொள்ளும் என்று சாவ கச்சேரி பிரதேச சபைத் தலைவர் துரைசாமி தெரிவித்தார்.

காலபோக நெற் செய்கைக்கான ஆரம்பப் பணிகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளதுடன் விவசாயிகள் சிலர் தமது வயல் நிலங்களில் நெல் விதைப்பையும் மேற் கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கால் நடைகள் கட்டாக்காலிகளாக அவிழ்த்துவிடப்பட்டுள்ளதால் விவசாயிகளது வயல் காணிகள் நாசம் செய்யப்படுகின் றன.

குறிப்பாக தென்மராட்சி தெற்குப் பகுதியான தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதி வயல் காணிகளை கட்டாக்காலி மாடுகள் நாசம் செய்து வருகின்றன. இது தொடர்பாக விவசாய சம்மேளனங்களுக்கு தெரியப்படுத்தியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே பிரதேச சபை இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரியுள்ளனர்.

இது குறித்துப் பிர தேச சபைத் தலைவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் மேலும் தெரிவித் ததாவது :-

கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு விவசாய சம்மேளனங்களுக்கே உரியது.

எனினும் விவசாயிகளது நன்மை கருதி பிரதேச சபை இதனை மேற் கொள்ளும். பாதிக்கப்படும் பிரதேச விவசாயிகள் அது தொடர்பான விவரத்தை பிரதேச சபைக்கு தெரியப் படுத்தினால் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை பிரதேச சபை எடுக்கும் - என்றார். (வ-14-131)

---

# முதுநிலை நிரல்படியே ஊழியருக்கு நியமனம்

## மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.21

ஊழியர்களுக்கு முதுநிலை நிரல்படியே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

இந்த நடைமுறைசகலதிணைக்களங்களுக்கும் பொருத்தமுடையது என்று யாழ். மனித உரிமை ஆணைக் குழுவின் இணைப்பாளர் த.கனராஜ் தெரிவித்தார்.

கொடிகாமம் தபால் அலுவலகத்துக்கு கொழும்பு கொட்டாஞ்சேனை அஞ்சல் அலுவலகத்தில் இருந்து தபால் தரம் பிரிப்பாளர் பதவிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டதை அடுத்து கொடிகாமம் தபாலக ஊழியர் கள் யாழ்.பிராந்திய மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர். அதனையடுத்து கடந்த 3 ஆம் திகதி இது தொடர்பான விசாரணையை பிராந்திய இணைப்பாளர் மேற்கொண் டிருந்தார்.

இதன்போது திணைக்களம் ஒன்றில் நியமனம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் கடமையில் உள்ள ஊழியர்களில் முதுநிலை நிரல்படியே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

தபால் திணைக்களத்தில் 7 ஊழியர்கள் கடமையாற்றும் பட்சத்தில் குறித்த தபால் தரம் பிரிப்பாளர் பதவி ஏற்றப்படுவது நடைமுறை எனச் சுட்டிக் காட்டப்பட்டது. எனினும் கொடிகாமம் தபால் அலுவலகத்தில் 6 ஊழியர்கள் கடமையில் உள்ள நிலையில் அரசியல் செல்வாக்குகளாலேயே தற்போது நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஊழியர்கள் சுட்டிக்காட்டினர். இந்த நியமனம் நடை முறைகளுக்கு மீறி வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

இதனையடுத்து தமக்குச் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் தாம் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற் கொள்ளப் போவதாகவும் ஊழியர் கள் தெரிவித்தனர். (வ-14-122)

# ரஷ்யா பயணமானார் மன்மோகன்

## கூடங்குளம் அணுஉலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்றார்

புதுடில்லி, ஒக்.21
இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் ரஷ்யா மற்றும் சீனாவுக்கு 5 நாள் உத்தி யோகபூர்வ பயணத்தை மேற் கொண்டுள்ளார். அவர் அங்கு நடைபெறவுள்ள 14ஆவது வருடாந்த உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரி வித்துள்ள இந்தியப் பிரதமர் செயலகம் குறித்த பயணத் தின்போது கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கான மூன் றாவது மற்றும் நான்காவது அணு உலை தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்தா கும் என்று தெரிவித்துள்ளது.
ரஷ்ய பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் சீனா செல் கிறார். அங்கு பீஜிங்கில் சீன பிரதமர் லீ கெகியாங்கை சந்தித்துக் கலந்துரையாட வுள்ளார்.
கடந்த 6 மாதங்களில் இது இவர்களது இரண்டாவது சந் திப்பு ஆகும். இந்த இரு நாட்டு தலைவர்களின் சந்திப்பில் எல்லைப் பிரச்சினை பற்றி முக் கியமாக பேசப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (ற)



**ரஷ்ய பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் சீனா செல் கிறார். அங்கு பீஜிங்கில் சீன பிரதமர் லீ கெகி யாங்கை சந்தித்துக் கலந்துரையாட வுள்ளார்.**



பிரதமரின் ரஷ்யப் பயணத்துக்கு கண்டனம்

இந்தியப் பிரதமரின் ரஷ்யப் பயணத்தின்போது கூடங்குளம் அணு உலை தொடர்பாக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடிந்தகரையில் ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டது. அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்தொகை யான மக்கள் கலந்து கொண்டனர்.

# ஒரிசாவை மீண்டும் புயல் தாக்கும்

சென்னை, ஒக்.21
தமிழக கடலோர பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகி உள்ள தால் ஒரிசாவை மீண்டும் புயல் தாக்கும் அபாயம் உள் ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இந்த காற்றழுத்த தாழ்வு மண் டலம் ஒரிசா நோக்கி நகர்ந்து வருவதால் பாலாசோர், ஜஜ்பூர், மயூர்பஞ்ச் ஆகிய மாவட்டங் கள் புயல் பாதிப்புக்கு ஆளா கும் வாய்ப்புள்ளது என்றும் வானிலை மையம் தெரிவித் துள்ளது.
அதையடுத்து அந்தப் பகுதிக ளில் வீடுகளின்றி வசிக்கும் 80 ஆயிரம் மக்களுக்கு பொலித் தீன் தடுப்புகள் வழங்க சிறப்பு மீட்பு மையம் நடவடிக்கை எடுத்துள்ளது.
பைலின் புயல் பாதிப்பு கார ணமாக நிவாரண முகாம்க ளில் தங்கி இருக்கும் பெரும் பாலானோர் இன்னும் வீடு திரும்பவில்லை. புதிய புயல் சின்னம் வலுவடைந்து தாக்கி னால் பாதிப்பு மேலும் அதி கரிக்கும் என்று அஞ்சப்படு கிறது.
இதற்கிடையே புயலால் பாதிக் கப்பட்டுள்ள பகுதிகளை இந் திய மத்திய உள்துறை செய லாளர் அனில்கோ சுவாமி நாளை பார்வையிட உள் ளார். அவரிடம் புயல் பாதிப்பு கள் குறித்து மாநில அரசு தயாரித்துள்ள அறிக்கை அளிக்கப்பட உள்ளது. (ற)

# இன்னொரு கோட்டையில் 2500 தொன் தங்கம்

### கூறுகின்றார் ஷோபான் சாமியார்

சென்னை, ஒக்.21
உத்தர பிரதேசத்தில் மற் றொரு கோட்டையிலும், தங் கம் உள்ளது. அதன் மூலம் 2 ஆயிரத்து 500 தொன் வரை தங்கம் கிடைக்கும் என்று பரபரப்பைக் கிளப்பியுள்ளார் ஷோபன் சாமியார்.
உன்னாவ் மாவட்டத்தில் தாண் டியா கேரா கிராமத்தில் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோட்டை உள்ளது. ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டபோது நேடாபகுதியில் குறுநில மன்னராக இருந்தவர் ராஜா ராவ் ராம் பக்ஸ் சிங். அவர் ஜான்சி ராணி, லட்சுமி பாயு டன் இணைந்து ஆங்கிலே யர்களுக்கு எதிராகப் போரா டியதால் 1857 ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார்.
அது அவ்வாறிருக்க, "ராஜா ராவ் ராம் பக்ஸ் சிங், தாண் டியா கேரா கிராமத்தில் உள்ள கோட்டையில், ஆயிரம் தொன் தங்கத்தை புதைத்து வைத் துள்ளார். அதை அவர் என் கனவில் வந்து சொன்னார்" என்று கடந்த வாரம் புரளி யைக் கிளப்பினார் ஷோபன் சர்கார் என்ற சாமியார். அதை நம்பி அந்தப் பகுதியில் இப் போது ஆய்வுகளை மேற் கொண்டு வருகின்றது இந்திய அரசு. ஆரம்ப கட்ட ஆய்வுக ளில், கோட்டையை சுற்றி பூமிக்கடியில், ஏதோ உலோ கம் இருக்க வாய்ப்பு உள்ளது என்று அகழ்வாராய்ச்சித்துறை யினர் வேறு கூறியுள்ளனர்.
இந்நிலையில் கான்பூரில் ஆதம்பூர் கிராமத்தில் உள்ள மற்றொரு கோட்டையிலும் தங்கம் இருக்கின்றது. அங்கு 2 ஆயிரத்து 500 தொன் வரை தங்கம் இருக்கக்கூடும் என்று புதுக் கதையைக் கிளப்பியுள் ளார் ஷோபன் சாமியார்.
தொல்பொருள் துறையினர் மேற்கொண்டுள்ள தங்கம் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஏமாற்றம் ஏற்பட்டால் அது தொடர்பாக என் மீது சட்டபூர்வ மாக நடவடிக்கை எடுக்க, 10 லட்சம் ரூபா வைப்புச் செய்துள் ளேன் என்று வேறு கூறுகின் றார் சாமியார்.
தங்கம் கிடைக்கிறதா? அல் லது சாமியார் ஆச்சிரமத்துக்கு வேறு இடம் தேடுகிறாரா என் பதை பொறுத்திருந்து பார்ப் போம். (ற)



உத்தரபிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் அருந்திய 39 பேர் உயிரிழந்துள்ளனர். முபாரக்பூர் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அந்தப் பகுதியில் உள்ள 8 கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக் கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. மதுபானம் அருந்தியவர்களில் உடல்நலம் பாதிக்கப்பட்டவர்கள் மருத்து வமனைக்குக் கொண்டு செல்வதற்கு முன்னதாகவே உயிரிழந்தனர் என்றும் தெரியவருகின்றது. ஆபத்தான நிலை யில் 50க்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற)

# 72 மணி நேரத்தில் 20 குழந்தைகள் சாவு

### மேற்கு வங்கத்தில் அதிர்ச்சி

புதுடில்லி, ஒக்.21
இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள மால்டா அரச வைத்தியசாலை ஒன் றில் சேர்க்கப்படும் பச்சிளம் குழந்தைகள் அதிகளவில் உயிரிழந்ததை அடுத்து பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.
கடந்த மே மாதம் 16 குழந் தைகள் அங்கு இறந்துள்ளன. அந்த உயிரிழப்புகள் சத்து குறைபாடுமற்றும்எடைகுறைவு காரணமாக ஏற்பட்டுள்ளன என்று மருத்துவர்கள் அறிக் கையிட்டுள்ளனர்.
இந்நிலையில் மால்டா மருத் துவமனையில் கடந்த 72 மணி நேரத்தில் மட்டும் 20 குழந்தைகள் உயிரிழந்துள் ளன. அவற்றில் 10 குழந்தை கள் கடந்த 24 மணி நேரத் தில் உயிரிழந்துள்ளன.
அதையடுத்து அங்கு பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. மருத்து வர்கள் மற்றும் மருத்துவ மனை ஊழியர்களின் அலட்சி யம் காரணமாகவே குழந் தைகள் உயிரிழந்துள்ளன என்று பெற்றோர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.
குழந்தைகளை மருத்துவ மனையில் சேர்க்கும்போது பல மருத்துவ உபகரணங்கள் வேலை செய்யவில்லை என் றும், சில மருத்துவர்கள் மட் டுமே சிகிச்சை அளித்தனர் என் றும் அவர்கள் தெரிவித்துள்ள னர்.
எனினும் அந்தக் குற்றச்சாட் டுக்களை மறுத்துள்ள மருத்து வமனை நிர்வாகம் மால்டா அருகில் உள்ள கிராமங்களில் பிறந்த அந்த குழந்தைகள் உயிருக்கு ஆபத்தான நிலையி லேயே மருத்துவமனைக்கு கொண்டு வரப்படுகின்றன. அவை அனைத்தும் சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளே என்று விளக்கமளித்துள்ளது.
தற்போது குறித்த குற்றச்சாட் டுக்கள் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று அந்த மாநில அரசு கூறியுள்ளது. (ற)

**கடந்த மே மாதம் 16 குழந் தைகள் அங்கு இறந்துள் ளன என்று கூறப்படுகின்றது**

# குஜாரத் மாநிலம் இன்னும் வளர்ச்சியடையவில்லை

### நாராயணசாமி கூறுகின்றார்

சென்னை, ஒக்.21
குஜராத் மாநிலம் இன்னும் முழுமையான வளர்ச்சி அடையவில்லை என்று மத் திய இணை அமைச்சர் நாராய ணசாமி குற்றம்சாட்டியுள்ளார்.
சென்னை விமானநிலையத் தில் செய்தியாளர்களை சந் தித்த மத்திய இணை அமைச் சர் நாராயணசாமி,
"குஜராத் மாநிலம் இன்னும் முழுமையான வளர்ச்சி அடையவில்லை. அங்கே விவ சாயிகள் தண்ணீர் இல்லா மல் அவதிப்பட்டு வருகின்ற னர். விவசாயத்துக்குத் தண் ணீர் இல்லாமல் விவசாயிகள் தற்கொலை செய்துகொள் கிறார்கள்.
அந்த மாநிலத்தில் தொழில் வளர்ச்சி மட்டும்தான் வளர்ச்சி அடைந்துள்ளது. குஜராத் மாநி லம் மற்ற துறைகளில் இன் னும் முழுமையான வளர்ச்சி அடையவில்லை" என்று தெரிவித்தார். (ற)

# மங்கள்யான் விண்ணை பார்க்க தாமதமாகும்

பெங்களூர், ஒக்.21
செவ்வாய்க் கிரக ஆய்வுக் காக அனுப்பவுள்ள மங்கள் யான் செயற்கைக் கோளை விண்ணில் செலுத்த மேலும் ஒருவாரம் தாமதம் ஆகும் என்று கூறப்படுகின்றது.
செவ்வாய் கிரகத்தில் மனிதன் வாழ்வதற்கு தேவையான காரணிகள் நிலவுகிறதா? என் பது குறித்து ஆய்வு செய் வதற்காக 'மங்கள்யான்' என்ற விண்கலத்தை இந்தியா விண் ணில் செலுத்த உள்ளது.
இந்த விண்கலத்தை எதிர் வரும் 28ஆம் திகதியில் இருந்து நவம்பர் 19 ஆம் திகதிக்குள் விண்ணில் செலுத்த முடிவு செய்யப்பட்டது.
இந்நிலையில், பசுபிக் கடலில் நிலவும் மோசமான வானிலை காரணமாக செயற்கைகோளை விண்ணில் செலுத்தும் திகதி தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்று இஸ்ரோ செய்தி தொட ர்பாளர் தெரிவித்துள்ளார். (ற)

# பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்க கூடாது

### பெரியார் திராவிடர் கழகம் ரயில் மறிப்புப் போராட்டம்

சென்னை, ஒக்.21
இலங்கையில் நடைபெற வுள்ள பொதுநலவாய மாநா ட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று வலியுறுத்தி தந்தை பெரியார் திராவிடர் கழகத்தால் சென்னையில் நேற்று ரயில் மறிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
தாம்பரத்திலிருந்து சென்னை கடற்கரை தடவழி மின்சார ரயிலின் முன் ஐம்பதுக்கும் மேற்பட்ட பெரியார் திராவிடர் கழகத்தினர் அமர்ந்து போராட் டத்தில் ஈடுபட்டனர்.
அதேபோன்று குரோம் பேட்டை, பல்லாவரம் ரயில் நிலையங்களிலும் பெரியார் திராவிடர் கழகத்தினர் ரயில் மறிப்புப் போராட்டத்தில் ஈடு பட்டனர். போராட்டத்தின் போது இலங்கையில் நடை பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரி வித்து அவர்கள் கோஷங் களை எழுப்பினர்.
போராட்டத்தால் ரயில் சேவை கள் தடைப்பட்டதை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட அனை வரையும் பொலிஸார் கைது செய்து அருகில் உள்ள திரு மண மண்டபங்களில் தங்க வைத்துள்ளனர். (ற)

# ஐ.நா. எதிர்ப்பைப் பரிசீலனை செய்க

## சவூதி அரேபியாவிடம் கோருகின்றது அரபு ஒன்றியம்

கட்டார், ஒக்.21
ஐ.நா. எதிர்ப்புப் போக்கைக் கைவிட்டு சவூதி அரேபியா ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இணைந்துகொள்ள வேண்டும் என்று அரேபிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்த அமைப்பின் தலைவர், "ஐ.நாவை எதிர்க்கும் போக்கைக் கைவிட்டு பாதுகாப்புச் சபையில் சவூதி அரேபியா இணைந்து கொள்ள வேண்டும்.
அதன் மூலம் எமது பிரச்சினைகளை நாம் தீர்த்துக்கொள்ள முடியும். மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் இது ஒரு முக்கியமான தருணம். ஆனால்

**பாதுகாப்புச் சபையின் இரட்டை நிலைப்பாடுகளால் அதனால் உலக அமைதிக்காக பணியாற்ற முடியாது. பாதுகாப்புச் சபையில் சீர்திருத்தங்கள் அவசியம் என்று தெரிவித்து சவூதி அரேபியா ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்புரிமையை நிராகரித்துள்ளது.**

சவூதி அரேபியா இவ்வாறு தெரிவித்துள்ளமை ஆச்சரியமளிக்கின்றது. அது தனது நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.
சவூதி அரேபியா இது குறித்து எதுவித கருத்துக்களையும் வெளியிடவில்லை. (ற)

## சிரியாவில் போர் நிறுத்தம் வேண்டும்

நியூயோர்க், ஒக்.21
சிரியக் கிளர்ச்சியாளர்களின் பிடியில் உள்ள பகுதிகளில் உடனடியாகப் போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதநேயத் தலைவர்.
ஐ.நாவின் மனித நேய தலைவரான வெலேரி ஆமோஸ் இதுகுறித்து மேலும் கூறும் போது, "கடந்த ஞாயிற்றுக் கிழமை மட்டும் அவ்வாறான பகுதிகளில் இருந்து சுமார் 3 ஆயிரம் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப் பட்டுள்ளனர். எனினும் மோதல்கள் நடைபெறும் பகுதியில் இன்னும் ஏராளமான பொது மக்கள் சிக்குண்டுள்ளார்கள்" என்று தெரிவித்துள்ளார்.
சிரியாவின் சில முக்கிய பகுதிகள் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ளது. அந்தப் பகுதியில் உள்ள கிளர்ச்சியாளர்கள் உடனடியாகச் சரணடைய வேண்டும் என்று சிரிய இராணுவம் கடந்த வாரம் எச்சரித்திருந்தது. இந்த நிலையில் தற்போது அந்தப் பகுதிகளை நோக்கிக் கடும் தாக்குதலை சிரிய இராணுவம் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.
அதையடுத்தே கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள நகரங்களில் விரைவில் போர் நிறுத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று ஐ.நா. சபை வலியுறுத்தியுள்ளது. சிரிய அரச தரப்புக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே அடுத்த மாதம் பேச்சுக்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)



தாய்லாந்தின் சோன் மாகாணத்தில் வருடந்தோறும் நடத்தப்படும் எருமைச் சவாரிப் போட்டி இந்த ஆண்டும் கோலாகலமாக நடந்தது. நேற்று முன்தினம் நடைபெற்ற அந்தப் போட்டியில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். வருடந்தோறும் ஒக்ரோபர் மாதம் நடத்தப்படும் இந்தப் போட்டி, தாய்லாந்து விவசாயிகள் தமது நெல் அறுவடையை ஆரம்பிப்பதற்கு முன்னதாக நடத்தப்படும் ஒரு பாரம்பரிய நிகழ்வாகும்.(ற)

## அதிகாரிகள் மீது அமிலத் தாக்கு

பீஜிங், ஒக்.21
விற்பனைப் பொருள்களைச் சேமித்து வைப்பதற்காக சட்ட விரோதமாககட்டப்பட்ட கிடங்கை அழிக்க முயன்ற அதிகாரிகள் 19 பேர் அமிலம் வீசி தாக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது.
புஜியான் மாகாணத்தில் பொருள்கள் சேமித்து வைக்கும் கிடங்கு ஒன்று சட்டவிரோதமாகக் கட்டப்பட்டிருந்தது. அதனை அழிக்கும் முயற்சியில் அதிகாரிகள் 19 பேர் ஈடுபட்டிருந்தனர்.
அப்போது அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட கிடங்கின் உரிமையாளர் திடீரென்று அவர்கள் மீது அமிலத்தை வீசினார். அதில் அதிகாரிகள் 19 பேரும் படுகாயமடைந்தனர். அதையடுத்து உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். (ற)

## மனித வெடிகுண்டால் 16 பேர் சாவு

### சோமாலியாவில் சம்பவம்

மொகாடிசு, ஒப்.21
சோமாலியாவில் நடத்தப்பட்ட மனித வெடி குண்டுத் தாக்குதலில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். 30க்கும் அதிகமானோர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.




உணவு விடுதி ஒன்றுக்குள் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வயிற்றில் வெடி குண்டைக் கட்டி வந்த ஒருவர் அதை வெடிக்க வைத்துள்ளார். தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் சாதாரண பொது மக்கள் என்று கூறப்படுகின்றது.
இதுவரை இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர்.
ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அல்-குவைதா அமைப்புடன் தொடர்புடைய அல் சபாப் தீவிரவாத இயக்கம் அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகிறது. அதனால் சோமாலியா அரசுக்கு கென்யா மற்றும் உகாண்டா நாடுகளில் அமைதிப் படையினர் பாதுகாப்பு அளித்து வருகின்றனர். அவர்களை இலக்கு வைத்தே தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (ற)

## வாக்குப்பதிவு நிறுத்தம்

### மாலைதீவில் மீண்டும் சிக்கல்

மாலே, ஒக்.21
மாலைதீவில் நேற்றுமுன் தினம் நடைபெறவிருந்த ஜனாதிபதித் தெரிவுக்கான மறுவாக்குப் பதிவுகள் திடீரென மாலைதீவுப் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.
வாக்குப் பதிவுகள் ஆரம்பிப்பதற்குச் சிறிது நேரத்துக்கு முன்னர் பொலிஸார் வாக்குச் சாவடிகளில் இருந்த அதிகாரிகளை வெளியேறுமாறு அறிவுறுத்தினர் என்று கூறப்படுகின்றது.
இது குறித்து மாலை தீவு தேர்தல் ஆணையம்,
"நாங்கள் வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்த போது பொலிஸார் தேர்தல் அலுவலகத்தை விட்டு வெளியேறும்படியும், தேர்தலை நிறுத்தம்படியும் அறிவுறுத்தினார்கள். தேர்தலுக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும்" என்று கூறியுள்ளது.
இந்த விடயத்தில் உயர் நீதிமன்ற தீர்ப்பு மற்றும் வழிகாட்டுதலைக் கடைபிடிக்கத் தவறியதால் தாம் தலையிட நேரிட்டது என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகின்றது.
கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் வாக்குப்பதிவுகளில் முகமது நஷீத் 45.45 சதவீத வாக்குகளைப் பெற்று முன்னிலை



வாக்குப் பதிவு முடக்கப்பட்டமைக்கு முன்னாள் ஜனாதிபதி நஷீத்தின் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இவ்வாறான அடக்குமுறைகள் தொடர்ந்தால் இன்னொரு மியன்மார் உருவாகும் என்றும் அந்தக் கட்சி எச்சரித்துள்ளது.

வகித்தார்.
எனினும் வாக்குப் பதிவுகளில் முறைகேடுகள் இடம்பெற்றது என்று நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் ஜனாதிபதித் தேர்தலை மீண்டும் நடத்துமாறு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. (ம)

## 'டைட்டானிக் வயலின்'; ரூ.185 மில்லியன்

லண்டன், ஒக்.21
டைட்டானிக் கப்பல் மூழ்கிய போது, அந்தக் கப்பலின் இசைக் குழுவின் தலைவரால் வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் வயலின் 185 மில்லியன் ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
1912ஆம் ஆண்டும் டைட்டானிக் கப்பல் மூழ்கிய போது அந்த வயலின் இசைக்கலைஞரான வெலஸ் ஹோர்ட்லி தனது வயலினை தனது உடலோடு சேர்த்துக் கட்டிக் கொண்டு, "இறைவா உன்னருகில் நான் இருந்தால்" என்ற பாடலை இசைத்துக் கொண்டிருந்தார் என்று கூறப்படுகின்றது.



ஹோர்ட்லியின் உடல் கடல் நீரில் மிதந்து கொண்டிருந்த போது அதிலிருந்த வயலின் மீட்கப்பட்டு அவரது காதலியிடம் கொடுக்கப்பட்டது. அந்த வயலினே தற்போது ஏலத்தில் விற்பனையாகியுள்ளது.
டைட்டானிக் கப்பல் கடலில் உள்ள பனிப் பாறையில் மோதி மூழ்கியதில் 1500 பேர் உயிரிழந்தனர். (ற)

ஹோர்ட்லியின் உடல் கடல் நீரில் மிதந்து கொண்டிருந்த போது அதிலிருந்த வயலின் மீட்கப்பட்டு அவரது காதலியிடம் கொடுக்கப் பட்டது.



## தடம்புரண்ட ரயிலில் பற்றியது தீ

எட்மன்டன், ஒக்.21
கனடாவில் எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயில் ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. அதையடுத்து அந்த ரயில் தீப்பற்றிஎரியத் தொடங்கியுள்ளது.
எட்மன்டன் பகுதியிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. ரயிலில் கச்சா எண்ணெய் மற்றும் பெற்றோலியப் பொருள்கள் இருந்தன என்று பொலிஸார் கூறுகின்றனர். ரயிலின் அனைத்துப் பெட்டிகளிலும் தீப்பற்றியுள்ள நிலையில் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு மாற்றப் பட்டுள்ளனர். (ற)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| அன்னையாக | அமரராக |
|---|---|
| 17.10.1941 | 21.09.2013 |

அன்பின் உருவமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் இலக்கணமாய் - வாழ்ந்த
எங்கள் தெய்வமே!

ஆண்டவன் படைப்பில்
அதிசயப் பிறப்பு நீங்களம்மா
சிரித்த முகமும் சினக்காத குணமும்
உங்களுடன் பிறந்தவையல்லவா

எங்கள் அம்மாவே!
ஆறாத துயரத்தில் எம்மை ஆழ்த்தி விட்டு
மீளாத் துயில் கொண்டதேனோ?
மாதங்கள் ஒன்றல்ல எத்தனை
ஆண்டுகளானாலும் அகலாதம்மா
உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு!

நெஞ்சம் எனும் ஆலயத்தில்
உங்கள் நினைவுகளை நிஜமாக்கி
நாள்தோறும் தொழுகின்றோம்
நாளும் பொழுதும் வணங்குகின்றோம்
உங்கள் ஆத்மசாந்திக்காக!

### திருமதி பூமணி மகேந்திரன்

அன்னாரின் மரணச் செய்திகேட்டு எம்முடன் தொலைபேசியூடாகவும், மின்னஞ்சலூடாகவும், குறுந்தகவலூடாகவும், முகப்புத்தகத்தின் ஊடாகவும் மற்றும் நேரிலும் எமக்கு ஆறுதல் அளித்த அன்பு உள்ளங்கள் எண்ணிலடங்கா. அத்துடன் எம்முடன் இறுதிவரை எம் துயரத்தில் பங்கு கொண்டு மற்றும் உணவளித்த அத்தனை நெஞ்சங்களுக்கும் எம் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சிட்னி, ஆஸ்திரேலியா.** **தகவல்: குடும்பத்தினர்.**

(சி/13146) (10,6,3)

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கநாயகம் நாகரத்தினம்



பிரான்பற்று, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கநாயகம் நாகரத்தினம் நேற்று (20.10.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்பு மனைவியும், பவளராசா (கனடா), பரமேஸ்வரி (கனடா), தங்கராசா (அருள் முருகன் ஹாட்வெயர்-பண்டத்தரிப்பு, முருகன் கிறேசர் - விளான், N.T.R. றான்ஸ்போர்ட்), செல்வராசா (கனடா), கந்தசாமி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், நாகம்மா (கனடா), குமாரசாமி (கனடா), தங்கமலர், லிங்கேஸ்வரி (கனடா), இந்திரமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகுமார், சசிக்குமார், ஜெயந்தி, சுகந்தி, ஸ்ரீபன், செல்வச்சந்திரன், வசந்தகலா, விஜிகலா, சசிகலா, ஜெயச்சந்திரன், சுரேஸ், சுதா, ரமேஸ், அனிதா, கீதா, பவிதா, கவிநேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கர்ன், தனுஷ், தனோஜன், தனுஷன், தனுஜா, ருசானி, தேனுஜா, சச்சின், தனோஜன், அபி, ஆகாஸ், சந்தோஷ், சஸ்மிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **நா.தங்கராசா** (மகன் *N.T.R*)
(அருள்முருகன் ஹாட்வெயர், முருகன் கிறேசர்,
*N.T.R* றான்ஸ்போர்ட்).
T.P : 077 731 4820
**பற்றிமா வீதி, பண்டத்தரிப்பு.**

(33178) (7.6.3)

# நிரந்தர வீடுகளை வழங்குமாறு 54 குடும்பங்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.21

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் கிராமத்தில் 54 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள நட்டாங்கண்டல் கிராமத்தில் மீள்குடியமர்ந்த குடும்பங்களில் 54 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

இந்தப் பகுதியில் உள்ள 150 குடும்பங்களில் 60 குடும்பங்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடனான வீட்டுத் திட்டங்களும், 20 குடும்பங்களுக்கு யு.என். கிபிரட் நிறுவனத்தின் வீட்டுத் திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதனைவிட போரால் சேதங்களை எதிர்கொண்ட 9 வீடுகள் பகுதிக் கொடுப்பனவுகள் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளன.

ஏனைய 54 குடும்பங்களும் மீள்குடியமர்ந்து 4 வருடங்கள் பூர்த்தியான போதும் நிரந்தர வீடுகள் இன்னமும் வழங்கப்படவில்லை.



எனவே, தற்போது பருவ மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் இந்தக் குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இனியாவது தமக்கு நிரந்தர வீடுகளை அமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (எ-6)

# பப்பாசிச் செய்கையினால் ரூ.35,000 வருமானம்

வவுனியா, ஒக்.21

வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பப்பாசிச் செய்கையின் மூலம் தலா ஒவ்வொரு குடும்பங்களும் மாதாந்தம் 35 ஆயிரம் ரூபா வருமானத்தைப் பெறக் கூடியதாக உள்ளது என வவுனியா விவசாயத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இருநூறு குடும்பங்கள் தெரிவு செய்யப்



பட்டு பப்பாசிச் செய்கைகளுக்கான ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் ஒருவாரத்தில் பதினாறாயிரம் கிலோ பப்பாசிப் பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் செய்கையாளர்கள் 35 ஆயிரம் ரூபாவை வருமானமாகவும் பெறுகின்றனர்.

இதன் மூலம் மேற்படி குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் சுயதேவைகளை அவர்களே பூர்த்தி செய்யக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் வவுனியா, புளியங்குளம் பகுதியில் பப்பாசி ஜூஸ் தயாரிக்கும் நிலையமும், பப்பாசி ஜாம் தயாரிக்கும் நிலையமும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-6)

# மீன்பிடி உபகரணங்கள் பெற்றுத்தரக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.21

முல்லைத்தீவு கருநாட்டுக்கேணியில் உள்ள 188 மீனவ குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த மீன்பிடி உபகரணங்களைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு, கொக்கிளாய், கருநாட்டுக்கேணிப் பகுதியில் மீளக்குடியமர்ந்த சுமார் 188 குடும்பங்களுக்கான வாழ்வாதாரத் தொழில் உபகரணங்கள் எவையும் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் தமது வாழ்வாதாரத் தொழில்களைச் செய்ய முடியாமல் உள்ளதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 27 வருடங்களின் பின்னர் இந்தப் பகுதியில் 224 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. இவர்களில் 30 குடும்பங்களுக்கு குல்லாக்களும் வலைத் தொகுதிகளும் 6 குடும்பங்களுக்கு படகுகளும் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய 188 குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. எனவே தமக்கு மீன்பிடி உபகரணங்களைப் பெற்றுத்தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-6)



கிளிநொச்சி, ஒக்.21

கிளிநொச்சியில் விதை நெல்லுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் விவசாயிகள் அதி கூடிய விலை கொடுத்தே நெல்லைப் பெற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

தற்போது காலபோக நெற் செய்கை இடம்பெற்று வருகின்றது. காலபோக செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் தமக்குத் தேவை யான விதை நெல்லைப் பெற்றுக் கொள்வதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது ஒரு மூடை விதை நெல்லின் விலை 3 ஆயிரம் ரூபாவை எட்டியுள்ளது.

வெள்ளப்பாதிப்பு, நோய்த் தாக்கம் காரணமாக தரமான விதை நெல்லை விவசாயிகள் பெற முடியவில்லை. இதனால் தரமான விதை நெல்லுக்கு கேள்வி ஏற்பட்டு விலை அதிகரித்துள்ளது. எனவே கடனடிப்படையில் அல்லது மானிய விலையடிப்படையில் விதை நெல்லைப் பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரியுள்ளனர். (எ-6)




## குரங்குகளின் அட்டகாசம் அதிகரிப்பு


களுவாஞ்சிக்குடி, ஒக்.21

மட்டக்களப்பு,களுவாஞ்சிக்குடி கிராமத்தில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்று கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குரங்குகள் கிராமத்துக்குள் புகுந்து பயன்தரும் மா, வாழை, பலா போன்ற மரங்களில் உள்ள பழங்களைக் கடித்து சேதப்படுத்தி வருகின்றன.

அத்தோடு குரங்குகளின் அட்டகாசத்தால் வீதிகளில் செல்லும் மக்களும் அச்சத்துடனேயே பயணிக்கின்றனர். (ச-32)





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட மத்திய குழுக்கூட்டம் அட்டாளைச்சேனையில் இடம்பெற்றபோது, கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டு அதன் செயலராக கல்முனை மாநகரசபை உறுப்பினர் ஏ.எம்.பறக்கத்துள்ளாஹ் நியமிக்கப்பட்டார். அவர் நியமனக் கடிதத்தை கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் பெற்றுக்கொள்கிறார்.

## கண்காட்சியும் புத்தகங்கள் விற்பனையும்



மட்டக்களப்பு, ஒக்.21

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை திருகோணமலை நகரசபை நூலக மண்டபத்தில் கல்விக்கண்காட்சியும் புத்தக விற்பனையும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ச-40)

# நிலத்தை பறிகொடுத்தால் கலாசாரத்தையும் இழப்போம்

## அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு

எருவில், ஒக்.21

எமது நிலம் பறிபோனால் கலாசாரம், ஒழுக்க விழுமியங்களை இழந்து தமிழ் மக்கள் ஏனைய கலாசாரங்களுக்குள் மூழ்கும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சென். யோசப் குழந்தை யேசுவின் பாலர் பாடசாலையின் பெற்றோர் தின விழா சிசிலியா பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அறிவு என்பது மனிதனுக்கு இயற்கையாகவே இருக்கின்ற ஒன்றாகும். அதனை செயற்படுத்தும் விதத்தில்



தான் அதன் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்படுகின்றது. தாயின் வயிற்றில் இருந்து பிறந்த நாள் முதல் அறிவு வளர ஆரம்பித்து விடும். இந்தச் செயற்பாடு இயற்கையாகவே நிகழும் ஒரு செயற்பாடு ஆகும்.

தமிழர் கலாசாரத்தை இல்லாமல் செய்து தமிழ்த் தேசியத்தை சிதறடித்து மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்களை அபகரிக்கும் நோக்

> தேசியம், கலாசாரம் ஆகியவற்றிலும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்படவேண்டும்.

கோடு எம்மிடையே பலர் திட்டம் தீட்டி செயற்படுவதனை காணமுடிகின்றது.

அவர்களது திட்டமிட்ட செயற்பாடுகளால் எதிர்காலச் சமூகத்தில் பல பின்னடைவுகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகின்றன. வெறுமனே கல்வியை மாத்திரம் கற்றுக்கொண்டு பொறியியலாளராகவோ, வைத்தியராகவோ, கணக்காளராகவோ மாத்திரம் வந்துவிட்டால் போதாது. மாறாக எமது நிலம், தேசியம், கலாசாரம் ஆகியவற்றிலும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்படவேண்டும்.- என்றார். (ச-31)

## விசர்நாய் ஒழிப்பு வேலைத்திட்டம்



மட்டக்களப்பு, ஒக்.21

மட்டக்களப்பு, ஏறாவூர் நகர சபைப் பிரிவில் விசர்நாய் ஒழிப்பு வேலைத் திட்டம் சனிக்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்கள், ஏறாவூர் நகரசபை ஆகியன இணைந்து விசர்நாய் ஒழிப்பு வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

ஏறாவூர் நகரில் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மோட்டார் சைக்கிள் திருடியவர் மாட்டினார்



கல்முனை, ஒக்.21

கல்முனை பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிள்களை திருடினார் என்ற சந்தேகத்தில் கல்முனை பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேகநபர் 6 மோட்டார் சைக்கிள்களைத் திருடியதாக பொலிஸாரிடம் ஒப்புக் கொண்டுள்ளார்.

இவரை பொலிஸார் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது, அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களை கல்முனை பொலிஸ் நிலைய தலைமை அலுவலக பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ.ஏ. கப்பாரின் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர். (ச)

## கலை, இலக்கிய விழாவை முன்னிட்டு கைவினைப் பொருள்கள் கண்காட்சி

### மட்டக்களப்பில் 25 தொடக்கம் 27 வரை


மட்டக்களப்பு மாவட்ட கலை, இலக்கிய விழாவை முன்னிட்டு எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை கைவினைப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளது.

உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாவட்ட செயலகம் இந்தக் கண் காட்சி விற்பனையை நடத்த வுள்ளது என்று மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்ச் செல்வன் தெரிவித்தார்.

கைவினைப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் எதிர்வரும் 25 ஆம் திகதி மாலை 3 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கைவினைப் பொருள்களின் கண்காட்சி மற்றும் விற்பனையில் மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவு களையும் சேர்ந்த கைவினைப் பொருள் உற்பத்தியாளர்கள், அமைப்புக்கள் என நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்ற வுள்ளனர்.

## வட, கிழக்கு இணைப்பை எதிர்க்கிறது மக்கள்கட்சி



மட்டக்களப்பு, ஒக்.21

வடக்கு, கிழக்கை இணைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சியை முஸ்லிம் மக்கள் கட்சி வன்மையாக எதிர்க்கிறது என்று அந்தக் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் இணைந்து இரு மாகாணங்களையும் இணைக்க முயற்சி எடுக்க வேண்டும்

> கிழக்கு முஸ்லிம்களுக்கு தனியான மாகாண நிர்வாக சபை ஒன்றை வழங்காமல் கிழக்கை வடக்குடன் இணைக்கக்கூடாது.

என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கருத்துக் குறித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணம் வடமாகாணத்துடன் இணைந்திருந்த இருபது வருடகாலம் முஸ்லிம்மக்களுக்கு இருண்ட காலமாகவே இருந்த வரலாற்றை நாம் மறந்து விட முடியாது.

இத்தகைய நிலைக்கு புலிகள் மட்டுமல்ல, மேலாதிக்க சிந்தனையுள்ள வட பகுதி அரச ஊழியர்களும் பிரதான காரணமாக இருந்தார்கள்.

இந்த யதார்த்த நிலையை கருத்திற்கொண்டு கிழக்கு முஸ்லிம்களுக்கு தனியான மாகாண நிர்வாக சபை ஒன்றைவழங்காமல் கிழக்கை வடக்குடன் இணைப்பதை முஸ்லிம் மக்கள் கட்சி கடுமையாக எதிர்க்கிறது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல முஸ்லிம் பிரதேசங்களையும் இணைத்து தனியான நிர்வாக சபை வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் உறுதியான கொள்கையாகும். இதனை நிர்வகிப்பதில் எந்த சிக்கலும் ஏற்படாது.-என்றார். (ச)

## வாவியைக் கடப்பதில் மக்கள் பெரும் சிரமம்



மட்டக்களப்பு,வவுணதீவு, நரிப்புல் தோட்டம் பிரதேசத்திலிருந்து பங்குடாவெளி கரைக்கான நீர்வழிப் பயணத்தை மேற்கொள்கின்ற போது பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று மக்கள் தெரிவித்தனர்.

சுமார் 150 மீற்றர் நீளமான இந்த வாவியைக் கடக்க ஐம்பது வருடங்களுக்கு மேலாகக் கட்டு மரங்களும் படகுகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பன்குடா, நெல்லிக்காடு, ஆயித்திய மலை, கரவெட்டி, விளாவெட்டு வான், நாவற்காடு, ஈச்சந்தீவு போன்ற பிரதேச மக்கள் தமது குறுந்தூரப் பயணத்துக்காக கட்டுத் தோணிகளையே நம்பியுள்ளனர்.

எனினும் இந்தப் பயணத்தின் போது பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வியாபாரிகள் எனப் பலரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

இரண்டு படகுகள் பிணைக்கப்பட்ட ஒரேயொரு பாதையே சேவையில் ஈடுபடுத்தப்படுவதால், அது மறுகரையிலிருந்து திரும்பி வந்து, போதுமான ஆள்கள் சேரும் வரை காத்திருக்கும் நிலை ஏற்படுகிறது. அதனால் குறித்த நேரத்துக்கு பயணம் செய்ய முடியாதுள்ளது என்று மக்கள் குறிப்பிட்டனர். (ச)

# ஜனாதிபதி பயணிக்கும் விமானங்களின் பரிசோதனைகளில் திருப்தி இல்லை



கொழும்பு, ஒக். 21
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு விமானப் பயணங்களுக்கு பயன்படுத்தும் விமானங்களின் தகுதிகளைப் பரிசோதிப்பதற்கு அனுபவம் குறைந்த அதிகாரிகள் அமர்த்தப்படுகின்றனர்.
இது குறித்து கணக்காய்வாளர் திணைக் களம் சிவில் விமான சேவை அதிகார சபையின் செயலாளரிடம் உத்தியோக பூர்வ ரீதியாக விளக்கம் கோரியுள்ளது.
ஜனாதிபதி, உத்தியோகபூர்வ விமானப் பயணங்களை மேற்கொள்ள முன்னர் குறித்த விமானங்களின் தரத்தினைப் பரிசோதிப்பதற்கு பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்டுள்ள சிரேஷ்ட அதிகாரிகளே அமர்த்தப்பட வேண்டும்.
எனினும் சிவில் விமான சேவைகள் அதிகார சபை மூன்றாண்டுகளுக்கு குறைந்த அனுபவம் கொண்டுள்ள அதிகாரிகளையே அப் பணியில் இணைத்துக் கொண்டுள்ளது என்று கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.
அதனால் ஜனாதிபதி பயணிக்கும் விமானங்களின் தகுதிகளை நூற்றுக்கு நூறு வீதம் உறுதிப்படுத் துவது சந்தேகமே என்றும் திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.
இதற்கு மேலதிகமாக கணக் காய்வுச் செயற்பாடுகள் தொடர்பாக தேவைப்படும் ஆவணங்கள், கோப்புக்கள் மற்றும் விவரங்கள் ஆரம் பிக் கப்படாது போவதால் சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் செயற் திறனை ஆராய்ந்து பார்க்க முடியாதுள்ளது என்று கணக்காய் வாளர் திணைக் களம் தெரிவித்துள்ளது. (ச-22)

# ஜனாதிபதி தலைமையில் முதலமைச்சர்கள் மாநாடு

முதலமைச்சர்கள் மாநாட்டுக்கு இந்த முறை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை தாங்க விருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வட மாகாண சபை நிறுவப்பட்டதன் பின்னர் முதன் முறையாக இந்த மாநாடு நடத்தப்பட விருக்கின்றது.
மாகாணசபை நிர்வாகம் தொடர்பான தீர்மானங்கள் முதலமைச்சர்கள் மாநாட்டில் எட்டப் படவுள்ளன. அத்துடன் பிரதேச அபி விருத்தி மற்றும் அதிகா ரத்தை செயற்படுத்தல் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் மாநாட்டில் ஆராயப்படும்.
இந்த மாநாட்டில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட வட மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வட மேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர் ஏக்கநாயக்க ஆகியோரும் பங்கேற்கவிருக்கின்றனர்.



# ஜனாதிபதித் தேர்தல் 2015இல்



2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் பல தேர்தல்களை நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என நம் பகரமாகத் தெரியவருகின்றது.
2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையிலும் மூன்று தேர்தல்களை நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தேர்தல்களை எந்தெந்தக் காலங்களில் நடத்துவது என்பது தொடர்பில் அரசின் அரசியல் ஆலோசகர்கள் தயாரித்த அட்டவணையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கியஸ்தர்கள் அங்கீகரித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.
இதன்பிரகாம் 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் மேல் மற்றும் தென் மாகாணங்களில் தேர்தல்கள் நடத்தப் படவிருக்கின்றன. தொடர்ந்து ஊவா மாகாணத் தேர்தல் 2014 ஒக்ரோபர் மாதத்தில் நடத்தப்படும் என்று தெரிவிக் கப்படுகின்றது.
இந்த நிலையிலே 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாத மளவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கும் அரசு தீர் மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது

# இந்திய மீனவர்கள் அத்துமீறல் யாழ்ப்பாணத்தில் அவசர கூட்டம்

## ஜனாதிபதி மஹிந்த உத்தரவு

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறுவதைத் தடுக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் அவசரக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தர விட்டுள்ளார்.
கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்னவிடமே ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.
வடமாகாண முதலமைச்சர் விக் னேஸ்வரன், தமக்கு கீழ்வரும் அமைச்சுகளின் பொறுப்புகளுக்காக ஜனாதிபதியின் முன்னால் பதவிப் பிரமாணம் செய்து கொண்டபின்னரே ஜனாதிபதி மஹிந்த அமைச்சர் ராஜிதவிடம் இவ்வாறு உத்தரவிட்டார்.
இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் வட மாகாண முதலமைச்சர் க.வி விக்னேஸ்வரனையும் ஜனாதிபதி கோரியுள்ளார்.
எனினும் இன்னும் இந்தக் கூட்டத்துக்கான திகதி குறிக்கப்படவில்லை எனவும் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண கடலோரக் கிராமங்களின் கிராம அதிகாரிகளையும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படும் எனவும் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


# இலங்கை அமைச்சர்களின் வருட செலவு ரூ. 350 கோடி

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிசன் தெரிவிப்பு



இலங்கையில் அமைச்சரவைக் காக வருடம் ஒன்றிற்கு 350 கோடி செலவிடப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன் தெரிவித்தார்.
அநுராதபுரத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் பேசும் போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.
எனினும், அமைச்சர்கள் அநேக காலங்களில் தமது பிரதேசங்களில் இருப்பதில்லை எனவும் அவர்களுக்காக பெருந் தொகையான பணம் செலவிடப்படுகிறது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.
அமைச்சர்களது எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் மகாவலி திட்டம் போன்ற இரண்டு திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்றும் ஹரிசன் தெரிவித்துள்ளார்.

# ரயிலிலும் இனிமேல் திடீர் பரிசோதனை



ரயில் மிதிபலகைகளில் பயணிப்பவர்களை கண்டு பிடிப்பதற்கான திடீர் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.
மிதிபலகைகளில் பயணிப்பவர்களால் ஏற்படுகின்ற விபத்துக்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது என திணைக்களத்தின் பாதுகாப்பு அத்தியட்சகர் சேனக்க ஜயசேன தெரிவித்துள்ளார்.
இதைக் கருத்திற்கொண்டே திடீர் பரிசோதனைகள் மேற்கொள் ளப்படுகின்றன. ரயில் மிதிபல கைகளில் பயணிக்கின்றமை, ஓடும் ரயிலில் ஏறுகின்றமை மற்றும் ஓடும் ரயிலில் இருந்து இறங்குகின்றமை போன்ற செயல்கள் ரயில் கட்டளைச் சட்டத்திற்கு அமைய தண்ட னைக்குரிய குற்றங்களாகும் என்று ரயில் பாதுகாப்பு அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

# கொட்டாஞ்சேனையில் படிவம் விநியோகம் பற்றி விசாரணை

## முடுக்கிவிட்டனர் பொலிஸார்

கொழும்பு கொட்டாஞ்சேனையில் இனந்தெரியாத குழு ஒன்று விநியோகித்த படிவம் குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு இது குறித்து பொது மக்கள் முறையிட்டுள்ளனர்.
பெயர், முகவரி, இனம், தொழில் போன்ற விடயங்களை நிரப்பித் தருமாறு கோரியே குறித்த குழுவினர் கொட்டாஞ்சேனை பிரதேச மக்களிடம் குறித்த படிவங்களை விநியோகித்துள்ளனர்.
எனினும் இது குறித்து தமக்கு தெ ரியப்படுத்தப்படவில்லை என்று கொட்டாஞ்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். எனவே படிவங்களை விநியோகித்தவர்கள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோடீஸ்வரர்களாக மாறிய பொலிஸ் உத்தியோகத்தர்கள்

பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் திடீரென பெரும் செல்வந்தர்களாக மாறியுள்ளனர். இதுதொடர்பில் சட்டம் ஒழுங்கு அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.
ஊழல், மோசடிகளில் ஈடுபட்டே குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணம் சம்பாதித்துள்ளனர். குற்றச் செயல்களில் ஈடுபட்டமை குறித்து விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டால், உடனடியாக அவர்கள் பணிநீக்கம் செய்யப் படுவார்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது.
சாதாரண சம்பளத்துக்கு பொலிஸ்சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்கள் பஸ், கடைகள் உள்ளிட்ட பல்வேறு சொத்துக்களுக்கு சொந்தக்காரர்களாக மாறியுள்ளனர்.
இவர்கள் குறுகிய காலத்தில் எவ்வாறு செல்வந்தர்களாக மாறினார்கள் என்பது குறித்து பொலிஸ் திணைக் களத்திலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# விபத்து வழக்குகளுக்கு இனிமேல் துரித தீர்வு

வாகன விபத்துக்களுடன் தொடர்புடைய வழக்குகளை துரிதமாக தீர்ப்பதற்குத் விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சட்டமா அதிபர் திணைக் களம் தெரிவித்துள்ளது.
இதற்கமைய சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கோரப் பட்டுள்ள வாகன விபத்துகள் தொடர்பான வழக்குகளில் குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்டமாஅதிபர் பாலித்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகளுக்கான குற்றப் பத்திரிகைகளை கடந்த சில வாரங்களில் தாக்கல் செய்யப் பட்டுள்ளன. என்றும் சுமார் 500 வழக்குகளுக்கான குற்றப் பத்திரிகைகள் மாத்திரமே இன்ன மும் தாக்கல் செய்யப்பட வேண்டியுள்ளது எனவும் வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதில் தாமதம் நிலவி னால் அது குறித்து எழுத்து மூலம் வினவமுடியும் எனவும் சட்டமாஅதிபர் குறிப் பிட்டுள்ளார்.

# சட்டத்தை மீறிய வர்த்தகர்களிடம் 2014 இல் 84 மில்லி. ரூபா வசூல்

## நுகர்வோர் அதிகாரசபை தெரிவிப்பு

இந்த வருடம் இதுவரையான காலப் பகுதியில் நுகர்வோர் சட்டத்தை மீறிய வர்த்தகர்களிடமிருந்து 84 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட அபராதம் அறவிடப்பட்டுள்ளது.
நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட 36 ஆயிரத்திற்கும் அதிகமான சுற்றிவளைப்புகள் ஊடாக அபராதம் அறவிடப்பட்டது என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.
விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, காலாவதியான உணவு வகைகளை விற் பனை செய்தமை, அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் இந்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
நுகர்வோர் சட்டத்தை மீறும் வர்த்தகர்களை கைது செய்வதற்கான சுற்றி வளைப்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

# அதிவேக தபால் சேவை நவம்பர் முதல் ஆரம்பம்

புதிதாக அதிவேக தபால் சேவை யொன்று ஆரம்பிக்கப் படவுள்ளது. இந்த சேவையைப் பயன்படுத்தி நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் 24 மணித்தியாலங்களுக்குள் பொருள்கள் மற்றும் கடிதங்களை அனுப்பிவைக்க முடியும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதற்காக புதிய தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய வாகனங்களைப் பயன்படுத்தவுள்ள தாக பிரதி தபால் மா அதிபர் டபிள்யூ. ஏ.ஜி.விக்கிரமசிங்க கூறியுள்ளார்.
இந்தப் புதிய அதிவேக தபால் சேவை நவம்பர் மாதம் முதலாம் திகதி அறிமுகப்படுத் தப் படவுள்ளது. அதிவேக தபாலுக்காக ஏற்றுக்கொள்ளப்படும் பொருள்களின் எடையும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிதைக்கப்பட்ட பொருளியல் வளங்களை மீள உயர்த்த ......

பனை வளத்தைக் கட்டி எழுப்பி, அதனை ஆதாரமாகக் கொண்டு, எமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய இயலும். அவ்வாறு செய்வதன் மூலம் , யார் மீதும் தங்கி வாழ வேண்டியதில்லை. அதே போன்று யாருக்கும் அடிபணிந்து போக வேண்யடிதும் இல்லை.

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் வடமாகாண சபையின் விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன். இலங்கையில் ஒரு லட்சம் பனங்கன்றுகளை நடும் திட்டத்தின், ஆரம்ப வைபவத்தில் பங்கு கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் ஒரு லட்சம் பனங்கன்றுகளை நடும் திட்டம் வெள்ளவத்தை றோட்டறிக் கழகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகிலேயே அதிகளவு பனை மரங்கள் இந்தியாவிலேயே உள்ளன. அவற்றில் 50 சதவீதமான பனை மரங்கள் தமிழகத்திலேயே உள்ளன. எமது நாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பதினொரு மில்லியன் பனை மரங்கள் உள்ளன. அவற்றில் ஒன்பதரை மில்லியன் பனை மரங்கள் வடமாகாணத்தில் உள்ளன--

அந்த வகையில், பனை மரம் தமிழ் மக்களின் தேசிய அடையாளம். வறண்ட வலயமான எமது பிரதேசத்தில் பெருங்காடுகள் இல்லாத குறையைப் போக்குவனவும் பனங்கூடல்கள்தான். பொருளாதார ரீதியிலும், சூழலியல் ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்த பனை வளத்தை நாம் இன்னும் உணராமல் இருக்கிறோம்--என்று அமைச்சர் கவலை வெளியிட்டார்.

போரினால் பாதிப்புற்ற தாவரம் பனை வளமே. 4.5 மில்லியன் பனைகள் ஏற்கெனவே அழிக்கப்பட்டுவிட்டன. போரின் பின்னரும் - இப்போதும் -வடக்கில் பனை அழிப்புத் தொடர்கிறது- என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

அவர் தெரிவித்தது போன்று, அனைத்துலக மட்டத்தில் அந்தந்த நாடுகள் தமது இயற்கைத் தாவர வர்க்கத்தை அடிப்படையாக வைத்தே தமது தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புகின்றன.

பனை வளத்தை, நவீன தொழில்நுட்பத் துறைகளின் துணைகொண்டு வடக்கில் மட்டுமன்றிக் கிழக்கிலும் பெருக்கி தமிழர் பிரதேசங்களின் பொருளாதாரத்தைப் பெருக்க மிகப்பெரும் வாய்ப்புண்டு.

தால விருட்சமாகக் கொள்ளப்படும், மதிக்கப்படும் பனை, பல்லாண்டு காலமாக எமது முன்னோர்களினதும் , எங்களதும் வாழ்வோடும் , வளத்தோடும் மட்டுமன்றிப் பண்பாட்டோடும் ஒன்றித்துப் போயுள்ளது.

ஒரு தனி மனிதனாக நின்று பனை வளத்தை வளர்த்த "மில்க் வைற்" கனகராசா இவ்வகையில் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டிய பெருமகன்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமன்றி வன்னிப் பிரதேசத்திலும் மல்லாவிப் பிரதேசத்தில் அவர் நட்ட பனங்கன்றுகள், எமது பிரதான இயற்கை வளத்தின் பயனுக்குப் பேருதாரணமாகக் கொள்ளத்தக்கவை.

போரின் போது நிலைகொண்ட இராணுவம் தனது பாதுகாப்புக் கருதி அமைத்த பதுங்கு குழிகளுக்கு (பங்கர்களுக்கு) குடாநாட்டின் பனை வளத்தை நிர்மூலமாக்கியது. அதனூடு மறைமுகமாக எங்கள் பிரதேசத்தின் வருவாய் தரும் பிரதான வளங்களில் ஒன்றான பனந்தோப்புக்கள் இப்போது வானம் பார்த்த மூலிகளாக மாற்றப்பட்டுவிட்டன.

இன்னொரு வகையில் நோக்கின், எங்களின் சொந்த மண்ணின் பிரதான பொருளாதார இயற்கைவளம், போர் என்ற போர்வையில் துடைத்து எறியப்பட்டுவிட்டது.

எங்கள் மண்ணின் நிலைபேண் அபிவிருத்திக்கான (Sustainable Development) மூலாதாரமாக விளங்கவல்ல பனை வளத்தைப் பெருக்கி உயர்த்தும் பெரும் பொறுப்பு எமது கைக்கு நேரடியாக வந்து சேர்ந்துள்ளது.

பனை தரும் பல்வகைப் பயன்களை அனுபவித்த எமது மூத்தோர்கள், அதற்குக் கற்பகதரு என்று சூட்டிய சிறப்புப் பெயர் மீண்டும் உயர்ந்து எழுவதற்கு, திட்டமிட்ட முறையில் செயற்பட வேண்டிய முழுப் பொறுப்பும் வடக்கு மாகாண சபையினருக்கே உண்டு.

எமது மண்ணுக்கு, மக்களுக்கு இயற்கை தந்த பனை, மண், கடல் வளங்களை- பிரதான வளங்களை- தக்கவாறு பயன்படுத்தி-

இதுவரை காலமும், குறிப்பாகப் போர்க் காலத்தில் சிதைக்கப்பட்ட எமது பிரதேசத்தின் பொருளியல் வளங்களை, முந்தைய நிலைக்குக் கொண்டு வர வேண்டிய முழுப் பொறுப்பும்-

எங்கள் சொந்த மண்ணின் வளங்களைப் பெருக்கி எதிர்காலத்தின் உயர்ச்சிக்கு வித்திடும் வீரியமிகு செயல்திறன்களும், மக்கள் தேவைகளை பாகுபாடுகள், வேறுபாடுகள் இன்றித் தீர்க்கும் ஓர்மமும்- வடக்கு மாகாண சபைக்கு மூலவேர்களாக முகிழ்க்க வேண்டும்-......!

மக்கள் பலமும், துணையும், அவர்தம் ஒத்துழைப்பும் சபையினருக்கான ஆதார சுருதியாக அமையும் என்று நம்பலாம்.

# ஜனாதிபதிக்கு முன்பாக மோதிய அமைச்சர்கள்

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
-கோகுலன்

வடமாகாண சபைக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களுக்கான சத்தியப் பிரமாணம் செய்யும் வைபவத்தையடுத்து அலரிமாளிகை யில் அவர்களுக்காக தேநீர் விருந்து நடைபெற்றது. இந்த விருந்தின் போது அமைச்சர்கள் ரிஷாத் பதியுதீன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோருக் கிடையில் ஏற்பட்ட கடுமையான வார்த்தை மோதல்களின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருவருக்குமிடையில் நடுவராக செயற்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஜனாதிபதியின் அருகில் இந்த இரு அமைச்சர்களும் ஒரே பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் மன்னார் மாவட்டத்திலிருந்து மாகாண சபைக்கு அரசு சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரோடு இலங்கை முஸ்லிம் காங்கிர ஸின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அமீத் மொகமது நியாஸ் (புத் தளம்) ஜவார்ஷா மொகமத் (குருநாகல்) ஆகியவர்களும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

தேநீர் விருந்தின்போது அநுராதபுரத்தில் அண்மையில் இரண்டு முஸ்லிம் குழுக்களுக்கிடையில் இடம்பெற்றதாக வெளிவந்திருந்த செய்தி பற்றி விவாதம் நடைபெற்றது. தேநீர் விருந்தில் விசேடமாக அழைக்கப்பட்டவர்களும் அமைச்சரவை உறுப்பினர்களும் அமர்ந்திருந்தனர். முஸ்லிம்களை 'அந்தவாதிகள்' (தீவிரவாதிகள்) தாக்கியிருப்பதாக காணொளி ஒன்று அறிவித்திருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். இதன் கருத்து யாதெனில் அரச தரப்பு தீவிரவாத குழுவொன்று முஸ்லிம்களை தாக்கியது என்பதாக வெளிக்காட்டுவதுதான் என்றும் ஜனாதிபதி கருத்து வெளியிட்டார். "உண்மையில் அது இரு தரப்பு மோதலேயன்றி வேறில்லை. இனி நீங்கள் எல்லாரும் இரு தரப்பு கோஷ்டி மோதல் என்பதை விட்டு விட்டு முஸ்லிம்களை அரசு சார்ந்த தீவிரவாதிகள் தாக்குவதாக சொல்லப் போகிறீர்களா" என்றார் ஜனாதிபதி.

இரண்டு அமைச்சர்களில் எவர் பக்கமும் அவர் கைநீட்டி இதைச் சொல்லவில்லை. இருந்தாலும் இந்தத் தாக்குதல் யாரை நோக்கி நடத்தப்பட்டது என்பது எல்லாரும் அறிந்ததே. இலங்கையில் முஸ்லிம்கள் இம்சைகளுக்கும், தாக்குதல்களுக்கும் உள்ளாகி வருகிறார்கள் என்ற வகையில் மேற்கு நாடுகளில் இருந்து வந்தவர்கள் மத்தியில் துண்டுப்பிரசுங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது குறித்து ஜனாதிபதி பெரிதும் கவலை கொண்டிருந்தார்.

அநுராதபுரத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் மோதல் ஏன் ஏற்பட்டது என்பதற்கான காரணம் இன்னமும் தெளிவாகத் தெரியவரவில்லை. ஒரு சிங்களப் பத்திரிகையில் வெளிவந்திருந்த செய்தியின்படி , கடந்த புதன் கிழமை அநுராதபுரத்தில் புனித ஹஜ் பெருநாள் தொழுகையின்போது பரபரப்பான நிலைமையொன்று காணப்பட்டது. சாகிரா கல்லூரிக்கு அடுத்துள்ள மைதானத்தில் இடம்பெறவிருந்த தொழுகையில் கலந்து கொள்ள பெண்கள் குழுவொன்றும் வந்திருந்தமையால் அதற்கு ஒரு பிரிவினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். நிலைமையைச் சமாளிக்க பொலிஸாரை அழைக்க வேண்டியேற்பட்டது. குறித்த பிரிவினர் திரைகளைக் கிழித்து அந்தப் பகுதியில் வேலிகள் போட்டு பெண் தொழுகையாளர்களை உள்ளே வரமுடியாதபடி தடை செய்துள்ளனர்.

எதிர்ப்புத் தெரிவித்த குழுவினர் எண்ணிக்கையில் சிறிய அளவிலானவர்கள் என்றாலும் அவர்கள் இஸ்லாமிய விழுமியங்களை தீவிரமாகப் பின்பற்று பவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஏனைய பிரிவினர் அதிக எண்ணிக்கையைக் கொண்டவர்களாவர். இருந்தாலும் குறித்த காணொளியை வெளியிட்ட ஊடகம் ஹஜ் திருநாளன்று சிங்களத் தீவிரவாதிகளே முஸ்லிம்களைத் தாக்கினர் என்று அறிவித்திருந்தது.

ஜனாதிபதியின் கூற்றை பதியுதீன் உடனடியாகவே மறுத்தார். அதற்கு ஜனாதிபதி "என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியும்தானே அந்த மாதிரித்தான் பரப்புரை நடக்கிறது" என்றார்.

இந்தக் கட்டத்தில் அமைச்சர் பதியுதீன் தனது முக்கிய எதிரியான ஹக்கீம் மீது குண்டு ஒன்றை தூக்கிப் போடும் வகையில் "அவர் தேர்தலில் தனித்து போட்டியிடுகிறார். வெளிநாடுகளுக்கு அடிக்கடி பிரயாணம் போகிறார். அவர் எங்களோடு இருப்பவரானால் எமக்கு ஒரு கொள்கை இருக்க வேண்டும்" என்று கூறி குற்றஞ்சாட்ட முனைந்தார். முஸ்லிம் காங்கிரஸில் முக்கிய உறுப்பினராக இருந்து, சந்திரிகா ஜனாதிபதியான போது 2004 ஆம் ஆண்டில் அரசு பக்கம் போனவர் ரிஷாத் பதியு தீன். மேலும் ஹக்கீம் பக்கமாக தலையைத் திருப்பி, "சேர் இவரிடம் அரசிலிருந்து போகமாட்டேன் என்று கடிதம் ஒன்று பெற்றுக் கொள்ளுங்கள்" என்றார் பதியுதீன்.

ஹக்கீமின் முகம் கோபத்தால் சிவந்து போய்விட்டது. நான் துரோகத்தனம் எதிலும் இறங்கிவிடவில்லை என்று உரத்த குரலில் கூறினார். தம்மை பதியுதீன் ஏனையவர்கள் முன்னிலையில் ஒரு மூலைக்குள் முடக்கி விடப்பார்க்கிறார் என்றும் கூறினார்.

"நான் உங்களை மூலையில் முடக்கி விடப் பார்க்கவில்லையென்று" பதியுதீனும் கத்தினார்.

ஹக்கீம் எழுந்து ஜனாதிபதியை நோக்கி நடந்தார். அவர் தோள்மீது கை வைத்து "சேர்! ஆள்கள் முன்னிலையில் இவர் என்னை மடக்கிவிடப் பார்க்கிறார். உங்களுடன் எங்களால் எந்த விஷயத்தையும் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். இவருடன் எனக்கு எந்தவித சம்பந்தமும் கிடையாது" என்று கூறினார்.

ராஜபக்ஷ ஹக்கீமை அமைதிபடுத்தினார். "பதியுதீன் அரசியல் பேசுகிறார். ஆனால் நான் உங்களை மடக்கவில்லையே, பயப்படாதீர்கள்" என்றார். ஜனாதிபதியை பின்னர் சந்திப்பதாகக் கூறிக் கொண்டு கோபத்துடன் ஹக்கீம் வெளியேறினார்.

பதியுதீன் தனது ஆத்திரத்தை இவ்வாறு வெளிப்படுத்தியிருப்பது இது முதல் தடவையல்ல. கிராண்ட்பாஸில் 'பள்ளிவாசல் ஒன்றின் மீது தாக்குதல் இடம் பெற்ற விடயத்தில் தீர்வு காண்பதற்காக நடைபெற்ற பேச்சுக்களின்போது தாக்குதலை தவிர்க்க நடவடிக்கை எடுக்காது போனமையால் பொலிஸ்மா அதி பர் என்.கே. இலங்கக் கோனை பதவி விலகும்படி பதியுதீன் வலியுறுத்தியிருந்தார். அதற்கு மிக அமைதியாகவும், கண்ணியமாகவும் பதிலளிக்கையில் தம்மை பதவியில் அமர்த்தியிருப்பது ஜனாதிபதி என்றும் அதனால் அமைச்சர் பதவி விலகும்படி தெரிவிக்கும் ஆலோசனைக்கு செவி சாய்க்க தேவையில்லையென்றும் பொலிஸ்மா அதிபர் கூறியிருந்தார். இது குறித்து பதியுதீன் பின்னர் ஜனாதிபதியால் கடுமையாகக் கண்டிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இன்னொரு வகையில் செப்ரெம்பர் மாதம் மாகாண சபைத் தேர்தலின் போது முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டமையானது அரசுத் தலைவர்களுக்கு அதிக கவலையைக் கொடுத்திருந்தது. அதுவும் இலங்கையில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாக பரப்புரை இடம்பெற்றிருந்த நிலையில் முஸ்லிம் நாடுகளில் இந்த விடயம் பெரிய அளவில் பரப்புரை செய்யப்பட்டிருந்தமை-நிலைமைகளை மோசமடையச் செய்திருந்தது. முஸ்லிம் காங்கிரஸில் உயர் தலைமையிலுள்ள பலர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிலிருந்து விலகிவிடவேண்டும் என்ற கருத்தை கொண்டிருந்தாலும் ஹக்கீம் அதை விரும்பவில்லை. அவ்வாறான தொரு செய்கை எதிர் விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்று அவர் கருதுகின்றார். அவ்வாறு செய்வது பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளும் நிலைமையை இல்லாமல் செய்துவிடும் என்று அவர் நினைக்கின்றார்.

### உச்சி மாநாட்டில் இந்தியப் பங்களிப்பு

கொழும்பில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பொதுநலவாய உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்வாரா இல்லையா என்பது இன்னமும் தீர்க்கமாக முடிவு செய்யப்படவில்லை என்றாலும் இந்திய மற்றும் சர்வதேச ஊடக செய்திகளின் கருத்துக்களைப் பார்க்கும் போது அவர் கலந்து கொள்ள மாட்டார் என்றே தெரிகின்றது. இருந்தபோதும் ஒரு வரையறுக்கப்பட்ட விதத்திலாவது இந்தியப் பிரதமர் கலந்து கொள்வார் என்றே இலங்கை அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள். இந்தக் குழப்பமான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட மாநாட்டைக் புறக்கணிக்கப் போவதாக செய்தி வந்திருக்கிறது. இருந்த போதும் த.தே.கூட்டமைப்பு இந்தச் செய்தியை மறுத்திருக்கிறது.

அதன் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் கூறுகையில் "பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்று நான் ஒரு போதும் கோரவில்லை. சில பத்திரிகையாளர்கள் எமது நிலை பற்றி கேட்டபோது மாநாட்டை புறக்கணிப்பதா கலந்து கொள்வதா என்பதை உறுப்பு நாடுகள் தான் முடிவெடுக்க வேண்டும் . இருந்தபோதும் பொதுநலவாய நாடுகளின் இந்த நாட்டிலுள்ள மனித உரிமை நிலைமை குறித்து எடுத்துள்ள முடிவைப் புறக்கணித்து விட முடியாது என்று தான் கூறினேன்" என்றார்.

இதற்கிடையில் பொதுநலவாய மாநாட்டில் ஏதாவெதாரு கட்டத்தில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரைக் கொண்டு உரையொன்றை வழங்கும்படி செய்வதற்கு சாத்தியப்படுமா என்பது பற்றி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தலைவர்கள் ஆலோசித்து வருவதாகவும் தெரிகின்றது.

வடக்கு மாகாணத் தேர்தலை வெற்றிகரமாக செய்து முடித்த அரசின் செயலை எடுத்துக்கூறச் செய்வதன் மூலம் நல்லிணக்கத்துக்கான சூழ்நிலையை உருவாக்கலாம் என்று அவர்கள் கருதுவதாகத் தெரிகின்றது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு தொடர்பாக அரசுக்கு ஏராளமான தலையிடிகள் உறுத்திக் கொண்டிருக்கின்றன. இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் வருவாரா இல்லையா என்பது அதில் முக்கியமான ஒன்று. ஆபிரிக்க நாடுகளில் குறைந்தது இரண்டு நாடுகள் இந்தியப் பிரதமரின் இலங்கை வருகையைப் பொறுத்தே தங்களின் வருகை அமையும் என்று கருதுவதாகத் தெரிகிறது. இதற்கிடையில் கொழும்பு நகரில் மாநாட்டுக்கான ஏற்பாடுகள், வழித்தடங்கள் உரிய காலத்தில் முடிவுறுமா என்றும் தெரியவில்லை. போதாக் குறைக்கு மழை வேறு பெய்து வேலைகளை தாமதிக்கச் செய்து கொண்டிருக்கிறது.

கொழும்பு நகரின் தோற்றப்பாட்டை மாற்றியமைக்க எடுக்கப்பட்ட பணிகள் அரைகுறையில் முடிவுற்றால் கொழும்பின் இருந்த அழகும் போய்விடக்கூடும்.

* * *

முழுச் சமுதாயத்துக்கும் மிகவும் முக்கியமானது நீர் என்பது யாவரும் அறிந்ததே. குடிப்பதற்கும், உடலைச் சுத்திகரிப்ப தற்கும், விவசாயத்தை மேற்கொள்ளவும், மின்சார உற்பத்திக்கும், மகிழ்ச்சியான விளையாட்டுக் கும் என்று பல்வேறு செயற்பாடுகளுக்கும் நாம் நீரைப் பயன்படுத்து கின்றோம். இலங்கையில் நீரைப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகள் பல காணப்படுகின்றன. நீரூற்றுக்கள், நதிகள், கிணறுகள், குளங்கள் என்பவற்றிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்கின்றோம். இவற்றுள் மேற்பரப்பு நீர் என்பதைப் பற்றி ஆராய்வோம்.

# மேற்பரப்பு நீரும் அதன் முகாமையும்



கலாநிதி எஸ். சிவகுமார்
(பேராசிரியர்
துரைராஜாவின்
பேருரையிலிருந்து)

நீரானது கடலில் இருந்தும் நில மேற்பரப்பில் இருந்தும், ஆவியாகி மேலே கடத்தப்பட்டு பின்னர் ஆவியான நீர் ஒடுக்கப்பட்டு மீண்டும் கீழே நில மேற்பரப்பில் விழுகின்றது. இந்த நீரின் ஒரு பகுதி ஓடிச்சென்று ஆறுகள், குளங்கள் மற்றும் நீர்த் தேக்கங்களையும், எஞ்சிய நீர் கடலை அடைகின்றது. ஒரு பகுதி நிலத்துக் கூடாக உட்புகுந்து நிலத்துக்கு அடியில் சேருகின்றது. இந்தப் பகுதி கிணற்று நீராகவோ, குழாய்க் கிணற்று நீராகவோ சென்றடைகின்றது. பிரதேசத்துக்கு பிரதேசம் நீர் பெறப்படும் மார்க்கங்கள் மாறுபடுகின்றன. இவற்றை ஒரு பிரதேசத்தின் மண்ணின் வகை, மண்ணின் தன்மை மற்றும் தரைத் தோற்ற அமைப்பு போன்ற காரணிகள் நிர்ணயிக்கின்றன. நீராவியானது ஒடுங்கி மழையாக விழுந்து நிலப்பரப்பை அடைந்து நீர்த்தேக்கங்கள், குளங்கள் மற்றும் ஆறுகளில் சேர்க்கப்படும் நீரே மேற்பரப்பு நீராகும்.

ஆறுகள் உயர்ந்த மேற்பரப்பிலிருந்து தாழ்ந்த பகுதிகளுக்கூடாக நீரோடுகின்ற பாதைகள் உருவாக்கப்படுகின்றன. ஆற்றின் பாதைகள் இயற்கை யாக தரைத்தோற்றத்துக் கேற்ப உருவாக்கப்படுகின்றது. இந்த ஆற்று நீர் கடலுக்குச் சென்றடையாமல் அணைக்கட்டுக்களைக் கட்டி நீர்த் தேக்கங்களுக்கு திசை திருப்புவதன் மூலம் நீர் சேகரிக்கப்படுகின்றது.

மழைவீழ்ச்சியினால் கிடைக்கும் நீர் நீரேந்தும் பிரதேசங்களை அடைந்து குளங்கள் வாவிகளில் சேர்க்கப்படுகின்றது. நீர் நிலத்துக்கூடாக உட்புகுந்து செல்லாமல் இருப்பதற்குக் காரணம் மண்ணின் உட்புகவிடும் தன்மை குறைவாக இருப்பதேயாகும். களிமண்ணின் வீதம் கூடுதலாக உள்ள படுக்கைகள் நீர் உட்புகவிடும் தன்மை குறைந்தவையாகவும், மணல் மண் வீதம் கூடுதலாக உள்ள படுக்கைகள் நீர் உட்புகவிடும் தன்மை கூடுதலாகவும் காணப்படுகின்றன.

பொதுவாக வவுனியா, மன்னார் மாவட்டங்கள் மழைவீழ்ச்சி குறைந்த வறண்ட பிரதேசங்கள். ஆதலால் ஆவியாதல் மிகக் கூடுதலாக உள்ள போதிலும் இதன் மண்ணின் தன்மை நீரைத் தேக்கி குளங்களில் வைக்கக் கூடியதாக உள்ளது. (மன்னார் மாவட்ட கடற்கரையை அண்டியுள்ள பிரதேசங்களைத் தவிர) மழைவீழ்ச்சி மூலம் கிடைக்கப்பெறும் நீர், நீரேந்தும் பிரதேசங்களை அடைந்து குளங்களில் சேர்க்கிறது. இதன்மூலம் மழைகாலம் தவிர்ந்த மழை குறைவாகக் கிடைக்கப்பெறும் காலங்களிலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

மேற்பரப்பு நீரானது அழுத்த வேறுபாடு காரணமாக நீர்த்தேக்கங்களிலிருந்து அணைக்கட்டின் ஊடாக கசிந்து வெளியேறி விரயமாகின்றது. அணைக்கட்டின் நடுப்பகுதிக் குக் களிமண் சேர்த்து இறுக்குவதன் மூலம் கசிந்து செல்லும் நீரின் அளவை கட்டுப்படுத்த முடியும்.

நீர்ப்படுக்கையிலிருந்து நீர் வடிந்து செல்லுதலும், நீர் விரயமாக்குவதற்கு ஏதுவாகின்றது. இதனை குளப்படுக்கைகளில் மண்ணின் தன்மையே நிர்ணயிக்கின்றது. மரங்களின் இலைகள், சருகுகள் படுக்கைகளில் படிந்து நீர் உட்புகவிடும் அளவைக் குறைக்கின்றன. தேக்கி வைக்கும் நீரின் அளவை கூட்டுவதற்கு குளங்களை ஆழமாக்குவது பொருத்தமானதல்ல. இவ்வாறு செய்வதால் குளப்படுக்கைகளின் மேற்பரப்பு மண்ணின் ஒழுங்கமைப்பு குலைக்கப்படும். மேலும் படிந்திருக்கும் இலைகள், சருகுகள் அகற்றப்படும். இந்தச் செய்கைகளால் நீர்மேலும் உட்செல்லும்தன்மையை அதிகரிக்கச் செய்யும் வாய்ப்பு உள்ளது.

மேற்பரப்பு நீர் அசுத்த மாவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். அநேகமாக குளங்கள், வாவிகளில் பெறப்படும் நீரே இவ்வாறு மாசடைகின்றது. மனிதர்கள், விலங்குகள் குளிப்பதாலும் தமது உடைமை களை கழுவுவதற்குப் பாவிப்பதாலும் நீர் அசுத்தமடைகின்றது. மேலும் மரங்களின் இலைகள், சருகுகள் என்பனவும் நீர் மேற்பரப்புக்களில் ஓடிவந்து தேங்குவதனாலும் அதிலுள்ள கழிவுகள் நீருடன் சேர்பட வாய்ப்புண்டு.

வடமாகாணத்தில் இன்று மேற்பரப்பு நீர் விவசாயத்துக்கே கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றது. பெரிய நீர்ப்பாசனக் குளங்களிலிருந்தும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களிலிருந்தும் வாய்க்கால்களின் மூலம் பயிர்ச் செய்கை நிலங்களுக்கு நீர் வழங்கப் படுகின்றது.

நெற்பயிர்ச்செய்கை பெரும்போகம், சிறுபோகம் என்று இரு பெரும் காலங்களில் செய்யப்படுகின்றன. இவற்றில் அநேகமான எல்லா போகங்களிலும் நீர்த்தட்டுப்பாடு காணப்படுகின்றது.

1. நீர்ப்பாசனக் குளம் அல்லது அணைக்கட்டிலிருந்து திறந்து விடப்படும் நீர் திறந்த வாய்க்கால்களின் மூலம் பயிர்ச்செய்கை நிலங்களுக்குச் சென்றடையும்போது ஏற்படும் நீர் இழப்புக்கள்.
2. நீர்ப்பாசனக் குளப்படுக்கையிலிருந்து நீர் உட்புகுதல், அணைக் கட்டின் ஊடாக பக்க வெடிப்பு ஏற்படல், நீர் ஆவியாதல்.
3. கிருமிநாசினி, உரம் பாவிப்பதற்கு மேலதிக நீரை உபயோகித்தல். இதனால் உண்டாகும் உப்புத் தன்மையைப் போக்கவும் மேலும் அதிகளவு நீரை உபயோகித்தல்.
4. பதிவேட்டிலுள்ள விஸ்தீரணத்திலும் பார்க்க அதிகளவு செய்கை பண்ணப்படல்.
5. நீரைச் சிக்கனமாகப் பாவிப்பது பற்றிய அறிவும், ஆர்வமும் குறைவாக இருத்தல்.
6. விவசாய உபகரணங்கள், விதை நெல் மற்றும் வங்கிக்கடன் என்பன விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கிடைக்காமை.
7. பழைய முறைப்படி விவசாய நடவடிக்கைகளை விவசாயிகள் மேற் கொள்ளுதல்.

இவ்வாறு நீர் இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் மேற்பரப்பு நீருக்கு அதிகம் என்பதால் கால போகத்தில் இயன்றளவு குறைந்தளவு நீரைப் பாவித்து அதிகம் சேமித்து அதன் மூலம் கூடியளவு சிறுபோகம் செய்வதற்கு நீர் முகாமைத்துவ நடைமுறைகளை கைக்கொள்ள வேண்டும். பயிர்ச்செய்கை தொடங்க முன்னரே இதனைப் பற்றிய திட்டமிடல் அவசியமாகின்றது. இவ்வாறு திட்டமிடும் போது கிடைக்கக்கூடிய வளங்கள், நீர்ப்பாசனத் திட்டங்களின் செயற்பாடுகள் பற்றிய சரியான தகவல்கள், விவசாயம் செய்கை பண்ணப்படும் காணியின் விஸ்தீரணம், கடந்த கால அனுபவங்கள் மற்றும் விவசாயிகளின் சமூக பொருளாதார நிலைமைகள் ஆகியன கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

பயிர்செய் தரையை இயலுமான வரை சமப்படுத்தி விவசாயம் செய்தலுக்கு பயன்படுத்துதல் நல்லது. மேடு பள்ளமாக இருந்தால் பள்ளப் பகுதி நிரம்பி மேட்டுப்பகுதியை அடைவதற்கு பெருமளவு நீர் விரயமாகும். அத்துடன் பெரும்போகச் செய்கையை திட்டமிட்டவாறு குறித்த நேரத்தில் ஆரம்பிப்பதால் குளத்து நீரைப் பயன்படுத்தி குளத்துநீரை விரயம் செய்யாமல் அக்காலத்தில் பெறப்படும் மழை நீரைப் பயன்படுத்தி குளத்து நீரை அடுத்த போகத்துக்கு சேமிக்கலாம்.

மேலும் சிறுபோகத்தில் வாய்க் கால்களுக்கு அருகில் உள்ள நெல் வயல்களில் தேங்கியிருக்கும் கசிவு நீரைப் பயன்படுத்தி சிறு தானியங்களை உற்பத்தி செய்வதன் மூலம் நீரை முகாமைத்துவம் செய்யலாம். ஓர் ஏக்கர் நெல்லுக்கு தேவையான நீரைக் கொண்டு 3-4 ஏக்கர் சிறுதானியங்களை உற்பத்தி செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நீர்ப்பாசன முகாமைத்துவத்தில் மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசனத் திணைக் களங்களும், கமத் தொழிற்சேவைத் திணைக் களங்களும் பங்காற்றுகின்றன.

இவற்றில் நீர்ப்பாசனத் திணைக் களம் கீழ்வரும் விடயங்களில் பெரும் பங்காற்றுகின்றது.

1. குளத்தில் உட்புகும் வழங்கும் மற்றும் இழக்கப்படும் நீரின் அளவை சரியாக மதிப்பிடல்.
2. பிரதான கிளை விவசாய வாய்க் கால்களைப் பராமரித்தல்.
3. விவசாயிகளுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குதல்.
4. நீர்த் தேவையை சரியாக மதிப்பிட்டு வழங்குதல்.
5. இயலுமானவைர சுழற்சி முறை நீர் விநியோகத்தை நடைமுறைக்கு கொண்டு வரல். இவை எல்லாவற்றிலும் நீர் முகாமைத்துவத்தை சிறப்பாக நடை முறைப்படுத்தலில் பெரும் பங்களிப்பு விவசாயிகளைச் சேர்ந்தது என்பது வெளிப்படை.

# அதிபர்களின் ஆளுமை அனுபவம் தீர்மானங்களை எடுக்க உதவும்

சி. நற்குணலிங்கம்

தேசிய நோக்கம் என்பது பொதுவானது. அதனை அடைய நிறுவன மட்டத்தில் கட்டியெழுப்பிய சிறப்பான கல்வி நோக்கங்கள் எய்தப்படும் போது அதனைப் பயன்தரு பாடசாலை எனலாம். இதனை எட்டுவதில் அவற்றின் தீர்மானம் எடுக்கும் தன்மை முக்கிய இடம் வகிக்கின்றது.

மாணவர் அபிவிருத்தியின் அனைத்து அம்சங்களிலும் சமநிலையான வளர்ச்சி ஏற்பட ஏதுவாக கற்றல்- கற்பித்தல் கருமத் தொடர் பாடசாலையிலுள்ள கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

பாடசாலையில் ஏதேனும் பிரச்சினைகள் தோன்றும்வேளை அதனைத் தீர்க்க அதிபர் எடுக்கும் தீர்மானமானது சில சந்தர்ப்பங்களில் பாடசாலையில் குழப்பத்தை ஏற்படுத்தி பாடசாலைச்செயற்பாட்டைப் பாதித்து உயிரோட்டமாக இயங்கி வந்த பாடசாலையை உயிரற்றதாக மாற்றிவிடக் கூடும். எனவே தீர்மானம் எடுத்தல் என்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும்.

**அதிபர்களுக்கு பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் தேவை**

பொருத்தமற்ற பொறுப்பு வழங்கல், பாகுபாடு காட்டுதல், புரிந்துணர்வின்மை, மனித விழுமியங்களைப் பேணாமை, அளவுக்கு மீறிய எதிர்பார்ப்பு, தொடர்பாடல் குறைபாடு, திறந்த மனத்துடன் கருத்துக்களைப் பரிமாறாமை, தனது கருத்துக்களை சரியாக சமர்ப்பிக்காமை, தன்னலம் பேணல், கவலையீனம், மன எழுச்சிச் சமநிலையின்மை போன்ற காணிகள் அதிபரிடம் குடிகொள்ளுமாயின் பிரச்சினைகள் அதிகரிக்கும். அந்தப் பிரச்சினைகள் பாடசாலைகளில் பல்வேறு பிரதிகூலமான விளைவுகளைத் தோற்றுவிக்கும். ஆசிரியர் குழாம் பிரிவினைப்படும், கற்பித்தல் நேரம் சீர்குலையும், மானிட இடைத் தொடர்புகள் சீர் குலையும், மகிழ்ச்சியற்ற சூழ்நிலை தோன்றும், மனந் திறந்த தன்மை அற்றுப்போகும், சந்தேகம், நம்பிக்கையீன்மை தோன்றும், பாடசாலைக் கடமை களில் ஊக்கமின்மை ஏற்படும், ஆசிரியரது லீவு அதிகரிக்கும், மேலதிக பொறுப்புக்களை ஏற்க மறுப்பர். பாடசாலை முரண்பாடு பற்றி மாணவர்கள், பெற்றோர்கள் சமுதாயம் அறிந்தால் பாடசாலையின் நன்மதிப்பு குறைவடையும், பாடசாலையின் ஒழுக்கம், ஆசிரியரது கௌரவம் பாதிக்கப்படும். இவ்வாறான பாதிப்புக்களிலிருந்து பாடசாலையைப் பாதுகாக்க அதிபருக்கு பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் காணப்பட வேண்டும்.

நிறுவனத்தின் முதற்தர முகாமையாளர் எனும் வகையில், பிரச்சினைகள் தோன்றுமாயின் பிரச்சினையை செவிமடுத்தல், கருத்து உணர்தல், ஆளணி முகாமைத்துவ நுட்பங்களைப் பயன்படுத்தல், பிரச்சினைகளை பகுத்தாய்தல், பிரச்சினைக்கான தீர்வை கலந்துரையாடல், நடுநிலையாகச் செயற்படுதல், நெறிப்படுத்துதல் என்பவற்றோடு நம்பிக்கையாளராகவும் நடந்து கொள்ளல் வேண்டும். ஒரு நிறு வனத் தலைவர் தனது அங்கத்தவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் கலையே தலைமைத்துவமாகும். மற்றையோரின் நடத்தை மீது செல்வாக்குச் செலுத்து பவர் தலைவராவார். அந்த வகை யிலே அதிபர் ஆரோக்கியமான முறை யில் பிரச்சினைகள் எழும் வேளை தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

**கூட்டுத் தீர்மானம் சிறந்த வழி**

தீர்மானம் எடுத்தல் அதிபரை மட்டும் சார்ந்ததல்ல. இதன் ஒரு பகுதி ஆசிரியர்களையும் சாரும். சில தீர்மானங்களை அதிபர், ஆசிரியர்களை அல்லது தம் வசமுள்ள குழுக்களைப் பயன்படுத்தாது தானே தனித்து எடுக்கின்றார்.

இந்த நிலை அதிகமான பலவீனங்களை பாடசாலையில் தோற்றுவிக்கும். அவ்வாறில்லாது தேவையான விடத்து கூட்டுத்தீர்மானம் மேற்கொள்ளல் சிறந்த வழியாகும். பாடசாலைகளில் வரவுக் குழு, கட்டாயக் கல்விக் குழு, ஒழுக்காற்றுக் குழு, முகாமைத்துவக் குழு, சுகாதார மேம்பாட்டுக் குழு, பாடசாலை அபிவிருத்திக் குழு எனப் பல்வேறு வகையான குழுக்கள் உள்ளன. பிரச்சினைகள் தோன்றும்போது உரிய குழுக்கள் ஊடாக ஜனநாயக ரீதியாகத் தீர்மானம் எடுத்தல் மூலம் பாடசாலை ஆரோக்கியமாக, உயிரோட்டமாக இயங்கும். எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த மனப்பாங்கு விழுமியங்களால் ஊட்டப்படுவதோடு அவர்களின் அறிவு, திறனை விருத்தி செய்து நாட்டின் எதிர்காலத் துக்குப் பொருத்தமான செயலாற்றல் உள்ள பிரஜைகளை உருவாக்க முடியும்.

பாடசாலைகளில் தரவுகளைக் கொண்டு சரியான தகவல்களைச் சேகரித்து ஒழுங்கான தீர்மானத்தை எடுத்துக் கொள்ளும் பொறுப்பு அதிபர்களுக்கு உரியது. பாடசாலைகளில் முரண் பாடுகள் , பிணக்குகள், பிரச்சினைகள், கருத்து வேறுபாடுகள் தோன்றும் வேளை அதிபர் தனது ஆளுமை அனுபவத்தி னூடாக சிறந்த தீர்மானங் களை எடுக்கவேண்டும்.

# மகாஜன முன்னாள் அதிபரின் பிறந்ததின நூற்றாண்டு நிகழ்வுகள்





வலி. வடக்கு, ஒக். 21
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நவ மகாஜனன் சிற்பி தெ.து.ஜெயரெத்தினத்தின் நூறாவது பிறந்த நாள் நினைவான மூன்றாம் நாள் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்லூரி அதிபர் கே.வேல் சிவானந்தன் தலைமையில் நடைபெற்றது
மூன்றாம் நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக பொறியிய லாளர் மகாஜனன் தி.ஸ்ரீஸ்கந்தராஜாவும் கௌரவ விருந்தின ராக அமரர் ஜெயரத்தினத்தின் இளைய புதல்வி ஜெயவாணி மகேஸ்வரன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்வபீடத் தலைவர் பேராசிரியர் வைத்தியகலாநிதி எஸ்.சிவபாலன், முன்னாள் செயலாளர் க.சண்முகலிங்கம், ஓய்வு நிலை முகாமையாளர் மக்கள் வங்கி எ.கோபாலகிருஸ்ணன், மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன், தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுலகுமாரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஓய்வு நிலை அதிபர் திருமதி சி.அனந்தசயனன், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி ரி.பேரானந்தராஜா பொறியியலாளர் ம.இராமதாஸ், கணக்காளர் ச.ஸ்ரீகணநாதன் சட்டத்தரணி கே.வி.மகாதேவன், திருமதி நா.ஜெயகாந்தன் ஆகியோரும் கலந்துகெண்டனர்.
காலை 9.00 மணிக்கு கல்லூரி பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் கல்லூரி வாசலில் இருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.
விருந்தினர்களை அழைத்துவருவதுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் கல்விக் கண்காட்சியை பார்வையிடல் மற்றும் நினைவுப் பேருரை மலர் வெளியிடுதல், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு என்பன இடம்பெற்றன. (வ-86)

## வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணின் கைப்பை அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.21
பருத்தித்துறை வீதியில் கோப்பாய்ச் சந்திக்கு அருகில் வீதியால் சென்ற பெண் ஒருவரின் கைப்பையை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரித்துச் சென்றுள்ளனர்.
அபகரிக்கப்பட்ட கைப்பையில் பணம் மற்றும் நகைகள் இருந்த தாகக் குறித்த பெண் தெரிவித்தார்.
இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-
குறித்த பெண் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது அவரை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற திருடர்கள் பெண்ணை கீழே தள்ளி விழுத்திவிட்டு அவரின் கைப்பையை அபகரித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.
இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாகச் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர். (வ-17)

## கல், மணல் விற்பனைக்கு சபையின் அனுமதி தேவை

### வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.21
பிரதேச சபைக்கு உட்பட்ட வலி.கிழக்கு பிரதேசத்தில் கொங்கிறீற் கல் மற்றும் மணல் போன்றவற்றை சபை யின் அனுமதி பெற்றே வியாபார நடவடிக்கையில் ஈடுபட வேண் டும் என்று சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.
பிரதேசத்தில் இவ்வாறு சபையின் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் மற்றும் சிமெந்துக் கற்கள் விற்பனை செய்யப்படுகிறது.
இவற்றை விற்பனை செய்வோர் இந்த மாதத்துக்குள் சபையுடன் தொடர்புகொண்டு அதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
அவ்வாறு சபையின் அனுமதி இன்றி வியாபார நடவடிக் கைகளில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சபை தயாராகி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (வ-17)

## வல்லையில் பலப்படுத்தப்படுகிறது படைமுகாம்

### கண்டிக்கிறார் சிவாஜிலிங்கம்

பருத்தித்துறை, ஒக்.21
வடமராட்சியில் பல பகுதிகளில் இராணுவத்தினர் தமது இராணுவ முகாம்களை வடமாகாண சபைத் தேர்தலின் பின்னர் பலப்படுத்தி வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடமாகாண சபை உறுப்பினருமாகிய என்.கே.சிவாஜிலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வல்லைப் பகுதியில் பரவலாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம் அகற்றப்பட்டு அரச காணியில் வல்லைப் பகுதியில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு இயங்கி வந்தது. ஆனால் தற்போது அந்தப் பகுதியில் இராணுவ முகாமைப் பலப்படுத்தும் முகமாக வேறு புதிய கட்டடங்களும் அமைக்கப்படுகின்றன. இதனை நான் கண்டிக்கின்றேன். வடமாகாண சபைத் தேர்தலின்போது வல்வெட்டித்துறையில் உள்ள இராணுவ முகாமை அகற்றுவதாக குறித்த இராணுவப் பொறுப்பதிகாரி கூறி இருந்தார். ஆனால் வடமாகாண சபைத் தேர்தல் முடிவடைந்து பல மாதங்கள் ஆகிய போதும் இன்னமும் அகற்றப்படவில்லை.
தேர்தலுக்குப் பின்னர் இராணுவப் பலப்படுத்தலை துரிதப் படுத்துவதை கைவிட்டு அரசு சிவில் நிர்வாகத்துக்கு ஒத்துழைக்க வேண்டும்.-என்றார். (வ-422)

## ஈச்சமோட்டை பிரதான வீதி இருளில்

யாழ்ப்பாணம்.ஒக்.21
யாழ்.ஈச்சமோட்டை பிரதான வீதியில் உள்ள சில வீதி விளக்குகள் பழுதடைந்துள்ளதால் குறித்த வீதி இரவில் இருளில் மூழ்கி காணப்படுகிறது.
வீதி விளக்குகள் பழுதடைந்தமையால் இரவில் திருடர்கள் இந்த நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி திருட்டு நடவடிக் கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்-என்று தெரிவிக்கப்படுகிறது.
எனவே வீதியில் பழுதடைந்த வீதி விளக்குகளை மாற்றிய மைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

## தருவது வித்தியா இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களை அறியாமலேயே ஒரு வித படபடப்பு, தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றப் போராட வேண்டியிருக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அகங்காரப் பிரச்சினை வந்து நீங்கும்.

**இடபம்:** தேவையற்ற விடயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படும். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**மிதுனம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கடகம்** : காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**சிங்கம்:** பரபரப்புடன் காணப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளை தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்.

**கன்னி:** சின்னச் சின்ன அவமானங்கள், மனக் கலக்கங்கள் வந்துப் போகும். அடுத்தவர்களை குறை கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். நீங்கள் நகைச்சுவையாகச் சொல்ல கூடிய சில கருத்துக்கள் கூட உண்மையாக வாய்ப்பிருக்கிறது.

**நாளை**
ஐப்பசி-05 செவ்வாய்க்கிழமை 22.10.2013
திதி: திருதியை காலை.07.24 வரை
நட்சத்திரம்: கார்த்திகை கா.06.33 வரை
சுபநேரம்: 10.32 - 12.02 வரை
இராகுகாலம்: 03.02 - 04.32 வரை

**துலாம்:** கடன் பிரச்சினைகள் தீரும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்

**தனுசு:** நீண்ட நாளாக தள்ளிப்போன காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக் குழப்பங்கள் விலகும்.

**மகரம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள்.

**கும்பம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். நட்புச் சூழல் விரிவடையும். அரசுக் காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சியைத் தரும்.

**மீனம்:** வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல் வாதிகளின் சந்திப்பு நிகழும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 1 | | | 5 | 2 | |
| | 5 | | 8 | | 7 | | 6 | 3 |
| | | | 6 | | 9 | 7 | | 4 |
| 9 | 7 | | | | | | 4 | 6 |
| | | | 4 | | 1 | | | |
| 3 | 4 | | | | | | 1 | 8 |
| 5 | | 7 | 3 | | 2 | | | |
| 6 | 9 | | 7 | | 4 | | 5 | |
| | 1 | 4 | | | 5 | | | 7 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 7 | 3 | 6 | 2 | 8 | 1 | 5 |
| 8 | 3 | 2 | 1 | 5 | 4 | 9 | 7 | 6 |
| 6 | 5 | 1 | 9 | 7 | 8 | 2 | 4 | 3 |
| 5 | 2 | 9 | 6 | 4 | 3 | 7 | 8 | 1 |
| 7 | 8 | 4 | 2 | 1 | 5 | 3 | 6 | 9 |
| 3 | 1 | 6 | 8 | 9 | 7 | 4 | 5 | 2 |
| 2 | 9 | 5 | 7 | 8 | 1 | 6 | 3 | 4 |
| 4 | 6 | 8 | 5 | 3 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 7 | 3 | 4 | 2 | 6 | 5 | 9 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்கலை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யனது.

# கல்வி எனும் ஆயுதத்தைக் கையிலெடு




இரா. ஜெயரூபினி

காலநதியின் வேகத்தில் பெண்களின் வாழ்க்கை குடும்பம் எனும் குட்டைக்கு வெளியே சமுத்திரம் காண விரிய வேண்டும். பெண்களின் அறிவு ஆகாயம் காண பறக்க வேண்டும். இவ் உலகை மாற்ற மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி ஆகும். பெண்களைப் பொறுத்தவரை கல்வி மட்டும் என்றே கூறலாம். ஒவ்வொரு பெண்ணும் கல்வி ஆயுதத்தைக் கையில் எடுத்து கொடுமைகளை எதிர்த்துப் போரிட வேண்டும்.

இந்த மண்ணகத்தில் காலனித்துவ ஆட்சி அணைக்கப்பட்டு வந்தாலும் குடும்பம் எனும் வீட்டினுள்ளே ஆண் தலைமை காலனித்துவம் கொழுந்து விட்டு எரிய ஆரம்பிக்கிறது. இவ் ஆணாதிக்கத் தீயை அணைக்க ஒரே வழி கல்வி நதியைப் பெருக்கெடுக்கச் செய்ய வேண்டியது ஒன்றே.

சமவுரிமை, சமத்துவம் கோர முயலும் நாம் அதற்கு முன் ஒரு விடயத்தைச் சிந்திக்க வேண்டும். நாம் எமது அடிப்படைத் தேவைகளையாவது பூர்த்தி செய்யுமளவுக்கு எமது கைகளை வலிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக இந்த ஆணாதிக்க சமூகத்தில் அனைத்து ஆண்களும் தமது சொந்த முயற்சியில் வாழ்கிறார்கள் என்பதில்லை. பெண்களில் தங்கி வாழும் குடும்பங்கள் நிறையவே உள்ளன.

பெண்கள் "செய்வதைச் சரிவரச் செய்ய வேண்டும்." எம் சொந்தக் கால்களில் நிற்க உடனே முடியாவிட்டாலும் முயல வேண்டும். இன்று தந்தையையோ தனையனையோ நம்பி குடும்பத்தினுள் முடங்கிக் கிடந்தது போதும். பெண்ணே! எவ்வளவு காலம் தன் பெற்றோரையும் மற்றோரையும் நம்பி வாழ்வது. இன்று அன்பாய் பார்க்கும் பெற்றோரின் அன்பும்கூட காலாவதியாகக் கூடியதே. பிறரை எதிர்பார்த்து இருப்பது என்றால் எமக்கு எதற்கு இரண்டு கால்களும் கைகளும்?



பெண்கள் “செய்வதைச் சரிவரச் செய்ய வேண்டும்.” எம் சொந்தக் கால்களில் நிற்க உடனே முடியாவிட்டாலும் முயல வேண்டும்.
இன்று தந்தையையோ தனையனையோ நம்பி குடும்பத்தினுள் முடங்கிக் கிடந்தது போதும்.

இவ்வளவு காலமும் சுமையாய் இருந்தது போதும். சுதந்திரமாய் பறக்கும் காலத்தைத் தினமும் எதிர்பார்த்திடுவோம்.

எதையும் தாங்கும் இதயம் கொண்ட பூமித்தாய் கூட தன் பொறுமை இழந்து பூமி அதிர்வாகவும் சுனாமியாகவும் தன் கொடூர முகத்தை வெளிக்காட்டத்தான் செய்கிறாள்.

பெண்களே! என்ன பொறுத்தது போதும். கைகோர்த் திடுவோம். கல்விக் கோலை துணையாய்க் கொண்டு நிமிர்ந்து நின்றிடுவோம்.

# அறிவியலில் பெண்கள்

"நம்மைச் சுற்றியுள்ள சூழலை, தொலைவில் இருக்கும் நட்சத்திரங்களை, கோள்களை, பிரபஞ்சத்தைப் பற்றிய சிந்தனைகளையும் கணிப்புகளையும் நாம் மனிதராக இவ்வுலகத்தில் வாழத் தொடங்கியதில் இருந்தே அறிந்து கொள்ளத் தொடங்கிவிட்டோம். ஆண்களும் பெண்களும் சேர்ந்தே இதைச் செய்தனர். ஆனாலும் மற்றைய இடங்களில் எல்லாம் எப்படிப் பெண்களின் சாதனைகள் மறக்கப்பட்டனவோ அதே போல் இங்கும் பெண்களின் சாதனைகள் பலருக்குத் தெரியாது".

மேரி கியூரி, அநேகமானவர்களுக்குத் தெரிந்த அறிவியலாளர். கதிரியக்கத்திற்கான ஆய்வுக்காக முதலில் அவரது துணைவரோடு சேர்ந்தும் பின் ரேடியத்தைப் பிரித்தெடுத்ததற்காகத் தனியாகவும் நோபல் பரிசைப் பெற்றவர். இவருக்கே முதன் முதலில் இரு நோபல் பரிசுகள் கிடைத்தன. அதோடு இன்றளவில் இவர் ஒருவரே இரு வேறு அறிவியல் தளங்களில் (பௌதிகவியல், இரசாயனவியல்) நோபல் பரிசு பெற்றுள்ளார். இவ்வளவு திறமை மிக்கவரை அவரது இரண்டாவது பரிசு பெற்ற பின்னரும்கூட பிரான்ஸ் நாட்டின் விஞ்ஞான ஸ்தாபனம் அவர் பெண் என்ற ஒரே காரணத்துக்காக உறுப்பினராக இணைக்க மறுத்தது.

இவருக்கும் முந்திய காலத்தில் பெண்களின் மூளைக்கு அறிவியல் நோக்கில் சிந்திக்க சக்தியே இல்லை என்பதே கணிப்பீடாக இருந்தது. பெண்கள் எவ்வளவு திறமையான சிந்தனையாளர்களாக இருந்தார்கள் என்பதற்கும் அவர்களின் கணவர்களோடும் சகோதரர்களோடும் இணைந்து எத்தனையோ ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் செய்தார்கள் என்பதற்கும் நிறைய சான்றுகள் இருந்த போதும் அந்த நாள்களில் அவர்கள் ஆய்வாளர்களின் மனைவிமாராகவும் சகோதரிகளாகவுமே அங்கீகரிக்கப்பட்டார்கள். ஆய்வுகளில் மட்டுமல்ல அறிவியல் எழுத்துகளிலும் அறிவியலைப் பொது மக்களுக்கும் சிறுவருக்கும் விளக்குவதிலும் அறிவியலைப் பிரபலப்படுத்துவதிலும் அக்காலப் பெண்கள் மிக முக்கிய பங்காற்றினர்.


அறிவியல் சமூகத்தில் அங்கீகரிக்கப்படாததாலோ என்னவோ பரந்த சமூகத்தில் அறிவியலின் பங்கு, கடமைகள் பொறுப்புகள் என்பவற்றைப் பற்றி நாம் இப்போது யோசிக்குமளவு அன்று அறிவியல் வட்டத்திற்குள் இருந்த ஆண்களைவிடப் பெண்கள் யோசித்தார்கள். மனித சமுதாயத்தில் மற்றைய விலங்குகளின் உரிமையைப் பற்றி முதலில் சிந்தித்தது அன்னா பர்போல்ட் எனும் பெண் விஞ்ஞானியே. அவரின் மேலதி காரியும் ஒட்சிசனைக் கண்டுபிடித்தவருமான யோசப் பிறீஸ்லி எனும் இரசாயனவியலாளர் சுண்டெலிகளில் பரிசோதனை செய்வார். ஒருமுறை சுண்டெலிகளை ஒரு வெற்றுக் கண்ணாடிப் பாத்திரத்தில் வைத்து காற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக அப்பாத்திரத்திலிருந்து வெளியேற்றும்போது சுண்டெலிகள் படும் அவஸ்தையைக் கண்ட அன்னா, அன்றிரவு சுண்டெலியே எழுதுவது போல் கலாநிதி பிறீஸ்லிக்கு சுண்டெலியின் வேண்டு கோள் எனத் தலைப்பிட்டு ஒரு கவிதை எழுதி அந்த எலிகளின் கூட்டில் ஒட்டி விட்டாராம்.


இக்காலத்தில் அறிவியலுக்கு பங்களிப்புச் செய்த இன்னொரு பெண் மேரி சொமவில் 1780 இல் பிறந்தவர். தனக்குத்தானே கணிதத்தை கற்பித்துக் கொண்டவர். வானியலும் படித்தவர். ஒரு ஓவியரும் கூட. அவர் தன்னைப் பற்றிக் கூறுகையில் "ஏதாவதொன்றில் சாதிக்க வேண்டுமென்ற இலட்சியமுள்ளவள். உலகில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டதை விட உயர்ந்த நிலைக்குச் செல்லும் சக்தி பெண்களுக்கு உண்டென நம்புபவள்" என்றுள்ளார்.

மிகவும் திறமையான எழுத்தாளர். இவரின் அறிவியல் தொடர்பான எழுத்துக்களும் மொழிபெயர்ப்புகளும் அக்காலத்தில் மிகவும் பிரபலமானவை. பொது மக்களிடையே அறிவியல் புரிதலுக்கும் இவரின் எழுத்துக்கள் மிகவும் உதவின. இவரின் சொந்தப் புத்தகமான On the Connection of the Physical Sciences (1834), பல அறிவியல் துறைகளுக்குப் பொதுவான அடிப்படைத் தத்துவங்களையும் செய்முறைகளையும் அழகாக விளக்கியது. அது பற்றி ஒரு பௌதிகவியலாளர் இவ்வாறு கூறியிருந்தார், "இப்புத்தகம் பல விஞ்ஞானத்தின் ஆண்களின் மனதில் வேலைசெய்யும் எண்ணங்களை மிகவும் ஒருங்கிணைத்து இலகுவாக வழிகாட்டக்கூடியவாறு கூறியுள்ளதால் அவர்களின் பல கண்டு பிடிப்பு களுக்கும் வழிவகுக்கும்".

இதன் எழுத்துக்களால் பிற்காலதத்தில் இளம் பெண்களுக்கு இவர் முன்மாதிரியாக இருந்தவர். பதிவின் தொடக்கத்தில் கொடுத்த கூற்றைச் சொன்னவரும் இவரைப் பின்பற்றி அறிவியலுக்கு வந்தவரே. தனியே அறிவியலுடன் மட்டும் நின்று விடாமல் பெண்களுக்கு வாக்களிப்பு உரிமை கிடைப்பதற்கும் அமெரிக்காவில் அடிமை முறை ஒழிக்கப்பட வேண்டுமென்றும் போராடியவர். அக்காலத்தில் விஞ்ஞானத்தின் அரசியாகக் கருதப் பட்ட இவருக்கு, பெண்ணுக்கு ஆய்வு செய்யச் சக்தியில்லை என்ற பொதுவான கருத்தால் அசலான எந்தவித ஆய்வும் செய்ய வாய்ப்புக் கிடைக்கவில்லை. முதலில் மிக நம்பிக்கையுடன் அறிவியல் பாதையில் கால் வைத்தவர், பின் "நான் ஒரு கண்டுபிடிப்பையும் செய்யவில்லை என உணர்கின்றேன். எனக்கு பொறுமையும் புத்திசாலித்தனமும் இருந்தும் நான் ஒரு மேதையல்ல. அதைச் சொர்க்கத்திலிருந்து என் பாலினத்துக்கு வழங்கவில்லை. உயர்ந்த சக்திகள் வேறொரு இருப்பு நிலையில் எமக்கு வழங்கப்படுமா என்பது கடவுளுக்கு மட்டுமே தெரியும்". என்கிறார்.

மிக அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளியியல் விபரப்படி உலகின் மிகச் சிறந்த பல்கலைக் கழகங்களிலேயே கணித/விஞ்ஞானத்துறைகளில் பெண்கள் 207 பதவிகளில் மட்டுமே இருக்கிறார்கள்.





# சிறுவர், முதியோர் மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஒக். 21

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலக சமூக சேவைத் திணைக் களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வுகள் நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினராக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசா, கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ஆசியுரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் முதியோர் கௌரவிப்பும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இடம் பெறும்.

♦♦♦

காரைநகர் பிரதேச செயலக சமூக சேவைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினராக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், காரைநகர் வலயக் கல்விப் பணிப்பாளர் புண்ணியமூர்த்தி ஸ்ரீவிக்கினேஸ்வரன், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி அனந்தராசா ஜான்சி, காரைநகர் அபிவிருத்தி சபைத் தலைவர் உட்பட மற்றும் பலரும் கலந்து கொள்வர்.

காரைநகர் வலந்தலை அமெரிக்கன் மிஷன் வித்தியாலய தரம் 2 மாணவர்களின் பட்டி மன்றம் மற்றும் முதியோர் கௌரவிப்பு, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் 34 பேருக்கு சமுர்த்தி வங்கி மூலம் சேமிப்புக் கணக்கு திறந்து புத்தகங்கள் கையளித்தல் ஆகிய நிகழ்வுகளும் இதன்போது இடம்பெறும்.

(ந-86)

# கரணவாயில் அறிவகம் திறப்பு

கரணவாய் தெற்கு விபுலானந்தர் சனசமூக நிலையத்தின் 'அறிவகம்' திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. சனசமூக நிலையத்தின் தலைவர் கே.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ கலந்து கொள்வார். (ந-422)

## முன்பள்ளி திறப்பு

வரணி நாவற்காடு வாணி முன்பள்ளியின் திறப்பு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் கலந்து கொள்வார். (ந)

## சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தவர் கைது

போயா தினத்தில் சட்டவிரோதமான முறையில் மதுபானத்தை விற்பனை செய்த ஒருவர் இளவாலைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டாரா தலைமையிலான குழுவினர் பண்டத்தரிப்பில் உள்ள ஒரு இடத்தைச் சோதனையிட்டார்கள்.

சனிக்கிழமை இடம் பெற்ற இந்த சோதனை நடவடிக்கையின்போது விற்பனைக்கு தயாரான நிலையில் மறைத்து வைக்கப்பட்டு இருந்த 58 போத்தல் மதுபானத்தைக் கைப்பற்றியதுடன் சந்தேக நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

குறிப்பிட்ட சந்தேக நபர் பொலிஸாரினால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார். (ந-86)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/போக்கட்டி றோ.க.த.க.பாடசாலை





Congratulations

வ.டுல்சன் -157 புள்ளிகள்   இ.லோஜினி -153 புள்ளிகள்

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுடன்

**பொதுப் பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களான**

சி.பானா   ம.கஜந்தன்   அ.அபிலசா
சி.ஹம்சாயினி   ஆ.கிருறாஜ்   பு.ஜீவிகா
செ.டினோசன்   செ.சுஜீபன்

ஆகிய மாணவர்களையும் சித்தியடைவதற்கு உதவிய ஆசிரியரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை, மிருசுவில்.

(C/27610)(45.6.3)



**வாடகைக்கு**

முல்லைத்தீவு நகரில் வீடு/ அறைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 723 8378

(32874)(6.3.4)



**குறைந்த விலையில் சொகுசான பயணம்**

தினசரி கொழும்பு – சென்னை Rs. 7,450/-

கொழும்பு – சென்னை – கொழும்பு Rs. 13,425/- upwards

**திருவனந்தபுரத்துக்கு இப்போது சென்னை வழியாக இணைப்புண்டு**

ONE WAY fare Rs.8,996/- upwards
and return Rs. 19,960/-upwards




✔ Baggage allowance 37 kgs.
✔ Complementary Meals provided
✔ Groups fares offer only over 10 passengers.

Contact for further information:

World of Hayleys
47, Stanley road, Jaffna.
Ph: 021 2221878, 0777730818
or nearest Travel agents
www.airindiaexpress.in

(C/13309)



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால், பொன்னாங்காணித் தைலம் வாங்கும் போது வர்ணமூடியில் **'சித்தாரா டிஸ்பென்சரி'** **'வைத்திய முத்திரைக் குறியீடு'** என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் **'ஒறிஜினல்'** என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப் பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Putalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

(C/12610)(4.6.3)



சேவைநலன் பாராட்டும் மணிவிழா நல்வாழ்த்தும்

இன்று (21.10.2013) திங்கட்கிழமை
பல்கலைசேவையிலிருந்து ஓய்வுபெறும்

திருவாளர் **யோகேஸ்வரன் ஜெயக்குமார்**
(உதவிப்பதிவாளர் – நலச்சேவைகள் கிளை –
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




உங்களுக்கு அகவை அறுபதா!
நேற்றுப்போல இருக்கிறது ஐயா,
ஒன்றா இரண்டா முப்பத்து மூன்றாண்டுகள்
உங்கள் நிழலில் இதம் கண்டவர்கள் நாங்கள்
அன்பு, பாசம், கனிவு, இங்கிதம், பொறுமை.......
எல்லாவற்றுக்கும் ஒருசேர அர்த்தம் தந்தவர் நீங்கள்
எழுதுவினைஞனாகக் கோல் தாங்கி
உதவிப் பதிவாளராய் பல்கலைச் சமூகத்தினர்
இதயங்களில் ஜெயமாக உட்கார்ந்தவரே!
உங்கள் கடமைக்குக் காலம் இல்லை
சுமக்கும் வலிமைக்கு அளவு இல்லை
சுமையைச் சுகமாக மாற்றும் விந்தை
டிம் லைற்றுப் போல எந்நேரமும் ஒரு புன்னகை
எத்தனை அற்புதம் ஐயா! நீங்கள்
மாணவர், ஊழியர் எல்லோரும் ஒருசேர மதிக்கும்
பல்கலைக் கழகத்தின் தனி அடையாளம் நீங்கள்
உதவிப்பதிவாளராம் எத்தனை பெயர்ப் பொருத்தம்
உந்தன் நன்மதிப்பால் நன்கொடைகள் ஈர்க்கச்செய்தாய்
இடர்கண்டு உதவும் உதவிகளால்
மாணவர் பலர், நலன் பெறவைத்தாய்
அண்டினோர்க்கு ஒரு தந்தையாய் தயை காட்டுவவேர!
முகக்குறிப்பில் முழுதும் உணர்பவரே!
ஆயிரத்தில் ஒருவன் ஐயா நீங்கள்
உங்களுக்கு ஏது ஓய்வு
வாழ்த்துகிறோம் வாழ்க பல்லாண்டு..............

இவரின் ஓய்வுகாலம் மகிழ்வும், சிறப்பும், குடும்பத்தில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ எல்லாம்வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரனை வேண்டி நிற்கும்

வாழ்த்து ஒருங்கிணைப்பு
நலச்சேவைகள் கிளை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அலுவலக உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக
ஏனைய துறை நண்பர்கள் மற்றும்
ஓய்வுபெற்ற பல்கலை நண்பர்கள்

(33118) (45.6.3)



**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**
**தரம்-6 அனுமதி**
**(ஆங்கில மொழி மூலம்/தமிழ் மொழி மூலம்)**

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் 2014 ஆம் ஆண்டுக்கான தரம்-6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்று 01.11.2013 இற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: ஆங்கில மொழி மூலம் கற்கும் மாணவர்களின் ஆங்கில மொழி விருத்திக்கான 3 மாத கற்கை நெறி 02.11.2013 பி.ப 4.00 மணிக்கு ஆரம்பிக்கப் படவுள்ளது.

யா/மீசாலை வீரசிங்கம்
மத்திய கல்லூரி.   -அதிபர்-

(சி/27841)(6.3.4)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையில்
2013இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
**செல்வி ஆனந்தராசா அஸ்வினி**
165 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்தமையைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
இவர் கல்வியில் மேலும் பல சிறப்புக்கள்பெற்று
எம்மை மகிழ்விக்க வேண்டுகிறோம்.
இவரது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த
சுதா மற்றும் தயா ஆசிரியைகளையும்
நன்றிகூறி வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்:
மாமா பிரான்சிஸ்
குடும்பத்தினர்
ஆனைக்கோட்டை

(37561)(7.6.3)

# 31 ஆவது நினைவு நாள்

மலர்வு
26 * 05 * 1926

உதிர்வு
21 * 09 * 2013



திருமதி எமிலி றோசலின் தியாகராஜா
(மாட்டீன் ஒழுங்கை)

என்றும் உங்கள் நினைவுகளுடன்

39/10, புது வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். உங்கள் உறவுகள்.
(33102)(3.6.4)

# நல்லை ஆதீனத்தில் சிறப்புற நடந்த சைவ மாநாடும் பட்டமளிப்பு விழாவும்



யாழ்ப்பாணம், ஒக்.21
அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் சனிக்கிழமை நல்லை ஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெற்றது. சைவப்புலவர் மு.திருஞான சம்பந்தம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதலில் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து நாவலர் பெருமானின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு பின்னர் ஊர்வலமாக விருந்தினர்கள் ஆதீன கலாமண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

காலை 9 மணிக்கு முதலாவது அமர்வு இடம்பெற்றது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசியுரையும் 'சைவ நாதம்' வெளியீடும் சிறப்புரைகளும், சைவப் புலவர், இளம் சைவப் புலவர்களுக்கான பட்டமளிப்பும் நடைபெற்றன.

சைவப் புலவர் தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இரண்டாவது அமர்வில் மாண வர்களின் வில்லிசை புராண படலம் நடை பெற்றது. சைவப் புலவர் சு.தேவ மனோ கரன் தலைமையில் நடைபெற்ற மூன்றாவது அமர் வில் 'சைவநீதி' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பெருமளவான சைவப் பெருமக்கள் கலந்து கொண்டனர். (ந-7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19.01.1925

மறைவு
01.11.2012



அமரர் பொன்னம்பலம் சண்முகலிங்கம்

ஓர் ஆண்டு ஆனாதுவோ!
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

அருளகம்
ஆவரங்கால், மேற்கு,
ஆவரங்கால். குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
06 ★ 11 ★ 1926

உதிர்வு
21 ★ 10 ★ 2012



அமரர்
அன்னம்மா முத்துஇராசேந்திரம்

"இறைவா என்னைக் காத்தருளும்
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்"
(தி.பா: 6:1)

தன்னையே உருக்கி ஒளியூட்டி வையத்துள் வாழ்ந்து
தெய்வமாகிவிட்ட எங்கள் அன்புத் தெய்வத்தின்
புன்னகை பூத்த முகமும்
உறவுகளை நேசிக்கும் குணமும்
நட்பு பாராட்டும் தன்மையும்
இனிய நினைவுகளை மனதில் சுமந்து வாழ்கின்றோம்
இறைவன் திருப்பாதம் இன்புற்றிருக்க இறைஞ்சி நிற்கும்

(சி/13132)(3,4.6) குடும்பத்தினர்.

# வேகமாக பரவுகிறது வயிற்றோட்டம்

## மக்கள் விழிப்பாக இருக்குமாறு அறிவுறுத்தல்

நவாலி, ஒக்.21
சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள நவாலி, ஆனைக்கோட்டை, காக் கைதீவு, கல்லுண்டாய் ஆகிய பகுதிகளில் வயிற்றோட்ட நோய் மிக வேகமாக பரவி வரு கின்றது.

அதனால் குறித்த பகுதியிலுள்ள கிணறு களுக்கு பொதுச் சுகாதார பரிசோதகர் பரமசிவம் தலைமையிலான அணியினர் குளோரினிட்டு வருவதுடன் இது தொடர்பாக பொது மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் பல அறிவுறுத்தல்களையும் வழங்கி வருகின்றனர்.

பொது மக்கள் தண்ணீரை நன்கு கொதிக்க வைத்து ஆறிய பின்னர் அருந்துதல் வேண் டும். சாப்பிடச் செல்வதற்கு முன்னர் கைகளை சவர்காரம் இட்டு கழுவுதல், உணவுப் பொருள் களை மூடி வைத்தல், மலசல கூடங்களை துப்புரவாக வைத்திருத்தல், இலையான் பரவ விடாது பார்த்துக் கொள்ளல் போன்ற அறிவுறுத் தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் கிணறுகளுக்கு குளோரின் இடாத வர்கள் சுகாதாரப் பரிசோதகரிடம் சென்று அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவு றுத்தப்பட்டுள்ளது. (ந-100)

# மரண அறிவித்தல்

## முருகன் கதிரவேலு
(V.M.K.லொறி உரிமையாளர்)



கரவெட்டி, கரவெட்டி மத்தி, சம்பந்தர் கடையடியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் கதிரவேலு (V.M.K.லொறி உரிமையாளர்) 19.10.2013 சனிக்கிழமை இறைபத மடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரி யைகள் இன்று (21.10.2013) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம் பெற்று, தகனக்கிரியைகள் சோனப்பு இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரஸ்வதி வித்தியாலய வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. (c/13142)(6.3.4)

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே.இல. 021 226 1045

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
05.11.2003

உதிர்வு
21.10.2009

அமரர் சிவராசா
திசாளினி

திதி : 06.11.2013



அமைதியான தோற்றம்
அன்னம் போல நடை
மெல்லிய புன்சிரிப்பு
மென்மையான கதை
இது தான் எங்கள் திசாளினிக்குட்டி
அவனியில் நீர் இருந்த
காலத்து நினைவலைகள்
என்றென்றும் அகலுமா எமைவிட்டு
தரணியிலே இனியவனாம்
தம்பியவன் அடியெடுக்க
நீர் எங்கு சென்றீரோ!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(29573) (7.6.3)

"சிவாஸ் பஸ்"
சக்கலாவத்தை,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

என்றும் உன் நினைவில்
அப்பா சிவராசா
அம்மா விஜிதா
தம்பி தினுசன்


# விவசாயிகளுக்கு மானிய உரம்

யாழ்ப்பாணம், ஒக்.21
எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்கு உட் பட்ட விவசாயிகளுக்கு மானிய உரம் வழங் கும் நிகழ்வு எதிர்வ ரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் நடை பெறவுள்ளது.

குறித்தகமக்காரஅமைப் புக்கு உட்பட்ட நெற் செய்கை யாளர்கள் அடையாள அட்டை யுடன் வருகை தந்து அன்றைய தினம் உர மானியத்தைப் பெற் றுக் கொள்ளு மாறு கமக்கார அமைப்பின் செயலாளர்இதெய்வேந் திரம் பிள்ளை அறி வித்துள்ளார். (ந-14)

# மரண அறிவித்தல்

## நல்லையா ஜெயக்கொடி
(ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர், பனை அபிவிருத்திச்சபை)



இல.11, பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் இல.41, பழைய பூங்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா ஜெயக்கொடி 20.10.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞா.நல்லையா (முன்னாள் செனட்டர்)-மேரி மெக்டலின் தம்பதியரின் அன்பு மகனும், ஜெயதேவி (பபா), ஜெயராணி (கிருபா), ஜெயமலர்(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற துரைசிங்கம் (மூத்தமணி) மற்றும் அன்ரன் ஞானப்பிரகாசம் (மின் அத்தியட்சகர்) லிங்கராஜா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், இனசென்ரா (UK), பிலிப்ஸ் (வர்த்தகவங்கி, யாழ்ப்பாணம்), பிறிட்டோ (UK),வேர்ஜினியா, யூட், யூலியஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஒல்வியா, எவ்லின், டியாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.10.2013) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு 41, பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுப் பின்னர் பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.41, பழைய பூங்கா வீதி,
"அருள்யோறோஸ்" வாசா, யாழ்ப்பாணம்.
021 222 9143

(33179(3.6.4)


தகவல்:
குடும்பத்தினர்.

எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின்
விடுதலை உரிமைக்காக
உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளன்

# மயில்வாகனம் நிமலராஜன்

அவர்களின்

## 13ஆம் ஆண்டு நினைவு



செய்திக்காய் 05.06.1961 — செய்தியாய் 19.10.2000

கண்டன ஊர்வலத்தில்
கடையடைப்பு போராட்டத்தில்
கால்வேறாய் தலைவேறாய்
போன இடத்தில்
நிமலன் அங்கு நிற்பான்
நீதியாய் செய்தி சொல்வான்

அரசியல் கூட்டத்தில்
அகதிப் பிரச்சினையில்
ஆள் மாறாட்டத்தில்
இடப்பெயர்வில்
நிமலன் அங்கு நிற்பான்
நிலைத்த செய்தி சொல்வான்

தாயகத்தில்..
ஊர்புறத்து திண்ணையில்
உள்ளூர் சந்தியில்
ஆஸ்பத்திரி வாசலில்
அடர்ந்த அடவியில்
நிமலனைக் கண்டால்
நீர் எமக்குச் சொல்லுங்கள்..

நினைவழியா நிமல்!
உனது குரல் ஓங்கி ஒலிக்கட்டும்

உனது நினைவுகளையே சுவாசிக்கும்:
குடும்பத்தினர்,
நண்பர்கள் (கனடா)

(சி/13140) (10,6,3)

# தேசிய இளைஞர் சேவைகள் மன்ற போட்டிகள் வென்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஒக்.21
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் யாழ்.மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட இளைஞர் விருது வழங்கல் போட்டி முடிவுகள் வெளியாகியுள் ளன.

**பேச்சுப் போட்டி (தமிழ்)**
1 ஆம் இடம்- திருமதி சா.சாளினி, 2 ஆம் இடம் -திருமதி ச.செந்தில் குமரன். 3 ஆம் இடம்- க.திவியா.

**பேச்சுப் போட்டி ஆங்கிலம்**
1 ஆம் இடம் - ரி.சந்திரகுமார், 2 ஆம் இடம்-ம.அனுஜா, 3 ஆம்-செல்வி உ.சகானா

**அறிவிப்பாளர் போட்டி (தமிழ்)**
1 ஆம் இடம்- செல்வி ம.அனுஜா. 2 ஆம் இடம்- வி.பிரசாத். 3 ஆம் இடம்- என்.விஜிகாந்தன்.

**அறிவிப்பாளர் போட்டி (ஆங்கிலம்)**
1ஆம் இடம்-செல்விம.அனுஜா, 2 ஆம் இடம்-செல்வி உ.சகானா, 3 ஆம் இடம்- திருமதி சா.சாளினி.

**நாட்டார் பாடல் போட்டி**
1 ஆம் இடம் - செல்வி கீர்த்திகா இரங்கநாதன், 2 ஆம் இடம்- ரி.சந்திரகுமார், 3 ஆம் இடம்-அ.அமிர்தசிந்துஜன்.

**இளம் பாடகர் போட்டி**
1 ஆம் இடம்- என்.ஜெராட் நிரோஜன், 2 ஆம் இடம்- என்.அமிர்தசிந்துஜன், 3 ஆம் இடம் -செல்வி கீர்த்திகா இரங்கநாதன், எஸ்.கஜீபன் ஆகியோர்.

**பரதநாட்டிய போட்டி (பெண்)**
1 ஆம் இடம்-செல்வி வானதி விஸ்வநாகன், 2 ஆம் இடம் - செல்வி எஸ்.நிறஞ்யலா, 3 ஆம் இடம்-செல்வி வித்தியாதரணி விஸ்வநாகன்.

**பரதநாட்டியப் போட்டி (ஆண்)**
1 ஆம் இடம்-பு.கோபிநாத், 2ஆம் இடம்-ச.சஜீவன், 3 ஆம் இடம்-சா.ஜீவசங்கர்.

**தனி நடிப்புப் போட்டி / மௌன நடிப்பு**
1ஆம் இடம்-அ.சுஜீந்திரன், 2 ஆம் இடம்-செல்வி இ.நிவேஜா, 3 ஆம் இடம்-என்.ஜெராட் நிரோஜன், கோ.டிவாங்கர் ஆகியோர்.

**கிராமிய நடனப் போட்டி**
1 ஆம் இடம்-துஷிகரன் குழு, 2ஆம் இடம்- தர்சனா குழு, 3 ஆம் இடம்-தாயங்கி குழு.

**சித்திரப் போட்டி**
1ஆம் இடம் -உதயகுமார் ரம்கீ, 2 ஆம் இடம்- செல்வி கி.காயத்திரி, 3 ஆம் இடம்- க.ரேனுசன், ரா.மதுரியா ஆகியோர்.

**புத்தாக்கப் போட்டி**
1ஆம் இடம் - தேவபாலன் குழு, 2 ஆம் இடம் - புஸ்பராசா, யபர்ணா குழு, 3 ஆம் இடம்- விஜயமோகன் திசோன் குழு ஆகியோர். (வ-14)



யாழ்.நகர மின்சார நிலைய வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது மிகவும் சேதமடைந்த நிலையில் போக்குவரத்துச் செய்ய முடியாது காணப்படுகிறது. யாழ்.நகர மத்தியில் மத்திய பஸ் நிலையத்துக்கு அண்மையில் இவ்வாறு குண்டும் குழியுமாகக் காணப்படும் இந்த வீதியால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இந்த வீதி தனியார் பஸ்கள் மற்றும் ஓட்டோ என்பன பயணிகளை ஏற்றிச் செல்லும் இடமாக பயன்படுவதால் பொதுமக்களும் சாரதிகளும் பல இடர்களைச் சந்திப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர். யாழ்.நகரின் அநேகமான வீதிகள் காப்பெற் வீதிகளாக அமைக்கப்பட்டுள்ள போதிலும் இந்த் வீதி மிகவும் சேதமடைந்துள்ளதை எவரும் கண்டுகொள்ளவில்லையா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றன. (வ-135)


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் தங்கலட்சுமி

சரவணை கிழக்கு, வேலணையைச் சேர்ந்த சுப்பிரமணியம் தங்கலட்சுமி நேற்று (20.10.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நாகமுத்து தம்பதியரின் மருமகளும், சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மார்கண்டு மற்றும் கெங்காதரம், தம்பிராசா ஆகியோரின் சகோதரியும், படிகலிங்கம் காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் தவமலர், விசயலட்சுமி, கிருபாதேவி, கலாநிதி ஆகியோரின் தாயும், குணரத்தினம், சிவராசா, பாலகிருஸ்ணன், காலஞ்சென்ற திருவளர்செல்வி ஆகியோரின் மாமியும், மாலினி, பாரதி, தர்மிளா, சாயி சங்கர், சாயிசங்கவி ஆகியோரின் பேர்த்தியும் சர்மிந்தின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சரவணை, புன்னங்கண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணை கிழக்கு, வேலணை.

தகவல்: சு.படிகலிங்கம் (மகன்)

(33181) (3.6.4)


# பிள்ளைகளை அன்புடன் வழி நடத்தல் அவசியம்

*சித்ரூபானந்தா சுவாமி கருத்து*

குருநகர், ஒக்.21
பெரியோர்கள் பிள்ளைகளை அன்பாக வழிநடத்தினால் அவர்கள் பெரியவர்களை அன்பாக மதித்துச் செயற்படுவர்.

கைதடி அரச முதியோர் இல் லத்தில் நடைபெற்ற சர்வதேச முதியோர் வார நிகழ்வில் ஆசியுரை வழங்கிய சித்ரூபானந்தா சுவாமிகள் இவ்வாறு தெரிவித்தார்.

கைதடி அரச முதியோர் இல்லத்தால் நடத்தப்படும் சர்வதேச முதியோர் வார நிகழ்வில் 5 ஆம் நாள் நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை இல்ல மண்டபத்தில் முதியோர் இல்லத்தில் அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து ஆசியுரை நிகழ்த்திய பருத்தித்துறை ஸ்ரீசாரதாதேவி ஆச்சிரமத்தின் சுவாமி சித்ரூபானந்தா தொடர்ந்து தமது உரையில் தெரிவித்ததாவது:

ஆத்மாவுக்கு வயது கிடையாது. வயது முதிர்ச்சியடையும் போது மனத்தளர்ச்சி ஏற்படக் கூடாது. மனம் திடமாக இருக்க வேண்டும். உடல் திடமில்லாவிட்டாலும் மனம் தளரக் கூடாது. வாழ்க்கையில் மனம்தான் முக்கியம். எமது நாட்டில் தற்போது உள்ள குழப்ப நிலைக்குக் காரணம் இந்த நாட்டில் உள்ள பலரது மனம் சரியாக இல்லாமல் இருப்பது.

இல்லத்தில் வசிக்கும் முதியோராகிய நீங்கள் கவலைப்படக் கூடாது. எல்லோரிடத்திலும் ஒவ்வொரு கெட்டித்தனம் உள்ளது. வாழ்க்கை மிகவும் பெறுமதி வாய்ந்தது. நேரம் பெறுமதி மிக்கது. மாணவர்கள் கடவுள் நம்பிக்கையும் நேர்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஏழைகளிடத்தில் இரக்கம் கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கும் உணவைப் பகிர்ந்து உண்ண வேண்டும். சமயம் என்பது வாழ்க்கை முறை. காதல் வந்தால் கசிவு



வரும் மற்றவர்களுக்கு கொடுத்து வாழ்ந்தால் மனம் விரிவடையும். கொடுப்பதுதான் கஷ்டம். ஏழைகளைப் பார்த்துக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளுக்கு அன்பு காட்டுங்கள் - என்றார். (வ-51)


## மரண அறிவித்தல்

### திருமதி மரியநாயகி செபஸ்ரியாம்பிள்ளை



மண்டைத்தீவைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியநாயகி செபஸ்ரியாம்பிள்ளை நேற்று (20.10.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை- சுவக்கினாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் திரேசம்மா (யோணக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா (திரேஸ்), யோண்லோறட் (யோண்) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சிறில்மரியநேசன் (சிறில்), பற்றிக் ஜெயநேசன் (பாலன்-இலங்கை), காலஞ்சென்ற யோசப் அரியநேசன் (நேசன்-ஜேர்மனி) மற்றும் பிரான்சிஸ் அமலநேசன் (விமலன்-ஜேர்மனி), மேரி அஞ்சலா (தேவி-இலங்கை), மரியகுமார நேசன் (குமார்-கனடா), மரிய கொண்சலா தேவி (றதி-நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும், மேரி ஞானேஸ்வரி, றீசா ஜான்சி, ஆன் மேரிலுமினா, கிறிஷாந்தி, மைக்கல் போல்டன் ஆகி யோரின் அன்பு மாமியும், மேரி றொசானி, யோண்சன், அமலதாஸ் (பவா), யஸ்ரின் அன்ரன் போல், மேரி பேழ்சியா, பற்றிமா நிஷாந்தினி, நிரோஷன், மிதுலா, அன்டர்ஷன், றெனுட்ஷன், அன்ரனி லூட்சன், எமில் மத்தியு, எரிக்போல், நிவேதா, அருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றொய்ஷன், றொய்ஷனா, கைஷனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.10.2013) திங்கட்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
021 7913168 - இலங்கை
004974619681138 - ஜேர்மனி
0049746115833 - ஜேர்மனி
004168886957 - கனடா (077 1104166 - இலங்கை)
004722631655 - நோர்வே

பற்றிமாகிரி, பண்டத்தரிப்பு.

தகவல்: பிள்ளைகள்.

(33180)(10,6,3)


# நூலகக் கண்காட்சி எதிர்வரும் 23 ஆம் திகதி

முல்லைத்தீவு, ஒக்.21
முல்லைத்தீவு- மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை யொட்டிய நூலகக் கண்காட்சி நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பிரதேச சபையால் பாடசாலை மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில் களும் வழங்கப்படவுள்ளன. (எ-6)


## மரண அறிவித்தல்

### கதிரேசு மார்க்கண்டு

(ஸ்தாபகர் - Woodlands Company, Woodlands Hotel, Colombo -11)



புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு மார்க்கண்டு நேற்று முன்தினம் (19.10.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கதிரேசு - வள்ளியம்மை தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற சின்னத்துரை - அன்னம்மா தம்பதியரின் அருமை மருமகனும், புஸ்பவதி (Australia), லிங்கநாதன் (Woodlands), புஸ்பரஜனி (Australia), புஸ்பலதா (Colombo), புஸ்பசாந்தினி (Canada), ஜெகநாதன் (Woodlands) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. பிரபாகரன் (Australia), கிருபா, சஞ்ஜீவன் (Australia), Dr. சோமாஸ்கந்தராசா (Colombo), வாகீசன் (Canada), தர்ஷினி (Colombo), ஆகியோ ரின் அருமை மாமாவும், காலஞ்சென்றவர்களான முத்துவேலு, செல்லமுத்து, தாமோதரம்பிள்ளை, பொன்னம்பலம் மற்றும் ஆறுமுகம் (Canada) ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஆச்சிக்குட்டி, சுந்தரம்பிள்ளை மற்றும் கிருஷ்ணாம்பாள் (Canada), மனோன்மணி (Colombo),தேவரசி (Canada), சரஸ்வதி (Canada), திலகவதி (Canada), Dr. வசந்தகுமார் (USA), தெய்வகுமார் (Canada) ஆகியோரின் அருமை மைத்துனரும், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை வேல்சாமி மற்றும் மகாலட் சுமி, ஸ்ரீகௌரி ஆகியோரின் அருமை சகலனும், ரெஜிகன், அருண், டயான், சகிஷ்ணா, ரகிஷ்ணா, கோவிந்த், திவ்யா, ஹரிஷ்மன், தனுஷா, அனோஜ்மன், புருஷோத்தனன், யஷ்வினி, ஜஸ்மின், ஆஷா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (23.10.2013) புதன்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9/4, Station Road,
Colombo - 04,
T.P. 258 4519

தகவல்: மா.லிங்கநாதன் (மகன்)

(சி.13145) (45.8.3)



கிழக்கில் படுவான்கரையையும் எழுவான்கரையையும் இணைக்கும் மண்முனைப் பாலத்தின் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

# கடும் நிதி நெருக்கடியில் பரீட்சைத் திணைக்களம்

## திட்டமிட்டபடி பரீட்சை நடத்துவதில் சிரமம்

கொழும்பு, ஒக். 21
பரீட்சைகள் திணைக்களத்துக்கு இந்த ஆண்ஸி திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய நிதி ஒதுக்கீடுகளில் 500 மில்லியன் ரூபா இது வரை கிடைக்க வில்லை. அதனால் திணைக்களம் கடும் நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.
திறைசேரியிடமிருந்து நிதி கிடைக்காது போயுள்ளதால் பரீட்சைகள் திணைக்களத்தின் அத்தியாவசியமான செலவினங்களை நிறைவு செய்து கொள்ள முடியாதுள்ளது.
அதனால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்தப்படவுள்ள ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையின் அடிப்படைச் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களத்தின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

> நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காது போனால் திட்டமிடப்பட்டது போன்று பரீட்சைகள் நடத்துவதில் சிரமங்கள் ஏற்படும்.

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம் பெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் பரீட்சை நிலையங்களில் பணியாற்றியுள்ள உத்தியோகத்தர்கள் 1.600 பேருக்கு இன்று வரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.
அந்தக் கொடுப்பனவை வழங்க 250 மில்லியன் ரூபா வரை தேவைப்படுகிறது என்று அந்தத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
பரீட்சைகள் திணைக்களத்தின் அத்தியாவசியமான விடயங்களுக்கு தேவைப்படும் நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காது போனால் திட்டமிடப்பட்டது போன்று பரீட்சைகள் நடத்துவதில் சிரமங்களை ஏற்படும் என்று திணைக்களத் தகவல் மார்க்கங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ச-22)

# வரவு- செலவுத் திட்டத்தில் ஓய்வூதியர்களுக்குத் தீர்வு

## செனவிரத்ன தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 21
2014 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஓய்வூதியர்களின் சம்பள முரண்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தீர்த்து வைக்கப்படும். இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வாக வரவு-செலவுத் திட்டத்தில் 100 வீதமாவது இல்லாது விட்டாலும் 60 வீதம் நிதி ஒதுக்கப்படும்.
இவ்வாறு நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டி.ஜே. செனவிரத்ன தெரிவித்தார்.
750 ரூபாவாக இருந்த ஓய்வூதியர்களின் வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு 1,500 ரூபா வரை அதிகரித்துள்ளமை போன்றே, ஓய்வூதியர்களுக்காக ஆண்டொன்றில் செலவாகும் 110 பில்லியன் ரூபாவுக்குப் பதிலாக 125 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச-22)

> ஓய்வூதியர்களுக்காக 125 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

# சிறைக்கைதிகளுக்கு வாழைப்பழங்கள்

## முதலாம் திகதி முதல் நடைமுறை



கொழும்பு,ஒக்.21
சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு வழங்கப்படும் அன்றாட உணவு வேளைக்கு மேலதிகமாக ஒவ்வொரு வாழைப்பழம் வீதம் வழங்குவதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
வைத்தியர்களின் பரிந்துரை இல்லாது கைதிகளுக்கு இவ்வாறு வாழைப்பழம் வழங்குவது சிறைச்சாலைகள் வரலாற்றில் இதுவே முதற் தடவையாகும். எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து ஒவ்வொரு சிறைக்கைதிக்கும் 65 கிராம் கொண்ட வாழைப்பழம் ஒன்று வாரத்தில் இரண்டு நாள் களுக்கு வழங்கப்படும் என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ச-22)

## பதியப்படாத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு,ஒக்.21
சிவில் விமான சேவைகள் அதிகாரசபையில் பதிவுகளை மேற்கொள்ளாது, சட்டவிரோதமாக விமான பயண அனுமதிச் சீட்டுக்களை விற்பனை செய்யும் முகவர் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
இவ்வாறு சிவில் விமான சேவைகள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.
விமானப் பயண அனுமதிச் சீட்டுக்கள் பயணிகளுக்கு விநியோகிக்கப்பட்ட பின்னர் ஏற்படும் சிக்கல்களை குறைத்துக் கொள்ளவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அதிகாரசபையின் பணிப்பாளர் எச்.எம்.



சி.நிமல்சிறி தெரிவித்தார்.
அரசில் பதிவுகளை மேற்கொள்ளாத நிறுவனங்களை அதிகாரசபையின் கீழ் பதிவு செய்வதற்கு சிவில் விமான சேவைகள் அதிகாரசபை செயற்பட்டு வருகிறது என்று அவர் கூறினார்.
அரசில் பதிவு செய்யப்பட்டுள்ள பயணச்சீட்டு விற்பனை நிறுவனங்களில் மாத்திரம் பயண அனுமதிச் சீட்டுக்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ச-22)

# தமிழக மீனவர் போராட்டம் கைவிடப்பட்டது

சென்னை, ஒக்.21
இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள புதுக் கோட்டை மீனவர்களை விடு விக்கக் கோரி காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் போராட்டத்தை கைவிட்டு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மீண்டும் கடலுக்குள் சென்றனர்.
புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் மற்றும் கோட்டைப்பட்டினம் ஆகிய மீன்பிடி துறைமுகத்தில் இருந்து செப்ரெம்பர் 19 ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்ற 19 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அதே போல, கடந்த 15 ஆம் திதி 15 மீனவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். அதையடுத்து, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 34 மீனவர் களையும் விடுவிக்கக்கோரி புதுக்கோட்டை மீனவர்கள் கடந்த 16 ஆம் திகதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இரண்டு துறைமுகத்திலும் விசைப்படகுகள் நிறுத் தப்பட்டிருந்தன. இதனால் வணிகமும், வருவாயும் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

> செப். 19 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற 19 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

இந்தநிலையில் வேலை நிறுத்தப்போராட்டத்தைக் கைவிட்டு மீனவர்கள் சனிக்கிழமை மீண்டும் கடலுக்குள் சென்றனர்.
இது குறித்து, மீனவர்கள் சங்கத் தலைவர்கள் ஜெகதாபட்டினம் குட்டியாண்டி, கோட்டைப்பட்டினம் சின்ன அடைக்கலம் ஆகியோர் தெரிவித்ததாவது:-
இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை மீன வர்களை மீட்க மத்திய , மாநில அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், போராட் டத்தால் மீனவர்களின் வாழ் வாதாரம் பெரிதும் பாதிக்கப் படுவதைக் கருத்தில் கொண்டே, போராட்டத்தை கைவிட்டு மீன்பிடிக்கும் பணிக்கு சனிக்கிழமை மீனவர்கள் திரும்பியுள்ளனர்-என்றனர். (வ)

# சொந்த நிதியில் செயற்பட்டு வரும் தபால் திணைக்களம்

## திறைசேரி பணம் மீளவும் ஒப்படைப்பு

கொழும்பு, ஒக். 21
கடந்த காலங்களில் நஷ்ட நிலையிலுள்ள நிறுவனமொன்றாகவே தபால் திணைக்களம் அடையாளப் படுத்தப்பட்டிருந்தது. எனினும் 2012 ஆம் ஆண்டில் திறைசேரியினால் தபால் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்த 3,300 மில்லியன் ரூபாவில் 2,100 மில்லியன் ரூபாவை எந்தவொரு தேவைக்கும் பயன் படுத்தாது மீளவும் திறை சேரியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
தற்போது தபால் திணைக்களத்தில் சொந்தப் பணத்தில் தபால் சேவை நடத்திச் செல்லப்படுகிறது. அதனால் தொடர்ந்து திணைக்களத்தினால் தனது சொந்த நிதியில் சேவையை முன் நகர்த்திச் செல்லக் கூடிய ஆற்றல் ஏற்பட்டுள்ளது என்று தபால் மா அதிபர் டி.எல்.பி.ஆர். அபேரத்ன.
139 ஆவது சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு வடமேல் மாகாணத்தில் இடம்பெற்ற அஞ்சல் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த 200 ஆண்டுகளாக தபால் திணைக்களம் அதிக சவால்களைச் சந்தித்துள்ளது. தபால் சேவை கட்டியெழுப்பப்பட வேண்டுமானால் அன்றாடக் கடமைகள் போன்றே வர்த்தகப் பிரிவு குறித்தும் அன்றாடக் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.
தபால் திணைக்களம் மக்களுக்கு அளப்பரிய சேவையை வழங்கி வருகிறது.
அந்தச் சேவையை முறைப்படியாக நடத்திச் செல்வதற்கு அதிகளவு நிதி தேவைப்படுகிறது. அதனால் இவ்வாறு செலவிடப்படும் பணம் நட்டமாகவும் ஏற்படலாம்.
செலவினங்கள் உயர்ந்து சென்றாலும் அதன் மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் சேவைகள் எமக்குத் திருப்தியைத் தருகின்றன.
திறைசேரியிடமிருந்து உதவிகளைப் பெறுவதை நிறுத்தி திணைக்களத்தின் சொந்தப் பணத்தில் செயற்படக் கூடிய முறைமையொன்றை கட்டமைக்க வேண்டியுள்ளது.
தபால் திணைக்களம் முகம் கொடுத்துள்ள சிக்கல்களுக்கு பிரதான கார



ணம் தேவையான வாகனங்கள் எம்மிடம் இல்லாதிருப்பதே ஆகும். தற்போதுள்ள வாகனங்கள் 20 ஆண்டுகளுக்கு மேல் வயதான பழைய வாகனங்களே ஆகும்.
இதன் காரணமாகவே தபால் திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்து விமர்சிக்கப்படுகின்றன. அடுத்த ஆண்டில் தபால் திணைக்களத்துக்குப் புதிதாக 20 வாகனங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. அவற்றுள் ஒன்பது வாகனங்களும் தபால் சேவையை விரிவுபடுத்துவதற்குப் பயன்படுத்தப்படும். இதன் மூலம் அதிக லாபத்தை ஈட்ட முடியும்.
இந்த லாபத்தின் மூலம் 25 ஆயிரம் வரையிலான பணியாளர்களின் ஒத்துழைப்புடன், சம்பளக் குறைபாடுகளையும் நீக்கி தபால் சேவையை மேம்படுத்தி முன்னோக்கி நடத்திச் செல்ல முடியும்.-என்றார். (ச-22)

# சிறைக்குச் சென்றாலும் கூட மஹிந்தவிடம் மண்டியிடேன்

### சொல்கிறார் மங்கள

சிறைக்குச் சென்றாலும் தூக்கு தண்டனை பெற்றாலும் மிலேச்சத் தனமான போக்குடைய - ஊழல் நிறைந்த -தலைவரான மஹிந்த ராஜபக் ஷவிடம் மன்னிப்புக் கேட்கமாட்டேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார். நான் மட்டுமல்ல ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவ்வாறே மன்னிப்புக் கேட்க மாட்டார் எனவும் அவர் குறிப்பிட்டார். மாத்தறை பிரதேசத்தில் ரணில் ஆதரவு மற்றும் எதிராளர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் பாதிக்கப்பட்ட மேல் மாகாண சபை உறுப்பினர் கிரிஷாந்த புஸ்பகுமாரவை நலன் விசாரிக்க நேற்று சென்றபோதே அவர் ஊடகவியலாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் நீதி என்பது நாயின் நிலைக்கு மாறிவிட்டது. தற்போது இலங்கையில் பொலிஸார் மஹிந்தவின் குடும்ப தேவைகளுக்கான சேவை செய்யவே நியமிக்கப்பட்டுள்ளனர். மாத்தறை மாவட்டத்திலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 45 பேர் வரையில் இதுவரை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அன்றைய ஆர்ப்பாட்டத்தில் ஐவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட ஹர்மன் குணதிலக்க எனும் நபரை பொலிஸார் உப சரிக்கும் போது எடுத்த காணொலி ஆதாரம் என்னிடம் உண்டு.

மாத்தறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் அல்லது சர்வதேச மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறையிடவுள்ளேன். இதே வேளை தனியார் ஊடகம் ஒன்றிற்கு எதிராகவும் நீதிமன்றத்தை நாடவுள்ளேன்- என்றார். (ஙு)



எஸ்.ஜலால் டீனின் "பூப்படைந்த பூக்கள்" நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை எருவில் அல் ஹம்றா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த நூலின் முதற்பிரதியை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் வழங்க பணிப்பாளர் ஏ.சீ.யஹீயாகான் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசனலி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கட்டாய கருக்கலைப்பின் மூலம் மலையகத்தில் தமிழின அழிப்பு

### அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் குமுறல்

மலையகத் தமிழர்களை இன அழிப்புச் செய்யும் வகையில் மிகவும் சூட்சுமமான முறையில் கருக்கலைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மலையகத்தமிழ்மக்களிடையே மூளைச்சலவை செய்வதனூடாக இந்தக் கருக்கலைப்பு நடவடிக்கைகள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன என்று மலையக அரசியல் வாதிகள் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

மத்திய அரசின் உதவியுடன் தோட்ட நிர்வாகங்களின் ஊடாக இந்த இன அழிப்பு இடம்பெற்று வருகின்றமை அதிர்ச்சிக்குரியதாகும் என மலையக அரசியல் வாதிகளும், புத்திஜீவிகளும் குற்றஞ்சாட்டுகின்றனர். கருத்தரிக்கும் தாய்மார்களுக்கு தோட்ட நிர்வாகம், சம்பளத்துடன்கூடிய விடுமுறை வழங்கவேண்டுமென்பதால், கருத்தடை செய்வதற்குத் தாய்மார்களை ஊக்குவித்து, அவர்களுக்கு 500 ரூபா கொடுப்பனவும், ஒருவார கால விடுமுறையும் தோட்ட நிர்வாகத் தால் வழங்கப்படு வதுடன், சுகாதார அமைச்சினூடாக ஊக்குவிப்புகளும் வழங்கப்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கட்டாய கருக்கலைப்பை உறுதி செய்யும் வகையிலான சம்பவ மொன்றும் நுவரெலியா மாவட்டத்தின் கந்தப்பளை - கோட்லொட்ஜ் தோட்டத்தில் அண்மையில் பதிவாகியுள்ளது.

நுவரெலியாவில் இருந்து டெங்கு பரிசோதனைக்கு உடல் நல வைத்திய அதிகாரி வருகிறார். அதனால் கடந்த முதலாம் திகதி அனைவரும் கந்தப்பளை கோட்லோட்ஜ் தோட்ட சுகாதார நிலையத்திற்குத் தவறாது சமுகமளிக்க வேண்டும். குறிப்பாக 18 வயதிற்கும் மேற்பட்ட பெண்கள் கட்டாயமாக சமுகமளிக்க வேண்டும் எனக் கடந்த செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி தோட்ட நலன்புரி உத்தியோகத்தரால் கோட்லோட்ஜ் தோட்ட மக்களுக்கு அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த முதலாம் திகதி கோட்லொட்ஜ் தோட்ட சுகாதார நிலையத்திற்கு நுவரெலியாவில் இருந்து உடல் நல வைத்திய அதிகாரி, தோட்ட நலன்புரி உத்தியோகத்தர், குடும்ப நல மருத்துவ மாது ஆகியோர் சென்று, அங்கு வந்த தாய்மார்களுக்கு சிகிச்சையளிப்பதாகக் கூறி கருத்தடை செய் துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் பொலிஸில் முறைப் பாடு செய்ததன் பின்னரே, இந்தச் சட்டவிரோத கருக்கலைப்பு அம்பலமாகியுள்ளது.

மலையகத்தில் இடம்பெறும் இந்தச் சட்டவிரோத கருத்தடை குறித்து மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் லோரன்ஸ் செல்வநாயகம் கருத்து தெரிவிக்கையில்,

"சுகாதார அமைச்சின் ஊக்குவிப்புக்கமைய, தோட்ட நிர்வாகங் களால் மலையகப் பகுதிகளில் திட்டமிட்ட கருக்கலைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நுவரெலியா - கோட்லோட்ஜ் தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்தின் ஊடாகத்தான் இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

மலையகத்தில் இடம்பெறும் இந்தக் கருக்கலைப்பு நடவடிக்கைகளுக்கு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் கால்நடை மற்றும் கிராம சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங் கும் மனித அபிவிருத்தி நிறுவனமும் பங்களிப்புச் செய்கின்றது.

கடந்த 2011ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப் பீட்டில் ஏனைய பிரதேசங்களின் சனத் தொகை வளர்ச்சிவீதம் 1.7வீதமாக இருந்த போது, மலையக சனத் தொகை வளர்ச்சிவீதம் மட்டும் 0.7 வீதமாகக் குறைந்து காணப்பட்டது. மலையகப் பகுதிகளில் பல வருட காலமாக இடம் பெற்றுவரும் சட்டவிரோத கருத்த டையே இதற்குப் பிரதான காரணமா கும். இதனைத் தடுத்து நிறுத்த மலையக அரசியல்வாதிகள், தொழிற் சங்கங்கள், சிவில் அமைப்புகள் என அனை வரும் ஒன்றுபட்டு செயற்பட வேண் டும்" - என்றார்.

இவ்விடயம் தொடர்பில் புதிய தொழிலாளர் முன்னணியின் தலை வர் முரளி ரகுநாதன் கருத்து தெரிவிக்கையில்,

"மலையகத் தோட்டப் பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகளில், கருத் தடை மேற்கொள்வதற்கென தனிப் பிரிவு இயங்கி வருகின்றது. தோட்ட நிர்வாகங்களும் இதற்கான ஒத்துழைப்பை வழங்குகின்றன. மலை யகத் தமிழர்களை இன அழிப்பு செய்யும் நடவடிக் கைகளின் பின்னணியில் எவர் இருக்கிறார் என்பது எதிர்காலத்தில் வெளிப்படும். இது தொடர்பில் மேலும் பல ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்" - என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பொதுநலவாயத்

தொடர்பான கட்சியின் உத்தியோக பூர்வ அறிவிப்பு அடுத்த செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் விடுக்கப்படவுள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் சர்வதேசத் தலைவர்களுக்கு இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் குறித்து தெளிவுபடுத்துவதற்கான ஆவணங்களைத் திரட்டும் நடவடிக்கைகளிலும் கட்சி தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

இதற்கமைய மாத்தறையில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, அரசியல் ரீதியாக திட்டமிட்ட வகையில் பழிவாங்கப்பட்ட சம்பவம் குறித்து விசேட அவதானத்தை செலுத்த ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

இதற்கான பேச்சுகள் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் இடம்பெற்று வருகின்ற நிலையில் கட்சியின் அடுத்த செயற்குழு கூட்டத்தில் இது குறித்து விசேடமாக ஆராயத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, மேற்படி விடயம் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து பொது எதிர்க்கட் சிகளும் பேச்சுகளை நடத்தி வருகின் றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ஙு-சி)

### சீரற்ற

கப்பட்டுள்ளனர் என்றும் இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

அதேவேளை, நாட்டின் தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக ஏராளமானோரின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

குறிப்பாக மலையகப் பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் ஹட்டன் - நுவரெலியா உள்ளிட்ட பகுதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மலையகத்தில் பெய்யும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் நீர்த்தேக்கங்களை அண்டிய பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதே வேளை, வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் தொடர்ச்சியாக கடும் மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஙு-சி)

### அரச

அதன் பின்னர் பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கு அன்றைய தினம் மாலையே அவர்கள் வருகைதரவுள்ளனர். யாழ். பொது நூலகம், கோட்டை என்பவற்றைப் பார்வையிடும் குழுவினர் அன்று இரவு ரில்கோ விடுதியில் இடம்பெறும் கலாசார நிகழ்விலும் பங்குபற்றவுள்ளனர். குறித்த கலாசார நிகழ்வுக்கு வடமாகாண முதலமைச்சரும் அழைக்கப்பட்டுள்ளார்.

மறுநாள் 14 ஆம் திகதி வியாழக்கிழமை நயினாதீவுக்கு வெளிநாட்டு தலைவர்கள் குழுவினர் செல்லவுள்ளனர். அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் அபிவிருத்தி விளக்க செயலமர்வு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து உடுவில் மகளிர் கல்லூரிக்குச் செல்லும் குழுவினர் இறுதியாக தெல்லிப்பழையில் அமைக்கப்பட்டுள்ள இந்திய வீட்டுத் திட்டத்தைப் பார்வையிட்ட பின்னர் பலாலி விமானநிலையம் ஊடாக கொழும்பு திரும்பவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இதேவேளை பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தலைமையிலான குழுவினர் தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலிலேயே வட பகுதிக்கு பயணம் மேற்கொண்டு வரவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

### துயிலும்

கப்பட்டு, அங்கு போராளிகளின் வித்துடல்கள் அடக்கம் செய்யப்பட்டு வந்தன. இறுதிப் போரின் பின்னர் இந்தத் துயிலும் இல்லங்களில் இருந்து போராளிகளின் கல்லறைகளை படையினர் கனரக வாகனங்கள் மூலம் கிளறி அகற்றி இருந்தனர். தற்போது மாவீரர்தினம் நெருங்கும் சூழ்நிலையில் இந்த மாவீரர் துயிலும் இல்லங்களை படைத்தளங்களாக மாற்ற இராணுவத்தினர் எடுத்துள்ள நடவடிக்கையால் ஒரு பதற்றமான சூழல் வன்னிப் பகுதியில் ஏற்பட்டுள்ளது. (ஙு-6-18)

### பந்தாடியது

தந்தையான சூசைப்பிள்ளை யாக்கோப் (வயது - 55) என்ற குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

சைக்கிளில் முதலாம் குறுக்கு வீதியில் வந்தவர் பிரதான வீதியைக் கடக்க முற்பட்டபோது, யாழ்.நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

படுகாயமடைந்தவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளித்த போதும் அது பயனளிக்காது சில நிமிடங்களில் உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

விபத்தையடுத்துபஸ்சாரதி கைது செய்யப்பட்டதோடு, பஸ்ஸும் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட் டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ-4)

### வெடித்தது

காணப்பட்டதால் வெடித்துள்ள பொருள் அதுவாகவும் இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மாதம்பே, சுதுவெல்ல எனும் பிரதேசத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் பழைய இரும்புகளைச் சேமிக்கும் கடையை 20 வயதுடைய இளைஞர் ஒருவர் சுத்தம் செய்து கொண்டிருக் கும் போதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் படுகாயமடைந்த இளைஞர் சிலாபம் வைத்திய சாலையில் அவசர சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. சம்பவம் நடைபெற்ற இடத்தில் இரும்பு உருக்கும் தொழிற்சாலையும் இருப்பதால் எவ்வகையான பொருள் வெடித்துள்ளதென்று இது வரையிலும் உறுதியாகக் கண்டறியப்படவில்லை. இச் சம் பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மாதம்பே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

### தீர்வை

ஐக்கிய மக்கள் கட்சி போன்ற அரசியல் கட்சிகளும் 70 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்க ளும் இதில் கலந்து கொள்ளவுள்ளன.

கொழும்பு அரச மர சந்தியில் வைத்து அரசியல் கட்சிகளும், லேக் ஹவுஸ் சுற்றுவட்டத்தில் சிவில் அமைப்புகளும், கொழும்பு துறைமுக சந்தியில் தொழிற்சங்கங்களும் மும்முனையிலிருந்து மாலை 3 மணிக்கு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்து கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் ஒன்று கூடி தொடரவுள்ளனர்.

அரச மற்றும் தனியார் துறையினருக்கு ரூபா 10 ஆயிரம் சம்பள உயர்வு வழங்கப்படல் வேண்டும், இனப் பிரச்சினைகளுக்கு நிரந்தத் தீர்வு காண வேண்டும் போன்ற கோரிக்கைகளை பிரதானமாக வலியுறுத்தி துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்து பிரசார நட வடிக் கைகளும் அன்றைய தினம் மேற்கொள்ளப் படவிருக்கின்றது.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கணேசலிங்கம் (J.P)

(நல்லூர் தவம் பெயின்ரர்)



மூத்த விநாயகர் வீதி, நல்லூரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கணேசலிங்கம் நேற்று (20.10.20103) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப் பிள்ளை-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் (ராசு) அன்புக் கணவரும், அனுஜாவின் அன்புத் தந்தையும், மனோகரனின் அன்பு மாமனும், உமாசுதனின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2013) திங்கட்கிழமை பி.ப. 4.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூத்த விநாயகர் வீதி, நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்.

### நவசக்தி உதைபந்துத் தொடரில்

# யூட்டின் அதிரடி ஆட்டத்தால் கிண்ணம் சென். மேரிஸ் வசம்





மாங்குளம், ஒக்.21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யூட்டின் அபார ஆட்டத்தால் கிண்ணத்தைச் சுவீகரித்தது நாவாந்துறை சென். மேரிஸ் அணி.

இந்த இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

ஆட்டத்தின் தொடக்கத்திலிருந்தே இரு அணிகளும் மிகச் சிறப்பாக மோதிக் கொண்டன. இருந்தபோதும் முதற்பாதி ஆட்டம் சென். மேரிஸ் அணியின் பக்கமே சாய்ந்திருந்தது. சென். மேரிஸ் அணி வீரர் யூட் 9 ஆவது, 20 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு அசத்தினார்.

இந்தக் கோல்களினால் அதிர்ச்சி அடைந்தது ஞானமுருகன் அணி. பதிலடியாக கோல் அடிக்கும் முயற்சியில் இறங்கி தமது ஆட்ட வேகத்தை அந்த அணி அதிகப்படுத்தியது. இந்த நிலையில் ஞான முருகன் அணி வீரர் பார்த் தீபனுக்கு 23 ஆவது நிமிடத் தில் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. அதன் பின்னர் இரு அணிகளும் மிக வேகமாக விளையாடிய போதும் இடைவேளை வரை 2:0 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணியே முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்ட ம் தொடங்கிய போது ஞானமுருகன் அணியினர் பந்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனால் சென். மேரிஸ் அணியின் கோல் காப்பாளர் அடிக்கடி பந்துகளை தடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் 39 ஆவது நிமிடத்தில் ஞான முருகன் அணியின் வீரர் சயந்தன் முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் அவருக்கும் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.

தொடர்ந்து ஞானமுருகன் அணியினர் 46 ஆவது நிமிடத்தில் வேற்று பிரதேசத்துக்குள் முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்த சென். மேரிஸ் அணிக்கு தண்டனை உதை ஒன்று கிடைத்தது.

ஆனால் அந்த வாய்ப்பை தவறவிட்டது சென்.மேரிஸ் அணி. இதனால் உற்சாகமடைந்தது ஞானமுருகன் அணி. பின்னர் ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது. 48 ஆவது நிமி டத்தில் ஞானமுருகன் அணி வீரர் ஜெகன் ஒரு கோலைப் போட ஆட்டம் மேலும் சூடானது. ஆட்டம் முடிவடைவதற்கு 30 செக்கன் இருந்த போது ஞான முருகன் அணிக்கு நேர் உதை கிடைத்தது. இதனை அந்த அணி கோலாக்க தவறவே, இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

இதில் சம்பியனான சென். மேரிஸ் அணிக்கு 30 ஆயிரம் ரூபா பணமும், வெற்றிக் கேடய மும் வழங்கப்பட்டன. இரண்டாம் இடத்தைப் பெற்ற ஞானமுருகன் அணிக்கு 20 ஆயி ரம் ரூபா பணத்துடன் கேட யமும் வழங்கப்பட்டது.

ஆட்ட நாயகன், தொடர் ஆட்ட நாயகன் எனும் விருதுகளை சென். மேரிஸ் அணி யைச் சேர்ந்த யூட் பெற்றுக்கொண்டார். சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை சென். மேரிஸ் அணியைச் சேர்ந்த அலெக்ஸும், வளர்ந்து வரும் விளையாட்டு வீரராக சென். மேரிஸ் அணியைச் சேர்ந்த ஜனட்டும், இந்த சுற்றுப் போட்டியில் அதிக கோல்களை (14 கோல்கள்) அடித்த வீரருக்கான விருதை சென். மேரிஸ் அணியைச் சேர்ந்த யூட்டும் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கான வெற்றிக் கேடயங்களை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ வழங்கிக் கௌரவித்தார். (ங-23-422)

கரம் இறுதிப்போட்டி

## பல்கலை காமாட்சி மோதல்

வலி. வடக்கு, ஒக் 21

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையும் கரம் ஆண்கள் அணியும் இணைந்து பல்கலைக்கழகபழையமாணவி திருமதி பானுரேகா முரளிதரனின் அனுசரணை யுடன் நடத்தி வருகின்ற அழைக்கப்பட்ட கழகங்களுக் கிடையிலான கரம் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட் டியில் யாழ். பல்கலைக்கழக அணி காமாட்சி விளையாட் டுக்கழக அணியுடன் மோதவுள்ளது.

யாழ்ப்பாணம் பல் கலைக் கழக உடற்கல்வி அலகில் நேற்று சனிக்கிழமை இடம் பெற்ற போட்டிகளில் ஆறு அணிகள் கலந்து கொண்ட போட்டிகள் லீக் முறையில் இடம் பெற்றன.

இதன் பின் நடைபெற்ற முதலாவது அரை இறுதிப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் கே.ஸி.ஸி.ஸி. அணியும் மோதின. இதில் பல்கலைக்கழக அணி 3 ஒற்றையர் ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. ஏற்கனவே இறுதிப் போட்டிக்கு காமாட்சி அணி தெரிவாகி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-86)

## பாடும் மீன் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம் ஒக்21

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட மகிந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டு மைதானத்தில் மின்ஒளியில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியும் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியும் மோதிக் கொண்டன.

இதில் இரு அணியினரும் ஆட்டநேரமுடிவில் தலா 2 கோல்களைபெற்றதினால் ஆட்டத்தில் வெற்றிதோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5சம நிலைதவிப்புஉதைகள் வழங்கப்பட்டன.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகஅணி 5:4 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தை தனதாக்கி கொண்டது.


நாவாந்துறைசென்.மேரிஸ் விளையாட்டுக்கழகஅணிக்கும் யாழ்பல்கலைக்கழகஅணிக்கும் இடையிலானநட்பு ரீதியிலான ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 2:1என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ங- 23)





தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி நடத்திய 15,19 வயதுப் பிரிவுகளுக்கான சதுரங்கப் போட்டியின்போது.... (த-86)

# ஐரோப்பிய பிரீமியர் லீக் முடிவுகள்




ஐரோப்பிய பிரீமியர் லீக் உதை பந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் எட்டு போட்டிகள் இடம் பெற்றன.
அதன் முடிவுகள் வருமாறு.
நியூகாஸ்டல் அணிக்கும் லிவர்பூல் அணிக்கும் இடையிலான போட்டி 2:2 என்ற கோல் கணக்கில் சம நிலையில் நிறைவடைந்தது.
ஆர்சனல் அணி நோர்விச் அணியை 4 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.
செல்சி அணிக்கும், கார்டிப் அணிக்கும் இடையிலான போட்டியில் செல்சி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. எவர்டன் அணி ஹூல் அணியை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.
மன்செஸ்டர் யுனைட்டட் அணிக்கும், சதம்ரன் அணிக்கும் இடையிலான போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சம நிலையில் நிறைவடைந்தது.
ஸ்டொக் மற்றும் வெஸ்ட் புரோம் அணிகளுக்கு இடையிலான போட்டியில் எந்த கோல்களும் பெறப்படவில்லை. ஸ்வான்சி அணி 4:0 என்ற கோல் கணக்கில் சண்டர்லாண்ட் அணியை தோற்கடித்தது. வெஸ்ட் ஹாம் அணியுடனான போட்டியில், மன்செஸ்ட்டர் சிற்றி அணி 1: 3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த)

# இலங்கை பயிற்சியாளராக ஷெப்பல்?

இலங்கை கிரிக்கெட் பிரதான பயிற்சியாளராக ஆஸ்திரேலியாவின் முன்னாள் அணித்தலைவர் கிரேக் ஷெப்பல் நியமிக்கப்படலாம் என்று இலங்கைக் கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்தன.
இலங்கையின் பயிற்சியாளரைத் தெரிவு செய்வதற்கான காலக்கெடு இம்மாதம் இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(த)



# இளம் வீரர்களுக்கு சச்சின் எடுத்துக்காட்டு




கிரிக்கெட்டில் எனது வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருந்தவர் சச்சின் என முன்னாள் அணித் தலைவர் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார்.
இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின், தனது 200 ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற உள்ளார்.
இந்த நிலையில் இந்திய கிரிக்கெட்டுக்கு அவரது பங்களிப்பு குறித்து முன்னாள் அணித் தலைவர் டிராவிட் கூறுகையில், சச்சின் தனக்கென தனி தர முத்திரையை நிர்ணயித்துக் கொண்டு, அதில் இருந்து கொஞ்சமும் கீழே இறங்கி விடாமல் சிறப்பான விளையாட்டை வெளிப்படுத்தியவர்.
கடந்த 24 ஆண்டுகளாக பல கோடி இளம் வீரர்களுக்கு முன்னுதாரண நாயகனாக விளங்கி வருகிறார். நாமும் சிறப்பாக விளையாட வேண்டும் என்ற உத்வேகத்தை என்னுள் விதைத்து தூண்டுகோலாக இருந்தவர்.
அவர் இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து விளையாட வேண்டும் என்பதே எனது விருப்பம். ஆனால், இயற்கை அதற்கு ஒத்துழைக்காது என்பதையும் உணர்ந்துள்ளேன், இதுதான் வாழ்க்கை.
அவரது சாதனைகளைக் கொண்டாடுவதற்கு இது தான் சரியான தருணம். கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும் அவருக்கு சிறப்பான வாழ்க்கை அமைய வாழ்த்துகிறேன்.
எஞ்சியுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் அவர் எந்த

எஞ்சியுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் அவர் எந்த வித நெருக்கடியும் இல்லாமல் அனுபவித்து விளையாட வேண்டும்.

வித நெருக்கடியும் இல்லாமல் அனுபவித்து விளையாட வேண்டும். அவரது குடும்பத்தினருக்கும் இது அற்புதமான அனுபவமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

(த)

# பாகிஸ்தான் அணியில் யூனிஸ்கான் நீக்கம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணியில் இருந்து மூத்த வீரர் யூனிஸ் கான் நீக்கப்பட்டார்.
ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ள பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகள் ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.
இவ்விரு அணிகள் மோதும் முதல் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி சார்ஜாவில் நடக்கிறது. இத்தொடருக்கான 16 பேர் கொண்ட வீரர்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்தது.
இதில் மூத்த வீரர் யூனிஸ் கான் நீக்கப்பட்டார். இவர் கடைசியாக தென்னாபிரிக்காவில் நடந்த ஒருநாள் தொடரில் விளையாடினார்.
இங்கிலாந்தில் நடந்த சம்பியன்ஸ்கிண்ணத் தொடருக்கு பின் அணியில் இடம் கிடைக்காமல் தவிக்கும் சொய்ப் மாலிக், கம்ரான் அக்மல் ஆகியோருக்கும் இடம் கிடைக்கவில்லை.
டெஸ்ட் தொடரில் தெரிவு செய்யப்பட்ட ஜுல்பிகர் பாபர், மன்சூர், மசோத் ஆகியோர் ஒருநாள் தொடருக்கு தெரிவு செய்யப்படவில்லை.
டெஸ்ட் தொடருக்கு புறக்கணிக்கப்பட்ட சகலதுறை வீரர் முகமது ஹபீஸ் இடம் பிடித்துள்ளார். அப்ரிடி, முகமது இர்பான், ஜுனைட்கான், வாகாப் ரியாஸ், சொகைல் தன்வீர் ஆகியோர் தங்களது




இடத்தை தக்கவைத்துக் கொண்டனர்.
அணி விவரம்: மிஸ்பா (அணித்தலைவர்), அகமது ஷேசாத், நாசிர் ஜாம்ஷெத், முகமது ஹபீஸ், ஆசாத் ஷபிக், உமர் அக்மல், உமர் அமின், மசோத், சர்பராஸ் அகமது, அப்ரிடி, அப்துல் ரஹ்மான், சயீத் அஜ்மல், முகமது இர்பான், ஜுனைட் கான், வகாப் ரியாஸ், சொகைல் தன்வீர்.

(த)

# பந்துவீச்சாளர்களால் கடுப்பாகி போன டோனி


இந்திய பந்துவீச்சாளர்களின் மோசமான ஆட்டத்தால் ஆஸ்திரேலியா வெற்றிக் கனியைத் தட்டிச் சென்றது.
நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது ஒருநாள் போட்டியில் 4 இலக்கு வித்தியாசத்தில் ஆஸ்திரேலிய அணி இந்தியாவைத் தோற்கடித்தது.
இந்நிலையில் தோல்வி குறித்து அணித்தலைவர் டோனி கூறுகையில், கடைசிப் பந்துப் பரிமாற்றங்கள் நமக்குப் பெரும் ஏமாற்றமாக அமைந்து விட்டன.
அதுதான் கவலைக்குரியதாக ஆரம்பத்திலிருந்தே இருந்தது. நேற்றுமுன்தினம் மேலும் மோசமடைந்து விட்டது.
நேற்று முன்தினம் பனி இருந்தது என்றாலும், கடைசிப் போட்டியில் இருந்தது போல அதிகம் இல்லை.



பந்து வீச்சாளர்கள் பந்து வீச வரும்போது சிந்தனையுடனும், திட்டத்துடனும் வர வேண்டும். தங்களது பலத்தை உணர்ந்து பந்து வீச வேண்டும்.
இது சர்வதேசப் போட்டி, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை கரண்டியில் வைத்து வாயில் ஊட்டி விடத் தேவையில்லை. திட்டமிட்டு அவர்கள் செயல்பட்டிருக்க வேண்டும் என தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

(த)

# அவசரமாக நாடு திரும்பிய அம்லா



தென்னாபிரிக்காவின் அம்லா அவசரமாக நாடு திரும்பியுள்ளதால், அடுத்த போட்டியில் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ள பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகள் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி டுபாயில் தொடங்குகிறது.

இந்நிலையில் தன் மனைவிக்கு இரண்டாவது குழந்தை பிறக்கவுள்ளதால்- அம்லா சொந்த நாட்டுக்குத் திரும்பினார்.

இதனால் டுபாய் டெஸ்டில் இவர் பங்கேற்பது சந்தேகம் தான். இவருக்கு பதில் மாற்று வீரரை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை இன்னும் அறிவிக்கவில்லை.

இது குறித்து சபை வெளியிட்ட செய்தியில், நாடு திரும்பியுள்ள அம்லா, டுபாய் டெஸ்டில் விளையாடுவாரா என உறுதியாகத் தெரிய வில்லை. எனவே மாற்று வீரரைத் தெரிவு செய்யவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# தொடர்கிறது சோதனை



அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளஉலகக் கிண்ண உதை பந்தாட்டத் தொடருக்கு இங்கிலாந்து அணி தெரிவாகியுள்ள போதும், முன்னிலை அணிகளுள் உள்ளடக்கப்படவில்லை.

தரவரிசையில் 17 ஆவது இடத்தில் இருந்து இங்கிலாந்து, போலந்துடனான வெற்றியைத் தொடர்ந்து 10ஆம் இடத்துக்கு முன்னேறியது.

எனினும் உலகக் கிண்ண தொடரின் முதல் ஏழு அணிகளுக்குள் இடம்பெறாத நிலையில், இங்கிலாந்து தொடரில் கடுமையான போட்டிகளை சந்திக்க வேண்டி ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சங்வானுக்கு தடை




தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்படுத்திய டில்லி வீரர் பிரதீப் சங்வானுக்கு, 18 மாதத்துக்கு கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளத் தடை விதிக்கப்பட்டது.

டில்லி அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரதீப் சங்வான் (வயது22)கடந்த 2008 இல் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், இந்திய அணியின் வெற்றிக்கு உதவியவர். டில்லி அணிக்காக 38 முதல்தர போட்டிகளில், 123 இலக்குகளை வீழ்த்தியுள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில், கொல்கத்தா அணிக்காக விளையாடினார்.6 ஆவது ஐ.பி.எல். தொடரில் நடத்தப்பட்ட சோதனையில், சங்வான் ஸ்டானோஜோலல்' என்ற ஊக்கமருந்து பயன்படுத்திய விடயம் உறுதியானது.

உடலிலுள்ள தேவையற்ற கொழுப்புகளை நீக்க, ஜிம்' பயிற்சியாளர் பரிந்துரையின் பேரிலேயே இதைத் தவறுதலாக பயன்படுத்தியாக சங்வான் தெரிவித்தார். இருப்பினும், இவருக்கு 18 மாதம் தடை விதிக்கப்படுவதாக, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ..) அறிவித்துள்ளது. (ங)

# இஷாந்துக்கு இடம் கிடைத்தது



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மீதமுள்ள 4 ஒருநாள் போட்டிகளிலும் பங்கேற்கும் இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இதனையடுத்து மூன்றாவது ஒருநாள் போட்டியில் பந்துவீச்சில் சொதப்பிய இஷாந்த் சர்மா, தனது இடத்தை தக்க வைத்துக் கொண்டார்.

இந்தியாவுக்கு பயணம் செய்துள்ள ஆஸ்திரேலிய அணி, ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று வருகிறது. முதல் மூன்று போட்டிகளின் முடிவில், ஆஸ்திரேலியா 2-1 என முன்னிலை வகிக்கிறது. இன்னும் 4 போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில் , இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் இந்திய வீரர்களின் விவரம் நேற்று அறிவிக்கப்பட்டது.

இதில் மொகாலியில் நடந்த மூன்றாவது போட்டியில் ஒரே பந்துப்பரிமாற்றத்தில் 30 ஓட்டங்களை வழங்கி, தோல்விக்கு வித்திட்ட வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மாவுக்கு இடம் கிடைக்காது என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், முதல் மூன்று போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட அதே வீரர்களே, மீதமுள்ள நான்கு போட்டியிலும் விளையாடுவார்கள் என, பி.சி.சி.ஐ., தேர்வுக்குழு அறிவித்தது. இதனையடுத்து இஷாந்த் சர்மா தனது இடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

அணி விவரம்: டோனி (அணித்தலைவர்), ஷிகர் தவான், ரோகித் சர்மா, விராட் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், ரவிந்திர ஜடேஜா, அஷ்வின், புவனேஷ்வர் குமார், இஷாந்த் சர்மா, வினய் குமார், அமித் மிஸ்ரா, அம்பதி ராயுடு, முகமது ஷமி, ஜெயதேவ் உனத்கத்.

(ங)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர்,தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 26.10.2013 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. மாலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00(இடமில்லை)
வாரநாள் (செவ்வாய்,வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் 24.10.2013
1. காலை 09.00-11.00 2. காலை 11.00-01.00
குறிப்பு: பயிற்சியில் இணைந்துகொள்ள அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை
SAAMSON Language School
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

மணல் விற்பனைக்கு
கட்டட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் மண் விற்பனைக்கு உண்டு.
4 ½ ரக்ரர் 19, 000/=
தொடர்பு : கண்ணா
077 6766499, 0777 590792
(33173)(7.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் [illegible].10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.